KALKI
18.6.2006 ரூ.8.00
80 பக்கங்கள்

கல்கி

குடும்பத்துடன் களிக்க...





"பா.ம.க.வுக்கு முதுகெலும்பு இல்லை!"

உங்கள் குடும்பத்துக்காக என்றால்!
எப்போதெல்லாம் வாய்ப்பிருக்கிறதோ
அப்போதெல்லாம் உயர்ந்த தரத்தைத்
தானே தேர்ந்தெடுக்கிறீர்கள்?
ஏனென்றால் உங்கள் குடும்பத்துக்கு
எப்போதும் சிறந்தது மட்டுமே தேவை!

எந்த விதமான மாசுப்
பொருட்களும் இருக்கக்கூடாது என்றால்!
மற்ற சர்க்கரைகளைப் போல்
இல்லாமல், பாரீஸ் ப்யூர் ரிஃபைன்டு
சர்க்கரை மிக உன்னதமான சிறப்பான
முறைகளின் மூலம்
சுத்திகரிக்கப்படுகிறது!

நல்ல விலை கொடுத்து ஒரு பொருளை ஏன் வாங்குகிறீர்கள்?

உங்களால் அதற்கான
வித்தியாசத்தை கண்கூடாகப்
பார்க்க முடிந்தால்!
பாரீஸ் ப்யூர் ரிஃபைன்டு சர்க்கரை
கறையில்லாமல் தூய்மையாக
ஜொலிப்பதை பார்க்க முடியுமே!

எதுவும் எப்போதுமே ஃப்ரெஷ்ஷாக
இருக்க வேண்டுமென்றால்!
பாரீஸ் ப்யூர் ரிஃபைன்டு சர்க்கரை
மிகத் தூய்மையாகப் பேக்
செய்யப்பட்டிருப்பதால் நீங்கள்
திறக்கும் போதும் ஃப்ரெஷ்ஷாய்,
தூய்மையாய் இருக்கும்!



பாரீஸ் ப்யூர் ரிஃபைன்டு சர்க்கரை
தூய்மையானது, இனிமையானது.
குழந்தைகள் பேசுவதைப் போலவே.



தூய்மை! இனிமை!!



ஜெர்ரி

இவ்வளவு நாளா கமலோடு சேர்ந்து ஜுகல்பந்தி நடத்திட்டிருந்த கிரேஸி மோகன், தனி ஆவர்த்தனம் செய்ய வந்திருக்கிற படம்தான் ஜெர்ரி.

கல்லூரி மாணவரான ரமேஷ், நண்பர்கள்கிட்ட பெட் கட்டி மூன்று பெண்களைக் காதலிக்கறது தான் கதை. படத்தோட பிரதான கதாபாத்திரங்களுக்கு 'ஜே' வரிசையில் பெயர் வைச்ச கிரேஸி மோகன் (கதை - திரைக்கதை-வசனம்), கொஞ்சம் மூளையையும் சேர்த்து வைச்சிருக்கலாம்.

நகைச்சுவைக்கான அருமையான கதைக்களம் இருந்தும் இயக்குநர் காந்தன் தடுமாறினது ஆச்சர்யம். சினிமாவுக்குண்டான காட்சிகளை அமைக்காம ஒரு நாடகம் போல படம் பண்ணினது ஏமாற்றம் தான்.

குருவி தலையில பனங்காய் வைச்ச மாதிரி ரமேஷுக்கு காமெடியில டைமிங் ஏராளமா பிசகுது. ஒரு சர்வ சாதாரண காலேஜ் ஸ்டூடண்டான ரமேஷை போலீஸ், நடிகை, காலேஜ் ஸ்டூடண்ட்னு மூணு பெண்கள் மாய்ஞ்சு மாய்ஞ்சு காதலிக்கிறதுக்கான காரணம் ஒண்ணுமேயில்லை.

இன்ஸ்பெக்டர் மீரா வாசுதேவனுக்கு ரமேஷ் கட்அவுட் வைச்சு அவங்களை வெக்கப்பட வைக்கிற காட்சி அழகு. மூணு பெண்களோட குடும்பமும் தனித்தனியா ரமேஷ் வீட்டுக்கு வந்து சம்பந்தம் பேசறது நாடகத்தனமா இருந்தாலும் வாய் விட்டுச் சிரிக்க முடியுது. மும்தாஜ் வீட்டுல நடக்குற இன்கம்டாக்ஸ் ரைடும் கலகல. ஆனா இதுபோன்ற சொற்ப காமெடிக் காட்சிகள் போதுமா கிரேஸி மோகன் படத்துக்கு?

சம்பந்தமேயில்லாத 'காக்க காக்க' படப்பாணியில சில காட்சிகளை எடிட் செஞ்சிருக்கறது நல்ல காமெடி. இசை படத்தைப் போலவே சுமார். காமெடி படத்துக்கு ரொம்ப மெனக்கெட வேண்டாம்னு நினைச்சிருக்கு டெக்னிக்கல் குழு. ரசிகர்களைச் சிரிக்க வைக்க இன்னும் சீரியஸா முயற்சி செஞ்சிருக்கலாம்.

- லஜ்ஜாவதி

வட்டமேஜை



நெஞ்சைத் தொட்டவள்!

பெரும்பாலான அரசுப் பள்ளிகளில் ஏழைகளும், பின்தங்கிய மக்களுமே கல்வி பயில்கின்றனர். அங்கெல்லாம் இட ஒதுக்கீடு மூலம் வேலைவாய்ப்பைப் பெற்று பணியில் சேர்ந்த ஆசிரியர்கள் சிறப்பான முறையில் பணியாற்றினால் மாணவர்களுக்கு இட ஒதுக்கீடுக்கான அவசியமே ஏற்படாது.

பல்லாவரம், ஆர்.நாகராஜன்

இன்றைய அர்த்தமற்ற இட ஒதுக்கீடு யாருக்குப் பயனளிக்கிறது? மந்திரி, எம்.எல்.ஏ., டாக்டர், இன்ஜினீயர், வங்கி அதிகாரி, தொழிலதிபர் ஆகிய மேல் தட்டினர் மட்டுமே பயன்பெற்று வருகிறார்கள். இந்த முன்னேறிய நந்திகள் மறைத்துக் கொண்டிருக்கும் வரை ஏழை நந்தன்களுக்கு இட ஒதுக்கீடு தரிசனம் எப்படிக் கிட்டும்?

திருநெல்வேலி, வெ.கல்யாணி

'சுயநல அரசியலுக்கு அப்பாற்பட்ட ஆழ்ந்த சிந்தனை தேவை' என்ற தலையங்கத்தின் கடைசி வரிகள் நாட்டுப் பற்று உள்ள எல்லோரையும் யோசிக்க வைக்கும்!

திருநெல்வேலி டவுன், எம்.வெங்கடேஸ்வரன்

சீதாரவியின் கவித்துவமான தமிழ் நடை நிமிர்ந்து உட்கார வைத்தது. 'செண்பகம்' நெஞ்சைத் தொட்டுவிட்டாள்!

மேலகிருஷ்ணன்புதூர், பிரபாலிங்கேஷ்

'கல்கி'யில் வரும் கதைகள், கட்டுரைகள், துணுக்குகள், ஜோக்குகள், கேள்வி-பதில் என எல்லாமே சும்மா 'நச்'னு இருக்குங்க!

காயல்பட்டினம், க.மீ.நஜ்முதீன்

மறைந்த அறநிலையத்துறை அமைச்சர் பி.டி..ஆர்.பழனிவேல்ராஜன் பற்றி செய்தித்துறை அமைச்சர் பரிதி இளம் வழுதி கூறிய நினைவலைகள் கண்ணீரை வரவழைப்பதாக அமைந்திருந்தது.

மதுரை - 16, ஆர்.லட்சுமி

அடித்தட்டு மக்களின் முன்னேற்றத்துக்கான படிக்கட்டுகளை அமைப்பதற்கு அவர்களைத் தவிர, வேறு யாரும் முன்வரமாட்டார்கள் என்பதை 'பறை' சிறுகதை மிக நன்றாகவே பறைசாற்றியுள்ளது.

நெல்லை, செ.சத்தியசீலன்

'சினிமாவிலிருந்து யார் அரசியலுக்கு வந்தாலும் எதிர்ப்போம்' என இயக்குநர்

ஸ்வீட் போஸ்ட்!

கணபதி ஸ்தபதியின் ஆதங்கத்தை அறிந்து விக்கித்துப் போனேன்.

- கூத்தப்பாக்கம், 'வானவில்' மூர்த்தி

'**த**மிழக அரசியல் பார்வையாளர்களின் எதிர்பார்ப்புகளை என் பக்கம் திருப்பிய வகையில் வெற்றி பெற்றதாகவே உணர்கிறேன்' என்ற சல்மாவின் வார்த்தை முற்றிலும் உண்மை.

- இரா. முனீஸ்வரசர்மா, கடலூர்

நாஞ்சிலாரின் பேட்டி. அ.தி.மு.க தலைமைக்கு நெருடலை ஏற்படுத்தக் கூடியது. மொத்தத்தில் சம்பத். வைகோ மடியில் கட்டிய பூனை.

- இரா.சாந்தகுமார், சென்னை

அசல் - நகல் எப்படி தேடிப்பிடித்து போட்டீங்க! ரங்கநாதனும் இராம.கவிமணியும் கலைஞர், சுகி.சிவத்தைப் போலவே இருக்கிறார்களே!

- வே. முருகேசன், ஆதம்பாக்கம்

சீமான் கூறுவது அவரது முதிர்ச்சியின்மையையே காட்டுகிறது.

மே.புதூர், ஆர்.கே.லிங்கேசன்

குழந்தையின்மைக்கான நவீன சிகிச்சைகள், இயற்கையும் அறிவியலும் ஒன்றிணைந்துவிட்டதற்கான சான்று!

சென்னை-73, கே.வி.ராமன்

'**வி**லகி நிற்கும் வெற்றி' என்று தோல்விக்கு புது விளக்கம் அளித்துள்ள நெடுமாறன் பாராட்டுக்குரிய சிந்தனையாளர்!

விருதுநகர், சு.முருகேசமணி

ராமதாஸும் கலைஞரும் தங்கள் மக்கள் பிரதிநிதிகளின் எண்ணிக்கையைக் காட்டி 27% இடஒதுக்கீட்டைப் பெற்றிருப்பது சரியல்ல என்றால், உண்ணாவிரதம், வேலைநிறுத்தம் என்ற பெயரில் மத்திய அரசை அந்தச் சட்டத்தை வாபஸ் வாங்கச் சொல்லி மிரட்டுவது சரியா?

- எம்.சிவகுருநாதன், தஞ்சை

கல்கி

ஒவ்வொரு இதழும் உங்கள் பேழைக்கு

பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டிற்காக பரதன் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடுபவர் :
லக்ஷ்மி நடராஜன்

கல்கி பில்டிங்க்ஸ்,
47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

ஆசிரியர் :
சீதா ரவி

உதவி ஆசிரியர் :
மு.மாறன்

வடிவமைப்பு :
எஸ். ஸ்டீஃபன்
பி.ஆர். ராஜன்
ச. கார்த்திகேயன்

தொலைபேசி :
2225 1522, 2225 0623,
2225 1324

தொலைநகல் :
044 - 22251021

மின்னஞ்சல் :
ஆசிரியர் குழு :
kalki@kalkiweekly.com
சந்தா பிரிவு :
subscription@kalkiweekly.com
பிற தகவல்களுக்கு :
info@kalkiweekly.com
கல்கி இண்டர்நெட் முகவரி :
www.kalkionline.com

சந்தா விவரம் :
உள்நாடு :
ஒரு வருடம் : ரூ.440/-
ஆறு மாதம் : ரூ.220/-
வெளிநாடு (விமானத்தபால்) :
ஒரு வருடம் : 65 யு.எஸ். டாலர்

Bharathan Publications Private Limited,
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 032.

திருதிரு பேட்டிகளுக்குச் சொந்தக்காரர் விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பின் பொதுச் செயலாளர் திருமாவளவன். இந்தப் பேட்டியிலும் சட்டசபை தேர்தல் முடிவுகள், தமிழ்ப் பாதுகாப்பு இயக்கம், விஜயகாந்த் குறித்தெல்லாம் தீயாய் முழங்குகிறார்...

கடந்த பத்து வருடங்களில் உங்களால் வெறும் இரண்டு எம்.எல்.ஏக்களை மட்டுமே பெற முடிந்திருக்கிறது. இந்த வளர்ச்சி போதுமானதா?

"நாங்கள் அங்குலம் அங்குலமாக வளர்ந்தாலும் அழுத்தந்திருத்தமாக, தனித்தன்மையை இழக்காமல் வளர்ந்து வருகிறோம். சென்ற முறை தி.மு.கவின் சின்னத்தில் வெற்றி பெற்றதால், அந்த கட்சியின் கடைசி உறுப்பினராக நான் செயல்பட முடிந்ததே தவிர, எங்களுடைய உணர்வுகளைச் சுதந்திரமாக வெளிப்படுத்த முடியவில்லை. ஆனால் இந்த முறை சுயேட்சை சின்னத்தில் வெற்றி பெற்றுள்ளதால் எங்களுடைய சுதந்திரத்தில் யாரும் தலையிட முடியாது. ஆகவே, இது படிப் படியான வளர்ச்சி."

அ.தி.மு.கவுடன் கூட்டணியில் இருக்கிறோம் என்பதற்காக தொட்டதுக்கெல்லாம் சட்டசபையில் வெளிநடப்பு செய்கிறீர்கள். இது எப்படித் தனித்தன்மையாகும்?

"அ.தி.மு.க எடுத்த முடிவுகளை எல்லாம் நாங்கள் வாயை மூடிக்கொண்டு, அப்படியே பின்பற்றவில்லை. ஒட்டு மொத்தமாக 60 பேரை தற்காலிக நீக்கம் செய்திருக்கிறார் சபாநாயகர். இது தவறு. பிரதான எதிர்கட்சியே இல்லாமல் சபையை நடத்துவது கோழைத்தனம் என்று நாங்கள் உள்ளேயிருந்து வாதாடினோம். நாங்கள் எடுத்து வைத்த வாதத்துக்கு பேரவைத் தலைவர் ஒத்துழைக்க மறுத்ததால் நாங்கள் வெளிநடப்பு செய்தோம். கடைசி இரண்டு நாட்கள் புறக்கணிப்பும் செய்தோம். எங்களுக்காக வெளிநடப்பு செய்யுங்கள் என்று அ.தி.மு.க. வலியுறுத்தியிருந்தால் நீங்கள் சொல்வதை ஏற்றுக் கொள்ளலாம். இவையெல்லாம் தனித்தன்மையுடன் சொந்தமாக நாங்கள் எடுத்த முடிவு தான்."

அ.தி.மு.கவுடன் நீங்கள் கூட்டணி அமைத்தது உங்கள் அடிப்படைக் கொள்கைக்கு விரோதமானது இல்லையா?

"தேர்தல் கூட்டணியை கொள்கையோடும், சித்தாந்தத்தோடும் இணைத்துக் குழப்பிக் கொள்ளக் கூடாது. தேர்தல் என்பது அரசியல் அதிகாரத்துக்கான போட்டிக் களம். இது



முழுக்க முழுக்க அதிகாரத்துக்கான போட்டி. இந்தக் களத்தில் பணியாற்ற போடப்படும் இடைக்கால ஒப்பந்தம்தான் கூட்டணி. தேர்தல் அரசியலையும் கொள்கை அரசியலையும் முடிச்சுப் போட்டுப் பார்க்கக் கூடாது.

ஆக, பதவிக்காக விடுதலைச் சிறுத்தைகள் எந்தவித சமரசத்துக்கும் தயாராகிவிட்டது என்று சொல்லலாமா?

"ஒரு வகையில் இது சமரசம்தான். அதை நான் மறுக்கவில்லை. எங்கள் கொள்கைகளில் அ.தி.மு.க தலையிட முடியாது. அவர்களுடைய கொள்கைகளில் நாங்கள் தலையிட முடியாது என்ற அடிப்படைப் புரிதலுடன் ஏற்படுத்தப்பட்ட தேர்தல் உடன்பாடுதான் அ.தி.மு.கவுடனான எங்கள் கூட்டணி."



"பா.ம.க.வுக்கு முதுகெலும்பு இல்லை!"

இப்படியெல்லாம் பேசி அ.தி.மு.கவுடன் அணி சேர்ந்தாலும் உங்கள் கூட்டணி தோல்வியைத்தானே சந்தித்தது...?

"எங்கள் கூட்டணியில் ஒருங்கிணைப்பு தேவையான அளவுக்கு இல்லை. அ.தி.மு.க., ம.தி.மு.க., விடுதலைச் சிறுத்தைகள் மூவரும் இணைந்து கூட்டு முயற்சியோடு செயல்படவில்லை என்பது நாங்கள் களத்தில் கண்ட உண்மை. போதிய அளவுக்குப் பொருளாதார வசதிகளும் செய்யப்படவில்லை. இவைதான் எங்கள் தோல்விக்குக் காரணமே தவிர, ஊடகங்கள் சொல்வதுபோல விஜயகாந்தோ, கலர் டீ.வியோ, ரெண்டு ரூபாய் அரிசியோ அல்ல."

உறங்கிக் கொண்டிருக்கும் தமிழ் பாதுகாப்பு இயக்கம் மீண்டும் செயல்பட ஆரம்பிக்குமா?

"தமிழ்ப் பாதுகாப்பு இயக்கம் என்பது பா.ம.கவும் நாங்களும் மட்டுமே இடம் பெற்றுள்ள இயக்கம் அல்ல. தமிழ் அறிஞர்கள், தமிழ் உணர்வாளர்கள் பலரால் நடத்தப்படும் இயக்கம். இடையில் தேர்தல் வந்துவிட்டதால் அதன் பணிகள் சற்றே தள்ளிவைக்கப்பட்டிருக்கின்றன. தேவையான சூழலில் அதே வீரியத்துடன் மீண்டும் இயங்கத் தொடங்கும்."

பா.ம.கவுடன் இணைந்து அந்த இயக்கத்தில் செயல்பட அ.தி.மு.க அனுமதிக்குமா?

—திருமாவளவன் திகுதிகு



"அ.தி.மு.க எங்களுடன் இருப்பதால் எங்களுக்குள்ள மற்ற உறவுகளை நறுக்கிக் கொள்ளப்போவதில்லை. எந்த அமைப்புகளோடு அ.தி.மு.க உறவு வைத்திருந்தாலும் நாங்கள் அதைத் தடுக்கப் போவதில்லை. அதேபோல நாங்கள் சுதந்திரமாக இயங்குவதில் அ.தி.மு.க தலையிடாது. தமிழ்ப் பாதுகாப்பு இயக்கப் பணிகளுக்காக பா.ம.கவுடன் இணைந்து செயல்படுவதற்கும் அ.தி.மு.கவுடனான கூட்டணிக்கும் தொடர்பில்லை."

நீங்கள் கடுமையாக விமர்சித்த விஜயகாந்தின் வெற்றி பற்றி...?

"அவருடைய வரவால் எங்களுக்கு எந்தவித சேதாரமும் இல்லை. ஊடகங்களால் தூக்கி நிறுத்தப்படும் ஒரு மாயைதான் விஜயகாந்த். ஊழலை ஒழிப்போம் என்கிறாரே... அவர் போட்டியிட்ட 232 தொகுதிகளுக்கும் எவ்வளவு செலவு செய்தார், எங்கிருந்து பணம் கிடைத்தது என்பதை மக்களுக்கு அறிக்கையாக அவரால் தரமுடியுமா? அவருடைய சம்பளமாக ஐந்து கோடிக்கும் மேல் வாங்குவதாக நான் கேள்விப்படுகிறேன். உழைப்பைவிட பல மடங்கு சம்பளம் அதிகமாக வாங்குவதுதான் லஞ்சம். அதுவும் படத்தில் நடிப்பதற்கு முன்பே முன்பணமாக வாங்கிக் கொள்கிறார். இதுதான் மிகப்பெரிய ஊழல். இப்படிப்பட்ட லஞ்சத்துக்கும், ஊழலுக்கும் இடம் கொடுக்கும் துறை சினிமாத்துறை. திரைப்படத் துறையில் இருந்து வந்தவர்களுக்கு ஊக்கமளித்து மீண்டும் சினிமா மாயையில் மக்கள் சிக்கிக் கொள்வார்களோ என்ற அச்சம் எழுந்திருக்கிறது."

தமிழக அரசு நீடிக்குமா?

"கூட்டணி ஆட்சி என்று மக்களைச் சந்தித்துவிட்டு இன்று சிறுபான்மை அரசை நடத்திக்கொண்டு, காங்கிரஸ், பா.ம.க போன்ற கட்சிகளை ஏமாற்றி வருகிறார் கலைஞர். அமைச்சரவையில் இடம் கொடுங்கள் என்று அவருக்கு நெருக்கடி கொடுக்க பா.ம.கவுக்கு முதுகெலும்பு இல்லை; துணிவு இல்லை; திராணி இல்லை. ஆகவே, எப்படியாவது தட்டுத் தடுமாறி ஓட்டிவிடுவார் கலைஞர்."

கண்ணகிக்கு மீண்டும் சிலை அமைக்கப்பட்டுள்ளதே...

"கண்ணகிக்கு சிலை வைப்பது அவளுடைய போர்க் குணத்துக்காகவா அல்லது கற்புக்காகவா? கலைஞர் கண்ணகியை கற்பின் அடையாளம் என்கிறார். அப்படி என்றால் மாதவி, நளாயினி, அருந்ததி, மணிமேகலை எல்லாம் யார்? அவர்களுக்கும் சிலை வைக்கப்போகிறாரா? கண்ணகி என்பவள் கற்பின் அடையாளமும் அல்ல. தமிழர்களின் பண்பாட்டு அடையாளமும் அல்ல. போர்க்குணத்தின் அடையாளம். கற்புக்காக என்று சொல்லி சிலை வைத்திருப்பது மற்ற பெண்களைக் கொச்சைப் படுத்துவது போல."

அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராகலாம் அறிவிப்பு குறித்து என்ன சொல்கிறீர்கள்?

"அனைத்துச் சாதியினரும் அனைத்து கோயில்களுக்கும் சென்று அர்ச்சனை செய்ய வேண்டும். ஆனால் இந்தச் சட்டத்தின்படி இந்து அறநிலையத்துறைக்குச் சொந்தமான கோயில்களில் மட்டுமே அர்ச்சனை செய்ய முடியும். ஆகவே, அறநிலையத்துறைக்குச் சொந்தமில்லாத அனைத்துக் கோயில்களுக்கும் சென்று அர்ச்சனை செய்யலாம் என்ற அளவில் சட்டம் இருக்க வேண்டும் என்பதுதான் எங்களது கோரிக்கை."


- ஆர். முத்துக்குமார்

‘நாங்கள் ஒழுக்கசீலர்கள், உத்தமபுருஷர்கள், கண்ணியவான்கள், கட்டுப்பாடு காப்பவர்கள். கலாசார தேசியத்துக்குக் கால்கோள் போட்டவர்கள்'' என்றெல்லாம் பெருமைப்பட்டுக்கொண்ட பா.ஜ.க தலைவர்கள் இன்று அதிர்ந்து போய் நிற்கிறார்கள். கட்சியோ, நெல்லிக்காய் மூட்டைபோல சிதறும் நிலை. பிரமோத் மகாஜனின் அகால மரணம், அது ஏற்படுத்திய மர்மப் பரபரப்பு, அந்தப் பரபரப்பு அடங்குமுன்னரே போதை மருந்து வழக்கில் மாட்டிய அவர் மகன் ராகுல் மகாஜன் மற்றும் மகாஜனின் செயலாளர் விவேக் மொய்த்ராவின் சந்தேக மரணம் என்று மகாஜன் என்ற தனிப்பட்ட நபரின் குடும்பத்தில் நடக்கும் குழப்பங்கள், கட்சியின் இமேஜில் கடுமையான ஓட்டையை உண்டாக்கியிருக்கின்றன. கடந்த பாராளுமன்ற தேர்தலுக்குப் பிறகு பார்த்தால் கட்சியில் நடந்துள்ள தடுமாற்றங்களும், திருப்பங்களும், கட்டுப்பாடு மீறலும், ஒழுங்கீனமும் பா.ஜ.க.வின் தினசரி நடப்புகளாகி விட்டனவோ என்று எண்ண வைக்கின்றன.

* வாஜ்பாய்



* அத்வானி



கேள்வி கேட்பதற்குப் பணம் வாங்கிய பாராளுமன்ற உறுப்பினர்களில் அரை டஜனுக்கு மேற்பட்டவர்கள் பா.ஜ.க.வினர்தான். அதேபோல கொடுத்த தொகுதி நிதியைச் சுருட்டிக் கொண்டதாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளவர்களில் பெரும்பாலோர் பா.ஜ.க.வினர்தான். கட்சியின் மூத்த தலைவர்களை டெலிவிஷன் கேமராக்கள் படம்பிடிக்க, நேரடியாகவே விமர்சித்துவிட்டு நடையைக் கட்டி தனிக்கட்சி துவங்கிவிட்டார் உமா பாரதி. ஜின்னாவுக்குப் போர்வை போர்த்திய அத்வானியைத் துரத்தியது ஆர்.எஸ்.எஸ். இதன் விளைவாக மக்களிடம் செல்வாக்கு பெறாத ஒரு தலைமை கட்சிக்குப் பொறுப்பேற்றது. சஞ்சய் ஜோஷி என்ற ஒரு செயலாளர் ஆபாச சர்ச்சையில் மாட்டிக் கொண்டார். சி.டிக்கள் விநியோகிக்கப்பட்டன. மதன்லால் குரானா விரட்டியடிக்கப்பட்டார். ஜார்கண்ட் பிரபுலால் மிராண்டி கட்சியை மிரட்டினார். ரத யாத்திரையைத் துவங்கிய ராஜ்நாத்தும், அத்வானியும் மக்கள் ஆதரவு இல்லாததால் டல்லடித்துப் போனார்கள். மகாஜனின் மரணத்தைக் காரணம் காட்டி யாத்திரையை ‘அம்போ' என்று கைவிட்டு ஜூட் விட்டார்கள். மாநிலங்களில் நடந்த சட்டமன்ற தேர்தல்களில் எதிர்பார்த்த வெற்றியும் கட்சிக்குக் கிடைக்கவில்லை. இந்தச் சூழலில்தான் மகாஜன் கொலை; அதைத் தொடர்ந்து இப்போதைய சர்ச்சை. ஆறு வருடம் நாட்டின் தலைமை பொறுப்பேற்று நடத்திய கட்சி, இன்று தடுமாறி

• பிரமோத் மகாஜன்




நிற்கிறது.

பிரமோத் மகாஜன் பா.ஜ.க மாணவர் சங்க உறுப்பினராக அரசியல் வாழ்க்கையைத் தொடங்கினார். மகாராஷ்டிரா மாநிலத்தில், கட்சியில் மகாஜனின் வளர்ச்சி கண்டு பலருக்குப் பிரமிப்பு. அவரது செல்வாக்கு வளர்வதற்கு முக்கிய காரணம், எளிமையாகப் பழகும் தன்மை, ஒரு காரியத்தை எடுத்துக் கொண்டால் முனைப்புடன் அதை முடிக்கும் ஆற்றல், கட்சிக்குத் தேவையான நிதியைச் சிரமமில்லாமல் வசூலிக்கும் திறமை என்று சொல்லிக்கொண்டே போகலாம். மாநிலத்திலிருந்து மத்தியில் வர, வாஜ்பாயின் செல்லப்பிள்ளையாகி விட்டார் மகாஜன். மத்திய அமைச்சரானார். அதேசமயம் அவருக்கு எதிரிகளும் உருவாகிவிட்டார்கள். உமா பாரதியும், சுஷ்மா ஸ்வராஜும் கட்சிக் கூட்டங்களில் மகாஜன் மேற்கத்திய கலாச்

மகாஜன் குடும்பத்து மர்மங்கள்!

சாரத்தைத் திணிப்பதாகக் குற்றம் சாட்டியதோடு, அவரது செல்வாக்கைக் குறைக்கும் முயற்சியிலும் இறங்கினார்கள். குறிப்பாக பத்திரிகையாளர் ஷிவானி மரணத்தில் பிரமோத் மகாஜனைச் சம்பந்தப்படுத்தும் முயற்சி நடந்தது. ஆனால் புத்திசாலியான மகாஜன், சர்ச்சைகளிலிருந்து சாமர்த்தியமாகத் தப்பித்துக் கொண்டதோடு இன்னமும் வலிமை பெற்றவரானார். அத்வானி விலகியபோதே மகாஜனைத் தலைவராக்க வேண்டும் என்று குரல் எழுந்தது. ஆனால்

• ராகுல் மகாஜன்



ஆர்.எஸ்.எஸ்., "அவருக்கு இன்னமும் வயதிருக்கிறது" என்று ஒதுக்கிவிட்டது. "எதிர்காலத்தில் பிரதமர் ஆவதற்குரிய எல்லா திறமைகளையும் பெற்றவராக திகழ்ந்தார் மகாஜன்" என்று அவர் கொலையுண்டபோது பலர் புகழஞ்சலி சூட்டினார்கள். ஆனால் அதேசமயம் கட்சியின் வசூலிப்பாளராக இருந்த மகாஜன் வசூலித்த கோடிக்கணக்கான பணம் எங்கெங்கே இருக்கிறது என்று அறியும் முயற்சியிலும் கட்சி இறங்கியது.

மகாஜனின்



• உமாபாரதி

செயலாளர் விவேக் மொய்த்ரா. மகாஜன் குடும்பத்தில் ஒருவராகவே இருந்தவர். வங்கத்தைச் சேர்ந்தவர். காலையில் எழுந்ததிலிருந்து இரவு படுக்கப் போகும்வரை மகாஜன் செயல்பாடுகள் விவேக்குக்குத் தெரியாமல் நடக்காது. எனவே கட்சித் தலைமை சில விவகாரங்களைத் தெரிந்து கொள்ள விவேக்கைத்தான் நம்பியிருந்தது. ஆனால் மகாஜனின் மகனுடன் மது அருந்தி, போதைப் பொருள் பயன்படுத்தும் அளவுக்கு விவேக் நடந்து கொண்டிருப்பது கட்சியில் அதிர்ச்சியை உண்டாக்கியிருக்கிறது. அதுவும் ராகுல் மகாஜனுக்கு, கட்சியின் இளைஞர் அணியில் முக்கிய பொறுப்பு கொடுக்கப்பட்டிருந்தது. நல்லவேளையாக உயிர் பிழைத்துக்கொண்டார் ராகுல். அவர் பேரில் உள்ள குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டால் குறைந்தது பத்து வருடம் உள்ளே இருக்க வேண்டும்.

“பா.ஜ.க ஒரு வித்தியாசமான கட்சி என்று முழங்கி வந்தது எக்ஸ்போஸ் ஆகிவிட்டது!”

“ஏதோ சதி நடந்து விஷம் வைத்துத்தான் கொல்லப்பட்டிருக்கிறார் விவேக் மொய்த்ரா. ராகுலையும் கொல்ல முயன்றிருக்கிறார்கள்” என்கிறார் பா.ஜ.க தலைவரான கோபிநாத் முண்டே. இவர் மகாஜனின் உறவினர். ‘கட்சிக்காக வசூலித்த பணத்தைப் பல்வேறு இடங்களில் கொடுத்து வைத்திருந்தார் மகாஜன் என்றும், எல்லா விவரமும் தெரிந்த விவேக்கையும், ராகுலையும் கொன்றுவிட்டால், தங்களிடம் பணம் இருக்கும் விஷயம் யாருக்கும் தெரியாது போய்விடும்’ என்ற நோக்கத்துடன் சிலர் சதிச்செயலில் இறங்கியிருக்கலாம் என்பதும், அடிபடும் ஒரு கிசுகிசுப்புச் செய்தி.

ராகுல் மகாஜன் விவகாரத்தில் தொலைக்காட்சி சேனல்களும் மீடியாவும், பா.ஜ.கவின் இமேஜ் சிதையும் அளவுக்குச் செய்திகளை வாரி வழங்குவதைப் பார்த்து எரிச்சலடைந்திருக்கிறார்கள் பா.ஜ.க தலைவர்கள். “ஒரு குடும்பத்தில் நடந்த சோக சம்பவம் இது. கட்சிக்கும் இதற்கும் என்ன சம்பந்தம் இருக்கிறது. பிரமோத் மகாஜனின் மரணம் எங்களுக்குப் பேரிழப்பு. மகாஜன் மரணத்திலிருந்து பார்த்தால் தொடர்ந்து ஏதோ பண விவகாரமும் இதில் சம்பந்தப்பட்டிருப்பது போல செய்திகள் போடுவது கண்டிக்கத்தக்கது. மீடியா மற்ற கட்சிகளில் நடக்கும் இத்தகைய விவகாரங்கள் பற்றி கண்டுகொள்வதில்லை” என்று சொல்கிறார் தமிழக

பா.ஜ.க பொதுச் செயலாளரான குமாரவேலு. 'தவறு செய்த இளைஞர்களை நல்ல வழிக்குத் திருப்ப வேண்டியது நம் கடமை' என்று வாஜ்பாய் சொல்ல, 'அது ஒரு தனிப்பட்ட குடும்ப விவகாரம்' என்று சுஷ்மா ஸ்வராஜ் சொல்ல, பா.ஜ.க தலைமையிடமிருந்து இரண்டு குரல்கள் ஒலிக்கின்றன.

"மொத்தத்தில் இந்த விவகாரம் மட்டுமல்ல; இதற்கு முன் நடந்த மொத்த விவகாரங்களையும் சேர்த்து வைத்துப் பார்த்தால் பா.ஜ.க ஒரு வித்தியாசமான கட்சி என்று முழங்கி வந்தது எக்ஸ்போஸ் ஆகிவிட்டது. மகாஜன் 3000 கோடி வைத்திருந்தார் என்கிறார்கள். இது உண்மையா, பொய்யா என்று தெரியாது. ஆனால் ஏதோ வில்லங்கமான விஷயங்கள் இருப்பது மட்டும் தெரிகிறது" என்கிறார் தமிழக மார்க்ஸிஸ்ட் கட்சியின் செயற்குழு உறுப்பினரான ஜி. ராமகிருஷ்ணன்.

"அரசியல் ரீதியாக பா.ஜ.கவுக்குப் பெரிய சறுக்கல்தான்" என்று சொல்கிறார் தி.மு.க.வின் அமைப்புச் செயலாளரான டி.கே.எஸ். இளங்கோவன். "போதை மருந்து, விஷம், சதித்திட்டம் என்று சகல மசாலாக்களையும் உள்ளடக்கிய திரைப்படம் போல நடந்திருக்கிறது. முழு விசாரணை கூட பல விஷயங்களை வெளியே கொண்டு வராது" என்று சொல்கிறார் இளங்கோவன்.

- ப்ரியன்



* சுஷ்மா ஸ்வராஜ்

கடந்த ஜெயலலிதா ஆட்சியில், கடைசி வரை சமூகநலத் துறையை தம் கைவசம் வைத்திருந்தவர் வளர்மதி.

"சமூக நலத்துறையைப் பொறுத்த மட்டில், அம்மா ஆட்சியில் போடப் பட்ட வரலாற்றுச் சிறப்புமிக்க உத்தரவு, 'ஒவ்வொருவரும் பெயருக்கு முன்னால் அப்பா இனிஷியலைப் போடுவது போல், அம்மா இனிஷியலையும் போட்டுக் கொள்ளலாம்' என்பது. உண்மையாகப் பார்த்தால் 1991 - 96-ல் அம்மா இந்த உத்தரவைப் போட்டு விட்டார்கள். ஆனால் பின்னர் வந்த தி.மு.க. ஆட்சியில் இது மறைக்கப்பட்டது. அப்படி மறைக்கப்பட்டதைக் கண்டு பிடித்து மீண்டும் ஆணை போட்டார் அம்மா. இது பெரிய சாதனை.



• பூங்கோதை



• வளர்மதி

அதேபோல் தி.மு.கவால் கொண்டுவரப்பட்ட ஏழைப் பெண்களுக்கான திருமண உதவித் திட்டத்தை நாங்கள் நிறுத்தியது உண்மைதான். இதற்குக் காரணம் மூப்பு அடிப்படையில் பயனாளிகளைத் தேர்ந்தெடுப்பதில் நிறைய புகார் வந்தது. ஒரே தெருவைச் சேர்ந்த அல்லது பகுதியைச் சேர்ந்த நூற்றுக்கணக்கானவர்கள் பதிவு செய்து வைத்திருந்தார்கள் என்று வைத்துக் கொள்ளுங்கள், பயன் பெறுபவர்கள் பரவலாக இல்லாமல் குறிப்பிட்ட பகுதியில் அடங்கிப் போகிறார்கள். வருடத்துக்கு அந்தப் பகுதிக்கு ஒதுக்கப்படும் பணம் எல்லோருக்கும் போதாது. இதன் காரணமாக காத்திருப்போர் பட்டியல் நீண்டது. பரவலான அளவில் உதவிகள் செய்ய முடியவில்லை. எனவேதான் அம்மா ஆட்சியில் ஒன்றிய மட்டத்தில் ஆதரவற்றவர்கள், விதவைகள், விதவைகளின் மகள்கள், கண் பார்வையற்ற பெண்கள் ஆகியோருக்கு திருமண உதவித் தொகை வழங்கினோம். இப்போது இவர்கள் எத்தனை பேருக்கு வழங்குவார்கள்? கடலூர் மாவட்ட கலெக்டர், திருமண உதவித் திட்டத்துக்கு பதினெட்டு லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதாக அறிக்கை விட்டிருக்கிறார். இந்தத் தொகையை 120 பேருக்குத்தான் கொடுக்க முடியும். கடலூர் மாவட்டத்தில் திருமணத்துக்காகக் காத்துக் கொண்டிருக்கும் பெண்கள் 120 பேர் தானா?

அடுத்து சத்துணவில் போடப்படும் முட்டை. பல இடங்களில் அழுகிய முட்டை போடப் பட்டதால் குழந்தைகளுக்கு வாந்தி, மயக்கம் ஏற்பட்டது. எனவே நாங்கள், முட்டைக்குப் பதிலாக, வேக வைத்த உருளைக்கிழங்கு, கொண்டைக்கடலை, பச்சைப் பயிறு என்று புரதச்சத்து அதிகமுள்ள தானியங்களையும், காய்கறிகளையும் சத்துணவாகக் கொடுத்தோம். இதை மக்கள் மிகவும் வரவேற்றார்கள். இப்போது இரண்டு முட்டைகள் போடுவோம் என்கிறார்கள். கோழியினம் பறவைக் காய்ச்சல் என்று பாதிக்கப்பட்டிருக்கும்போது, கெட்டுப் போகாத முட்டைகள் போடுவது ஒரு சவாலான

சமூகநலத் துறை

சவாலே சமாளி!

காரியம்தான்.

அம்மா ஆட்சியில் கர்ப்பிணிப் பெண்களுக்கும் சத்து மாவு கொடுத்தோம். பெண்களுக்கு ஏற்றம் கொடுத்த சுய உதவிக் குழுக்கள் செம்மையாகச் செயல்பட்டன. சத்துணவுக் கூட ஊழியர்களின் எதிர்பார்ப்பு கொஞ்சம் அதிகமாகவே இருந்தது. நிதி நிலைமைக்கு ஏற்றபடி அவர்களின் கோரிக்கையை நிறைவேற்றினோம். சமூக நலத்துறையில் அம்மாவின் சாதனைகளை இப்படி அடுக்கிக் கொண்டே போகலாம். ஆனால் கலைஞரின் சாதனைகள்?'' என்று நம்மிடம் கொக்கி போட்டார் வளர்மதி.

தி.மு.க. ஆட்சியில் சமூக நலத் துறைக்கு அமைச்சராக நியமிக்கப்பட்டிருப்பவர் பூங்கோதை. ஆலடி அருணாவின் மகளான இவர் ஒரு மகப்பேறு மருத்துவ நிபுணர். வளர்மதியின் கொக்கியை பூங்கோதையிடம் நாம் ஒப்படைக்க, அடுத்து அவர் ஆரம்பித்தார்.

"திருமணத்துக்குக் காத்திருப்பது 120 பேர்தானா?"

''1996-2001 கலைஞர் ஆட்சியில் கொண்டுவரப்பட்ட மூவலூர் மூதாட்டி இராமாமிர்தம் அம்மையாரின் நினைவு திருமண உதவித் திட்டம் நிறுத்தப்பட்டது. இந்த முறை தேர்தல் அறிக்கையில் தொகையை 10000த்திலிருந்து 15000 வரை உயர்த்துவதாக அறிவித்தார். அதன்படி உத்தரவு போடப்பட்டது. இதற்காக 50 கோடி நிதியும் ஒதுக்கப்பட்டிருக்கிறது. சுமார் 33,000 நலிந்த பெண்கள் பயனடைவார்கள். பயனாளிகள் பரவலாக இருக்கும் வகையில் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். எந்தப் புகாரும் வராமல் பார்த்துக் கொள்வோம்.

சத்துணவில் முட்டை போடுவது ஒன்றும் சவாலான விஷயமல்ல. பறவைக் காய்ச்சல் தமிழகத்தில் கோழியினத்தைப் பெரிய அளவில் பாதிக்கவில்லை. காரணம் மத்திய அரசு பல முன் எச்சரிக்கை தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டதுதான். கருவுற்ற ஏழைப் பெண்களுக்கு மகப்பேறுக்கு முன் மூன்று மாதங்களும், பின் மூன்று மாதங்களும், பேறுகால உதவியாக மாதம் ஆயிரம் ரூபாய், ஆறு மாதங்களுக்கு வழங்கப் போகிறார் கலைஞர். கணவனால் கைவிடப்பட்டோர், ஆதரவற்ற விதவைகள் ஆகியோருக்கு மாதந்தோறும் வழங்கப்படும் ஓய்வூதியம் 200 ரூபாயிலிருந்து நானூறு ரூபாயாக உயர்த்தப்பட்டு, எண்ணிக்கை வரம்பு ஏதுமின்றி வழங்கவிருக்கிறார் கலைஞர்.

ஜெயலலிதா ஆட்சியில் மகளிர் சுய உதவிக் குழுக்கள், அவை அமைக்கப்பட்ட நோக்கத்துக்கு முரணாக, தேர்தலின்போது செயல்படும் வகையில் அரசியல் அழுத்தம் கொடுக்கப்பட்டது. எந்த நோக்கத்துக்காக மகளிர் சுயஉதவிக் குழுக்களை கலைஞர் முதன் முதலாகத் துவங்கினாரோ, அந்த நோக்கம் நிறைவேறப் பாடுபடுவோம். அதேபோல், குழுக்கள் உற்பத்தி செய்யும் பொருட்களை விற்பதற்கு பூமாலை திட்டத்தை மீண்டும் செயல்படுத்துவோம். பெண்கள் மற்றும் குழந்தைகளின் முன்னேற்றத்துக்கு முதல்வர் மிகுந்த முன்னுரிமை கொடுக்கிறார். அந்த வகையில் சமூக நலத் துறையில் பல சாதனைகளைச் செய்திருக்கிறார்; இன்னமும் செய்வார்'' என்றார் பூங்கோதை.

- கௌசி



கல்கி




2006 ஜூன் 18
விய ஆனி 4
மலர் : 64
இதழ் : 46


தமிழ்த்திரு
நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி
பாப்பா - பாரதியார்.

போதைப் பொருள் பயங்கரம்!

ராகுல் மஹாஜனை அவருடைய தந்தையின் இடத்தில் ராஜ்ய சபா எம்.பி.யாக அமர்த்திப் பார்க்க பா.ஜ.க. விரும்பியது. ராகுல் மஹாஜனும் அதற்குத் தயாராகிக் கொண்டிருந்தார்! இப்போது பா.ஜ.க., மஹாஜன் குடும்பத்தையே கை கழுவிவிட்டது! ஆனால் ராகுல் மஹாஜனின் பரிதாப நிலைமை இன்று நேற்று திடீரென உருவானது அல்ல என்பது மிகத் தெளிவாக இப்போது தெரிகிறது. அவரோடு சேர்ந்து ஐந்நூறு ரூபாய் நோட்டில் கொக்கேயினை வைத்துத் துய்த்த விவேக் மொய்த்ரா, பத்தாண்டு காலமாக பிரமோத் மஹாஜனின் தனிச் செயலாளராக இருந்திருக்கிறார்! ராகுலும் இவரும் சேர்ந்து மது, போதைப் பொருள் என்று அழிவுப் பாதையில் சென்றதை செல்வமும் செல்வாக்கும் படைத்த மஹாஜன் குடும்பத்தால் தடுக்க முடியவில்லை. பா.ஜ.க., இத்தனைக்கும் ஒழுங்குக்கும் கட்டுப்பாட்டுக்கும் அதிக முக்கியத்துவம் தரும் கட்சி என்று அறியப்படுகிறது. அதன் நிழலில் வளர்ந்து உருவான ஒரு குடும்பத்துக்கே இந்தக் கதி!

இளமை என்பது புதிய அனுபவங்களைத் தேடும் பருவம். தடை செய்யப்பட்டவற்றைத் துய்ப்பது ஒருவித செயல் வீரம் என்று தவறாக நம்பக்கூடிய பருவம். இந்தப் பருவத்தில் இளைஞர்கள் வழிதவறி தறிகெட்டுப் போகாமல் காப்பது பெற்றோருக்கு மிகப்பெரிய சவால். ராகுல் மஹாஜன் வி.ஐ.பி. வீட்டுப்பிள்ளை என்பதால் அவருக்கு ஏற்பட்ட வாழ்நாள் விபத்து பெரிய செய்தியாகி பரபரப்பு ஏற்படுத்தியுள்ளது. அவரைப் போல் ஏராளமான இந்திய இளைஞர்கள் போதை வலையில் சிக்குண்டு வாழ்வை வீணடித்துக் கொண்டிருக்கிறார்கள். அத்தனை பேரும் வசதி படைத்த வீட்டுக் குழந்தைகள் என்றும் கூறிவிட முடியாது.





உடலை நலிவுறச் செய்து, அறிவைச் சிதைத்து, மனத்தைப் பேதையாக்கும் போதைப் பழக்கம் ஏழை - பணக்காரன் என்ற வேறுபாடின்றி யாரையும் ஆட்கொள்ள முடியும் - சற்றே பலவீனமான ஒரு கணம் போதும்... போதைப் பொருள் விற்பனை / வினியோகம் செய்வோர் அதைப் பயன்படுத்தி ஒரு மனிதனை அடிமையாக்கிவிடுவார்கள்; தங்கள் வியாபாரத்தைப் பெருக்கிக் கொள்வார்கள். இந்த போதைப்பொருள் வியாபார வலைப் பின்னல், கொலைப் பாவத்துக்கும் அஞ்சாத கூட்டத்தினரால் நடத்தப்படுகிறது. உலகளாவ பரவிக்கிடப்பது. இதனை எதிர்கொள்ளவும் வெற்றி காணவும் காவல்துறை மிக எச்சரிக்கையாகவும் சாதுர்யமாகவும் நேர்மையாகவும் இயங்க வேண்டும். ஏதேனும் ஓர் அம்சத்தில் குறை இருந்தாலும் செரினா வழக்குபோல ஆகிவிடும்!

இவ்விஷயத்தில் காவல் துறையின் பொறுப்பைவிட பெற்றோர்களின் கடமையும் விழிப்புணர்வும் மிகவும் முக்கியமாகின்றன. அன்பும் ஆதரவும் போதிய கவனமும் பெறாத பிள்ளைகள்தான் பொதுவாக போதைப் பொருள் போன்ற 'தப்பித்தல்' மார்க்கங்களை நாடுகிறார்கள்.

இன்றைய சூழலில் பெற்றோர், சம்பாதிப்பதிலும் தங்கள் தொழில் அல்லது அலுவலில் சாதித்துக் காட்டுவதிலும் வெறி கொண்டிருக்கிறார்கள். குடும்பமும் குழந்தைகளும் இரண்டாம்பட்சம் என்கிற நிலை மத்தியதர வகுப்பினரிடையேகூட உருவாக ஆரம்பித்து விட்டது. அரவணைப்பையும் அன்பையும் வழங்கத் தவறி, அதை ஈடுகட்ட குழந்தைகளிடம் தேவைக்கதிகமாக பணம் தருவது, பெற்றோரின் குற்ற உணர்வுக்குப் போலிச் சமாதானம் அளிக்கிறது.

ஆனால், இதுவே மீட்க முடியாத படுகுழியில் குழந்தைகளைக் கொண்டு தள்ளுகிறது. இந்த அபாயம் நாளுக்கு நாள் அதிகரித்தும் வருகிறது.

தங்கள் பல்வேறு பொறுப்புகளுக்கிடையே பெற்றோர் குழந்தைகளின் போக்கைக் கூர்ந்து கவனிப்பதும் அவர்களுக்கு வாழ்க்கையில் பற்றும் மகிழ்ச்சியும் இலட்சியமும் உருவாக்க அவர்களை அன்புடன் அழைத்துப் பேசுவதும் அவசியமாகிறது.

இன்று நம் வாழ்வை வளமாக்கிக் கொள்ளும் மும்முரத்தில் நாளை நம் குழந்தைகளின் வாழ்வில் இருள் சூழ இடமளித்துவிடக்கூடாது. அது குடும்ப அமைப்பின் எதிர்காலத்தை மட்டுமின்றி தேசத்தின் எதிர்காலத்தையே காவு கொடுத்துவிடும்! ●

ஷாலினி... வைஷ்ணவி... ஷ்ரத்தா...?

இளம் நடிகைகளின் தொடர் தற்கொலைகளால் இருண்டுபோய் கிடக்கிறது சின்னத்திரை உலகம். ஷாலினி, வைஷ்ணவியைத் தொடர்ந்து இன்று ஷ்ரத்தா! மன உளைச்சல்களும் நெருக்கடிகளும் சின்னத்திரையில் பெருகிப் போய் விட்டதுதான் இதற்குக் காரணமா?

'சின்னத்திரை மீது சுமத்தப்படும் அபாண்டமான குற்றச்சாட்டு இது' என்று சூடாக நம்மிடம் பேசிய 'கோலங்கள்' சீரியலின் இயக்குநர் திருச்செல்வம், "ஷ்ரத்தா உட்பட இப்படி தற்கொலைக்கு ஆளான நடிகைகள் எவருமே குடும்ப கஷ்டத்துக்காக நடிக்க வந்தவர்கள் இல்லை. இளம் வயதில் எந்தவித சிரமமும் இல்லாமல் அவர்களுக்குப் பணம், புகழ், விளம்பரம் எல்லாம் கிடைத்து விடுகிறது. ஆகவே, சிறிய ஏமாற்றத்தைக்கூட அவர்களால் ஜீரணிக்க முடிவதில்லை. அதுதான் இப்படிப்பட்ட தற்கொலை முடிவுகளுக்குக் காரணம். பொதுவாக இதுபோன்ற தற்கொலைச் சம்பவங்களுக்கு கடன் சுமை, காதல் தோல்வி, குடும்பப் பிரச்னைதான் காரணமாக இருக்க முடியுமே தவிர, அவர்கள் சார்ந்திருந்த சின்னத்திரை அல்ல" என்றார்.


"இப்படித் தற்கொலை பண்ணிக்கறவங்க சின்ன வயசா இருக்கறது ரொம்ப யோசிக்க வேண்டிய, பொறுப்போடு கவனிக்க வேண்டிய விஷயம்.







சின்ன வயசு நடிகைங்க தான் பெரும்பாலும் இப்படி உணர்ச்சிவசப்பட்டு தற்கொலை முடிவை எடுத்துடறாங்க. இதுக்குக் காரணம் பிரச்னைகளைச் சமாளிக்க பக்குவம் இல்லாதது தான். ஷூட்டிங் ஸ்பாட்ல சின்னச் சின்ன பிரச்னைகள் வரும். அது பெரும்பாலும் சிங்கிள் டேக்ல சீன் ஓகே ஆகாதது... இல்ல ஷூட்டிங்குக்கு லேட்டா



• திருச்செல்வம்

வர்றது - மாதிரியானதுதான். இது தற்கொலை செய்துக்கற அளவுக்குப் பெரிய பிரச்னை இல்ல. தற்கொலை செய்துக்கணும்னு முடிவெடுக்கற அந்த நிமிடத்துல யாராவது ஒருத்தர் அவங்க கிட்ட பேசியிருந்தாலும் தற்கொலையைத் தடுத்திட முடியும். தற்கொலை மட்டுமே எந்த ஒரு பிரச்னைக்கும் தீர்வு இல்லங்கறதை இப்போ வர்ற நடிகைகள் புரிஞ்சுக்கணும்'' என்கிறார் பிரபல சின்னத்திரை நடிகையான பல்லவி மேனன்.

ஆனால் "வயதுக்கும் தற்கொலைக்கும் சம்பந்தமில்லை'' என்கிறார் இளம் நடிகையான நீலிமாராணி.

"இன்னிக்குச் சின்னத்திரைக்கு நடிக்க வர்றவங்க மெச்சூரிட்டி இல்லாம வர்றாங்கன்னு சொல்லவே முடியாது. எந்தப் பிரச்னையாக இருந்தாலும் முதல்ல பெத்தவங்ககிட்ட மனம்விட்டுப் பேசணும். தீர்வு கிடைக்கலைன்னா நண்பர்கள் கிட்ட பேசலாம். இந்த விஷயத்துல பெத்தவங்களுக்கு அதிக பொறுப்பு இருக்கு. ஒண்ணு, பிள்ளைகளோட பிரச்னைகளைக் கண்டுபிடிச்சு அதுக்குத் தீர்வு சொல்லணும். இல்லன்னா தம் பிள்ளைகளோட பிரச்னைகளைக் காது கொடுத்துக் கேட்கணும். இந்த ரெண்டையும் செய்யத் தவறும் போதுதான் பிரச்னை தற்கொலை அளவுக்குச் சென்று விடுகிறது'' என்று முதிர்ச்சியோடு நீலிமாராணி பேச,

"பெற்றோர் மீது குற்றம் சாட்டுவது எந்த வகையிலும் முறையல்ல'' என்கிறார் பிரபல நடிகையின் தாயார். இவர் ஒரு முன்னாள் நடிகையும் கூட.

"அந்தப் பத்திரிகையில் என் பேட்டி வந்திருக்கு. இந்த பேனர்ல நான் சீரியல்ல நடிக்கப் போறேன்னு சந்தோஷம் வர்றப்போ எங்ககிட்ட வந்து பகிர்ந்துக்கற பசங்க, காதலோ, இல்ல வேற பிரச்னைகளோ வர்றப்போ பெத்தவங்ககிட்ட பகிர்ந்துக்கறதில்ல. இதுதான் இன்னிக்கு பசங்க செய்ற மிகப்பெரிய தப்பு. ஓரளவுக்குப் புகழ் வந்துட்ட பிறகு பெத்தவங்க பேச்சை எத்தனை பேர் கேட்கறாங்கன்னு நினைக்கறீங்க? 90 சதவிகிதம் பெத்தவங்களை மதிக்கிறதே இல்ல. எந்த விஷயமா இருந்தாலும் நண்பர்களோட பகிர்ந்துக்கறாங்களே தவிர, பெத்தவங்ககிட்ட சொல்றதில்ல. ஆனா கடைசில பழி எங்க மேல வந்துடுது'' என்கிறார்.

• டாக்டர் ஷாலினி



• நீலிமா ராணி



இப்படி ஆளாளுக்குத் தங்கள் தரப்பு நியாயங்களைப் பட்டியலிட, தற்கொலை மனோபாவம் குறித்து பிரபல மனநல ஆலோசகரான டாக்டர் ஷாலினியிடம் கேட்டோம்.

"பொதுவாகத் தன்னுடைய அழகை அல்லது திறமையை வெளிப்படுத்தும் எண்ணம் உள்ளவர்களே நடிப்புத் தொழிலுக்கு வருகிறார்கள். அப்படிப்பட்டவர்கள் சின்னச் சின்ன விஷயத்துக்கெல்லாம் உணர்ச்சிவசப்படக் கூடியவர்களாகவே இருப்பார்கள். இதுதான் இதுபோன்ற தற்கொலை முடிவுகளுக்குக் காரணம். அடுத்து நடிகைகள் மீதான சமூகத்தின் பார்வை. நடிகைகளை மனிதர்களாகப் பார்க்காமல் ஒரு பொருளாகவே (object) இந்தச் சமுதாயம் பார்க்கிறது. அதனால் அவர்களது நியாயமான உணர்வுகளைக் கூடப் புரிந்துகொள்ள மறுக்கிறது. இந்தப் பார்வையை மாற்றிக் கொள்வதுதான் இதுபோன்ற தற்கொலைச் சம்பவங்களுக்குத் தீர்வாக அமையும். அவர்களுக்கான ஆதரவுத்தளம் மிகக் குறுகியதாக உள்ளது. அதையும் மாற்ற வேண்டும்'' என்றார் டாக்டர் ஷாலினி.

- கலை

படம் : ஸ்ரீஹரி

சென்னை சேப்பாக்கம் விருந்தினர் மாளிகை. பரபரப்பாக இருக்கிறது அறை எண் 11. புதிய சபாநாயகராகத் தேர்வு செய்யப்பட்டிருக்கும் ஆவுடையப்பன் இங்குதான் தங்கியிருக்கிறார். பார்வையாளர்களுக்கு எந்த விதக் கட்டுப்பாடுகளும் இல்லை. நாம் வந்திருக்கும் தகவலைச் சொல்லிவிட்டுக் காத்திருக்கிறோம். சிறிது நேரத்தில் அழைப்பு வருகிறது.

அறைக்குள் நுழைந்தால் வெள்ளை வேட்டி, வெள்ளை சட்டை சகிதம் புன்னகையோடு வரவேற்கிறார் சபாநாயகர்.

"நான் பிறந்தது நெல்லை மாவட்டம் அம்பாசமுத்திரம் தாலுகாவுக்குள் வரும் சேரன்மாதேவியில். படித்ததும் அங்குள்ள மேல்நிலைப் பள்ளியில்தான். பட்டப்படிப்பை திருநெல்வேலி இந்துக் கல்லூரியில் முடித்துவிட்டு, சட்டப் படிப்பை சென்னை சட்டக் கல்லூரியில் முடித்தேன்."

"சுமையல்ல... கடமை!"

'அரசியலுக்கு வந்தது எப்படி....?'

"1969-ல் தி.மு.கவின் மாணவ அமைப்பின் உறுப்பினராகி, பின்னர் கட்சிப் பதவிகளில் படிப்படியாக முன்னேறி, நான்கு முறை கட்சியின் மாவட்டச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டேன். இன்றைக்குத் தலைவர் கலைஞர் எனக்கு இப்படிப்பட்ட மிகப் பெரிய பொறுப்பை அளித்துள்ளார். அந்தப் பொறுப்பை ஏற்று நேர்மையாகவும் நியாயமாகவும் நடுநிலையோடும் செயல்பட வேண்டும் என்று மனதுக்குள் எண்ணிக் கொண்டேன். அதன்படிதான் செயல்பட்டும் வருகிறேன். எப்போதும் அப்படித்தான் செயல்படுவேன்."

'பொதுவாக மாவட்டச் செயலாளராக இருக்கும் ஒருவர் எம்.எல்.ஏவானால் அமைச்சர் பதவி அளிப்பார்கள். ஆனால் உங்களுக்கு சபாநாயகர் பதவி அளித்தது பற்றி...'

"நான் சட்டமன்ற உறுப்பினராக ஜெயித்து வந்தேன். உடனே இந்தப் பதவியை எனக்குத் தலைவர் கொடுத்தார். நானும் அதை ஏற்றுக் கொண்டேன். மற்றபடி அமைச்சர் பதவி கொடுப்பது என்பதெல்லாம் முதல்வரின் தனிப்பட்ட உரிமை. எனக்கும் எந்த எதிர்பார்ப்பும் இல்லை."

'முதல் கூட்டத் தொடரிலேயே ஏகப்பட்ட அமளிதுமளியாயிற்றே...?'

"மக்கள் பிரச்னைகளுக்குக் குரல் கொடுப்பதுதான் ஒரு சட்டமன்ற உறுப்பினரின் கடமை, அவர் எந்தக் கட்சியாக இருந்தாலும் சரி. அப்படி மக்களுடைய எண்ணங்கள், கோரிக்கைகள் ஆகியவற்றை சட்டமன்றத்தில் எடுத்து வைப்பார்கள் என்று எதிர்பார்த்தேன். பல உறுப்பினர்கள் தங்களது கருத்துகளைப் பதிவு செய்தார்கள். சில உறுப்பினர்கள் அவ்வாறு பதிவு செய்யவில்லை."

'நீங்கள் இப்படிச் சொல்கிறீர்கள். ஆனால் எங்களுக்குப் பேச வாய்ப்பில்லை என்று ஜெயலலிதா பேட்டி அளித்திருக்கிறாரே?'

"இது தவறானது. முதல் முறை ஒரு சட்டமன்ற உறுப்பினராக வந்தபோது

"எனக்கென்று
எந்த எதிர்பார்ப்பும்
இல்லை!"

அவருக்குப் பேச முழுமையாக வாய்ப்பு அளிக்கப்பட்டது. அதன்பிறகு எதிர் கட்சித் தலைவரான பிறகு சட்ட மன்றத்துக்குள் வந்து, 'எனக்குப் பேச வாய்ப்பு தாருங்கள்' என்று கேட்பதுதான் மரபு. ஆனால் அவர் அப்படிக் கேட்கவில்லை. அவர் சொல்வதுபோல, யாருக்கும் நீங்கள் இந்த தேதியில், இத்தனை மணிக்கு சட்டசபையில் பேசப் போகிறீர்கள் என்று முன்கூட்டியே தகவல் அளிப்பது கிடையாது. அது மரபும் அல்ல."

அடுத்து அ.தி.மு.க. எம்.எல்.ஏக்களை கோட்டைக்குள் அனுமதிக்க மறுத்த விவகாரத்தை நாம் கையிலெடுக்க, உடனே "இந்தாப்பா... சட்டசபை விதிகள் புத்தகத்தை எடுத்துட்டு வா" என்ற சபாநாயகர், புத்தகத்தை வாங்கி, விதி 121 சப்க்ளாஸ் மூன்றை வாய்விட்டு நம்மிடம் வாசித்துக் காண்பித்தார்.

பின்னர், "இந்த விஷயத்தில் சட்டமன்ற விதிகள் மிகச்சரியாக இருக்கின்றன. இடை நீக்கம் செய்யப்பட்டவர்கள் எவருமே தலைமைச் செயலகம், சட்டமன்றம், அமைச்சர்களின் அறைகள், எம்.எல்.ஏ ஹாஸ்டல், கமிட்டி அறைகள், உணவு விடுதி, நூலகம் போன்ற எந்த இடத்துக்குள்ளும் நுழையக் கூடாது என்பதுதான் விதி. அந்த விதிகளை சட்டமன்ற உறுப்பினர்கள் மீறும்போது அதைக் காவல் துறையினர் தடுக்கிறார்கள், அவ்வளவுதான்" என்றார்.

'ஆரம்பமே அடிதடி... இனி எப்படி இருக்கப்போகிறது சட்டசபை?'

"மக்கள் எம்.எல்.ஏக்களை சண்டை போடுவதற்காகவோ, தகராறு செய்யவோ, பிரச்னை செய்யவோ சட்டசபைக்குள் அனுப்பவில்லை. தங்கள் தொகுதிக்கு நல்லது செய்வார்கள் என்று நம்பித்தான் அனுப்புகிறார்கள். அந்த உணர்வோடு சட்டமன்ற உறுப்பினர்கள் செயல்பட்டால் எந்தப் பிரச்னையுமில்லை" என்று சபாநாயகர் சொன்னபோது, முகத்தில் புன்னகை ததும்பியது. சமயத்தைப் பயன்படுத்தி உடனே "மிகப்பெரிய எதிர்கட்சியாக அ.தி.மு.க. வந்திருப்பதால் உங்களுக்கு இந்தப் பதவி சுமையாக இருக்கும் என்று எண்ணுகிறீர்களா?" என்றோம்.

சட்டென்று வந்தது பதில்: "இந்தப் பதவி எனக்கு சுமையல்ல... கடமை!"

- ஆர். முத்துக்குமார்

படம் : ஸ்ரீஹரி



ஒரு பக்கம்!

ஆளுக்கொரு பை!

'ம் உள்ளே போ' பட்சாரி தயங்கித் தயங்கி அந்தக் கோயிலுக்குள் பெட்டிப் படுக்கையோடு நுழைந்தாள். அவளை இறக்கி விட்டவர்கள் கடமை முடிந்தது என்று திரும்பிப் பார்க்காமல் போய் விட்டார்கள். இனி பட்சாரி இந்தக் கோயிலில்தான் தங்கியிருக்க வேண்டும்.

தாய்லாந்திலுள்ள லோப்புரி எனும் இடத்தில் இருக்கிறது இந்தக் கோயில். பெயர் வாட் பிரா பாட் நாம் பு (Wat Pra Baht Nam Phu). பாங்காக்கிலிருந்து 50 கி.மீ தொலைவில் அமைந்துள்ளது. இந்தக் கோயிலில் உள்ள புத்தர் பிருமாண்டமானவர், கம்பீரமானவர்.

ஒருகணம் எல்லாவற்றையும் மறந்துவிட்டு புத்தரை அண்ணாந்து பார்த்த பட்சாரி, பார்வையைத் தாழ்த்தி புத்தரின் காலடியைப் பார்த்தாள். குவியல் குவியலாக மூட்டைகள் அடுக்கப்பட்டிருந்தன.

"இந்த மூட்டையில என்ன இருக்கு?" என்றாள் கம்மிய குரலில்.

"வாழ்க்கை முடிஞ்சி போன பிறகு சாம்பல்தான் எஞ்சியிருக்கும். இந்தக் கோயிலுக்கு வந்து இறந்து போனவங்களோட சாம்பல்தான் புத்தரோட காலடியில மூட்டையா குவிஞ்சிருக்கு" என்றார் பணியாளர்.

"சாகப்போறவங்க மட்டும்தான் இந்தக் கோயில்ல வந்து தங்குவாங்களா?"

அந்தப் பணியாளர் தலையசைத்து விட்டு நகர்ந்து போனார்.

பட்சாரி புத்தரை வைத்தக்கண் வாங்காமல் பார்த்துக்கொண்டிருந்தாள். அவளது கண்கள் வெறுமையாகக் காட்சியளித்தன. கன்னங்கள் ஒட்டிப்போயிருந்தன. 31 வயதுதான். ஆனால் நடப்பதற்குக் கூட அவள் உடலில் வலு இல்லை. சக்கர நாற்காலியில்தான் அமர்ந்து கொண்டிருந்தாள்.

தன் கணவனை முழுக்க முழுக்க நம்பியதுதான் பட்சாரி தன் வாழ்நாளில் செய்த ஒரே தவறு. அந்த ஒரு தவறுதான் அவளை இந்தக் கோயிலுக்கு அழைத்து வந்திருக்கிறது. எய்ட்ஸ் கிருமியை அவளுக்குள் திணித்துவிட்டுப் போயே போய்விட்டான் அவள் கணவன். ஒரு குழந்தை இருக்கிறது வீட்டில். ஆனால் இவளை வைத்துக்கொள்வதற்கு யாருக்கும் பிரியமில்லை.



அந்தச் சாம்பல் மூட்டைகளை உற்றுப் பார்த்தாள் பட்சாரி. "என்னை எந்தப் பையில் திணிப்பாங்க?"

- மருதன்








DMS *presents*

GAATA RAHE MERA DIL

Immortal Stars, Immortal Songs

At Kamaraj Arangam, Teynampet, Chennai
on Saturday, 17th June, 2006 at 7:00 p.m.

Musical Programme of Old Hindi Film Hits

Rafi / Kishore Kumar / Talat / Mukesh /
Hemant / Lata / Asha / Geeta Dutt

Donor passes of Rs.1000, 500, 300, 225, 125 available at

- ✓ DMS Office ✓ Landmark (Nungambakkam)
- ✓ Bipin Jewellers (NSC Bose Road)
- ✓ Online booking: www.chennaionline.com

Divine Mother Society

Jammi Buildings, 63, Royapettah High Road, Mylapore, Chennai - 4.
Phone: 24995672, 42109020








ANBAHAM REHABILITATION CENTRE

(A UNIT OF TERDOD
Regd. Public Charitable Trust)

திருநிலை கிராமம், விச்சூர் P.O.சென்னை - 600 103.

P.H. 25015165 / 9444009988, E-mail : info@anbaham.org visit. www.anbaham.org

அன்பகம் சாலையோரத்தில் கவனிப்பாரற்று சுற்றித்திரியும் அனாதை மனநோயாளிகளை காப்பாற்றி, அன்பகத்தில் தங்கவைத்து, மருத்துவ வசதி அளித்து, அவர்களை தங்கள் இல்லங்களில் கொண்டு சேர்க்கும் நல்லதொரு பணியினை செவ்வனே செய்யும், ஒரு தொண்டு நிறுவனம்.

45 நோயாளிகளைப் பராமரிக்கும் வசதி கொண்டது. கடந்த 7 ஆண்டுகளாக 375 மனநோயாளிகளைக் காப்பாற்றி அவர்தம் இல்லங்களில் கொண்டு சேர்த்து உள்ளோம். பராமரிப்பு செலவு அனைத்தும் நன்கொடையாளர்கள் அளிக்கும் உதவிகள் மூலமே நடைபெற்றுவருகிறது.

மகத்தான மனித நேயப்பணி
தொடர தாராள நிதி தாரீர்.
மனித நேயப்பணியில், நீவிரும்
ஒருவராவீர் !

காலை சிற்றுண்டி	ரூ.	250/-
மதிய உணவு	ரூ.	500/-
இரவு உணவு	ரூ.	300/-
ஒரு நாள் உணவுக்கு	ரூ.	1,000/-
ஒரு நோயாளியை ஒரு மாதம் பராமரிக்க	ரூ.	1,500/-

நன்கொடைகளுக்கு 80G பிரிவின் படி வருமானவரி விலக்கு உண்டு.

FCRA Regn. No. 075900916 தங்கள் நன்கொடையை TERDOD என்ற பெயரில் மேற்கண்ட முகவரிக்கு Cheque/DD/MO அனுப்பு வைக்கும்படி பணிவுடன் கேட்டுக்கொள்கிறோம்.

இப்படிக்கு
நிர்வாகத்தினர்

பாசக் கதை – 1

கரையும் நெஞ்சம்!

'இன்னிக்கு எடுத்துண்ட முடிவை மாத்திக்கப் போறதில்லை. போதும்! இத்தன நாள் செஞ்சுண்ட சேவகத்துக்கு நன்னா வாங்கிக் கட்டியாச்சு! அடுப் போட எரிஞ்சு சோற்றோடு வெந்து வேளா வேளைக்குக் கொட்டி என்னத் தைக் கண்டுட்டேன் இந்த ஆத்துல...? பிள்ளை மனம் கல்லுங்கிறதை மகன் நிரூபிச்சுட்டான். அடுத்தாத்து பொம் மனாட்டிதான் நான்னு அடிச்சுச் சொல்லிண்டா மாட்டுப் பொண்ணு. பத்து வயசு முளையாமட்டை பேத்திப் பொண்ணு கூட எக்காளமா பேசறது! எங்க போய் சொல்றது?...' மனத்திற் குள்ளே பேசியவாறே வெளிறி போயிருந்த மஞ்சள் பையில் புடைவைகளைத் திணிக் கிறாள் அமிர்தம்.

என்ன முகூர்த்தத்தில் அமிர்தம் என்று அவளுக்குப் பெயர் வைத்தாரோ அப்பா. வாழ்க்கை முழுவதும் விஷமாய்த்தான் போய்விட்டது. கட்டிய கணவன் நந்த வனத்துக்கு பூஜைக்காக பூப்பறிக்கச் சென்றவன், இவளின் பூவையும் பறித்துக் கொண்டு பூ நாகம் தீண்டி பொசுக்கெனப் போய்விட்டான். ஊரும் ஜனமும் இவள் வந்த வேளை சரியில்லை எனக் கரித்துக் கொட்ட, நல்லவேளை நான்கு வயது ரெங்குவை பிடித்துக்கொண்டு சுந்தர பாண்டியபுரத்துக்கு இரயிலேறி விட் டாள். இடையில் விட்டுப் போயிருந்த முறுக்கு சுற்றுதலைத் தொடர்ந்து பிள்ளை யோடு பெற்ற அப்பா, அம்மாவையும் காப்பாற்றினாள்.

அமிர்தம் வாழ்வில், லக்ஷ்மி ஒதுங்கிச் சென்றாலும் சரஸ்வதி கடாக்ஷத்திற்குக் குறைவில்லை. 'ரெங்கு' நன்றாகவே படித் தான். எப்படியோ பகலெல்லாம் முறுக்கு சுற்றி, இரவு வரதராஜ பெருமாளைச் சுற்றி, மகனை அரசு வேலையில் நுழையச் செய்துவிட்டாள். முதலில் பக்கத்தில் தென்காசியிலே வேலை பார்த்த ரெங்கு, இரண்டு வருடங்களில் சென்னைக்கு மாற்றலாகிப்போனான். கூடவே வேலை பார்த்த கோமதியைத் திருமணம் செய்ய விரும்பியவன், அமிர்தத்தின் சம்மதம் இல்லாமலே பதிவுத் திருமணம் செய்து கொண்டான். முதலில் ஜீரணிக்க முடி யாமல் தவித்தவள், பேத்தி முகம் பார்த்து மாறிப்போனாள்.

போன டிசம்பரில்தான் ரெங்கு அமிர்தத்தை சென்னைக்கு அழைத்துச் சென்றான். வீட்டையும் பெற்றதையும் கவனிக்க ஆளில்லை என்று அம்மாவிடம் அரற்றி அவளை மசியவைத்தான். ஆரம் பத்தில் எல்லாமே பிடித்துப் போனது அமிர்தத்துக்கு. மகனுக்குத் தன் கையாலே சமைத்துப் போட்டு, மருமகளுக்கு வேண்டியதைச் செய்து கொடுத்து, பேத்தியைப் பள்ளிக்கு கூட்டிக் சென்று, பின் அழைத்து வந்து என பம்பரமாகவே சுழன்றாள். நாட்கள் செல்லச் செல்ல மருமகளின் சுயரூபம் தெரிய ஆரம்பித் தது.

'இங்க பாருங்க உங்கம்மாவோட அசட்டையை. வாங்கி வச்ச ரெண்டு லிட்டர் பாலை ஃப்ரிஜ்ல வைக்காம டீ.வியில மூழ்கிப் போயாச்சு. பால் கெட்டுது... ஆனாலும் இத்தன மறதி கூடாது...' வாழைப்பழத்தில் ஊசி ஏற்றினாள்.

பாலில் ஆரம்பித்து பாயில் முடிப் பாள். தூங்கும்போதுகூட தன்னைப் பற்றிய புகார்களை மகனிடம் சொல்வதை ஜன்னலோரம் படுத்திருக்கும் அமிர்தம் கேட்பாள்.

'ம்... என்ன செய்யறது? கிராமத்துக்குப் போனாலும் வேலை செய்து முடியாது!

விசாலாட்சி மாதிரியா நேக்கு பென்ஷன் வர்றது? காக்காசானாலும் கவர்ன் மெண்ட் வேல பாக்குற புருஷானைக் கட்டிண்டு இருந்திருக்கணும். பெத்ததுகள் அவளை முதுகுல சுமக்கிறது! ஆனா நான்... கோயில் குருக்களைக் கட்டிண்டு கும்பத்துண்டு பச்சநெல்லுன்னு பார்த்துத் தான் மிச்சம்... ம் எடுத்து வச்சாலும் கொடுத்து வைக்கணும்பா! ஆனா நேக்கு எடுத்தும் வைக்கலை! கொடுத்தும் வைக்கலை....' ஊமையாய்க் கண்ணீர் வடிப்பாள்.

ஆனால் இன்று நடந்துபோன விஷயங்கள் விஷமாய் முன் நிற்கின்றன. வீடெல்லாம் பேப்பரும் பழைய புத்தகமுமாய்க் கிடக்கிறதே என்று எல்லாவற்றையும் கட்டி பேப்பர்காரனிடம் போட்டு காசாக்கினாள் அமிர்தம். புத்தகத்தோடு கலந்துபோன பேத்தியின் டிராயிங் நோட்டைக் கவனிக்கவில்லை.

"அய்யோ பாட்டி, என் நோட்புக் பாத்தியா? இங்கதான் டேபிள் மேல வைச்சுருந்தேன்" சுசி சொன்னபோதுதான் அமிர்தத்துக்கு தன் தவறு உரைத்தது.

"தெரியாம பேப்பர்காரங்கிட்ட



போட்டுட்டேண்டி. சரி, ரங்குகிட்ட சொல்லி வேற நோட் வாங்கிடலாம்...'' இவள் சொல்லி முடிப்பதற்குள் கையையும் காலையும் உதறி அழ ஆரம்பித்தான் கசி. சொல்லி வைத்தது போல் கோமதி வர ''அம்மா பாரும்மா இந்தப் பாட்டிய, கொஞ்சங்கூட புத்தியில்ல... என்னோட டிராயிங் நோட்ட...'' விசும்பியவாறே விஷயத்தைச் சொல்ல, வானத்துக்கும் பூமிக்கும் குதிக்கிறாள் அவள்.

''எத்தன காலத்துக்குத்தான் இந்தக் கஷ்டமோ! முடி நரைச்சவுடனே புத்தியும் வெளுத்துப் போயிடும் போல... கிராமத்துல கிடந்த கெழவிய கழுவி குளிப்பாட்டி ஹால்ல உக்கார வைச்சார். அது புத்தியைக் காமிக்கிறது...' விஷமான வார்த்தையை இயல்பாகவே பேசினாள் கோமதி.

அலுவலகச் சுமையை சட்டையோடு சுமந்து வந்த ரெங்கு அதைக் கழற்றுவதற்குள் நடந்ததை மேலும் சூடாக்கிப் பரிமாறினாள் கோமதி.

நல்லவேளை அவள் பேசிய பேச்சுக்கள் கண்ணாடி ஜன்னலைத் தாண்டி வயதான காதுகளுக்கு வந்து சேரவில்லை. ஆனாலும் அமிர்தத்தின் கண்ணீர் நிலைக் கதவின் ஓரமாக வழிந்து செல்கிறது. அப்போதே முடிவு செய்து விட்டாள் 'இன்று இரவோடு இரவாக சுந்தர பாண்டியபுரம் சென்றுவிட வேண்டும்' என்று. அமிர்தம் அதைச் செயலாக்க மணியைப் பார்க்கிறாள். பன்னிரண்டாக ஐந்து நிமிடம் இருக்கிறது.

பையை கையில் இடுக்கிக்கொண்டு பூனையாய் நகர்கிறாள். 'ம்ம்ம்...' கசிதான் முனகுகிறது. வேண்டாம் என்றாலும் மனது கேட்காமல் பேத்திக்கு அருகில் வந்து நெற்றியில் கை வைக்கிறாள். அனலாய்க் கொதிக்கிறது. 'பாவி அந்திசாயற நேரத்துல உச்சியில எண்ணெய் வைச்சுக் குளிப்பாட்டினா... நேக்கு அப்பவே தெரியும். ஏதாவது ஆகும்னு... ஐயோ... என்ன செய்யிறது...' கையைப் பிசைந்தவள், 'ஆமா இப்ப நேக்கு என்ன வந்துடுத்து! அவளைப் பெத்தவா பக்கத்துல தூங்கிண்டுருக்கா... அவா பார்த்துக்க மாட்டாளா என்ன?' மனதைக் கல்லாக்கிக் கொண்டு நடக்கிறாள்.

'லொக்... லொக்...' மெதுவாய் இருமிய ரெங்கு, பின்பு பலமாய் இரும ஆரம்பித்தான். புரையேறியது போல் விக்கி அவன் இருமல் தொடர, வாசல் வரை போய் விட்ட அமிர்தம் திரும்பி ஓடி வருகிறாள்.

''என்னடா ஆச்சு நோக்கு...?''

மகனின் நெஞ்சைத் தடவுகிறாள். ''இருடா ரெண்டு அரத்தை, சித்தரத்தை சுக்கு தட்டி கஷாயம் போட்டுண்டு வர்றேன். குடிச்சுட்டுப் படு. சரியாயிடும். ஆபீஸ்ல கண்ட ஜலத்தைக் குடிச்சுண்டு வர்றது. வேளையத்த வேளையில இருமித் தொலைக்கிறது...'' முனகிக் கொண்டே அடுக்களைக்குள் செல்கிறாள் அமிர்தம். புறப்படத் தயாரான மஞ்சள் பை சோபா ஓரத்தில் சீண்டுவாரின்றிக் கிடக்கிறது. தன் பயணம் பாழ்பட்டுப் போய் விட்டதாக அதற்கு மட்டும் தெரிகிறது.


○

''அரசியல்வாதி பொண்ணுகிட்ட ஐ லவ் யூன்னு சொன்னதை அவ அப்பா பார்த்துட்டாரு!''

''ஐயையோ... அப்புறம் என்ன ஆச்சு?''

''நான் உன்னைக் காதலிக்கிறேன்னு தமிழ்ல சொல்லுன்னு என்னைக் கண்டிச்சாரு!''

– சி.பரத்



தஞ்சை தரணியில் எண்ணெய்ப் பனை!



• பாமாயில் பனை

கொஞ்ச காலத்துக்கு முன்னால் மலேசியாவிலிருந்து பாமாயில் தருவிக்கப்பட்டபோது பலத்த எதிர்ப்பு தோன்றியது நினைவிருக்கலாம். விலை மலிவானாலும் அதில் 'கொலஸ்ட்ரால்' அதிகம் என்றும் பொருளாதாரத்தில் பின்தங்கியவர் தலையில் அது கட்டப்படுவது அநியாயம் என்றும் பேசப்பட்டது. இத்தகைய ஒரு எண்ணெய் இறக்குமதி செய்யப்பட்டதற்கு லஞ்ச ஊழலே காரணம் என்றும் ஒரு வதந்தி பரவியது.

சமீபத்தில், தஞ்சாவூர், திருவாரூர் மாவட்டங்களில் தல யாத்திரை செய்து வந்தேன். இந்தப் பயணத்தின்போது ஓர் ஊரிலிருந்து இன்னொரு ஊருக்குச் செல்லும்போதெல்லாம் இதுவரை தஞ்சை தரணியில் நான் பார்த்திராத ஓர் அபூர்வகாட்சி தென்பட்டது. ஈச்ச மரம் போன்ற தோற்றத்தில் புதிய பயிர் ஒன்று ஏராளமாக ஆங்காங்கே காணப் பட்டது. விசாரித்தபோது, "அது பாமாயில் பனை" என்றார்கள். உடனே எனக்கு பழைய குற்றச்சாட்டுகள் நினைவுக்கு வர, இதை இன்னும் கொஞ்சம் ஆராய வேண்டும் என்று தோன்றியது. அப்படி செய்ததில் கருவேலி கிராமத்தில் ஒரு பாமாயில் கன்றுப் பண்ணை இருப்ப தாகவும் அங்கிருந்துதான் விவசாயிகளுக்கு கன்றுகள் விநியோகமாகின்றன என்றும்

தெரியவந்தது. கும்பகோணத்திலிருந்து கருவேலி அதிக தூரமில்லை. நாச்சியார் கோயில் தாண்டி சில கிலோமீட்டர் சென்றால் கருவேலிக்குப் பாதை பிரிகிறது.

இங்குள்ள இறைவன் சற்குணேசுவரர்; இறைவி சர்வாங்கசுந்தரி. அழகு என்பது தோற்றத்தில் மட்டுமல்ல, குணத்திலும் உண்டு என்பதை இருவருமாகச் சேர்ந்து உணர்த்திக் கொண்டிருக்கிறார்கள். அவர்களை வலம் வந்து தரிசித்த பிறகு, பாமாயில் கன்றுப் பண்ணைக்குப் போனேன். திரு. ஜனார்த்தனன் என்பவர் என்னை வரவேற்றார்.

நான், 'புரட்சிகரமான பாமாயில் சாகுபடியில் பெருமையுடன் பங்குகொள்ள' வரவில்லை; சும்மா தகவல் அறியவே வந்திருக்கிறேன் என்று புரிந்ததும் அவருக்குக் கொஞ்சம் ஏமாற்றம்தான். என்றாலும் சமாளித்துக் கொண்டு எனக்கு பண்ணையைச் சுற்றிக் காண்பித்தார். பச்சைப் பசேலென்று இளம் பாமாயில் கன்றுகள் பிளாஸ்டிக் பைகளில் வரிசை வரிசையாக அழகுற அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. மண்ணும் எருவும் அளவாகக் கலந்து பைகளை நிரப்ப, அவற்றில் கன்றுகளை வளர்த்திருந்தார்கள், விவசாயிகள் வாங்கிப் போக வசதியாக. நீரை வீணடிக்காமல் தேவையான அளவில் தெளித்தார்கள். அதிகப்படி நீர் வடிந்து விட பிளாஸ்டிக் பைகளின் அடியில் சிறிய துவாரங்கள் இருந்தன.

திரு. ஜனார்த்தனன் காவேரி பாமாயில் நிறுவனத்துக்காகப் பணியாற்றுகிறார் என்றும் இந்த நிறுவனத்துக்கு சொந்தமான எண்ணெய் ஆலை, பெரம்பலூர் மாவட்டத்தில் வாரணவாசி என்ற ஊரில் அமைந்திருப்பதாகவும் தெரிய வந்தது. அந்த நிறுவனத்தின் சார்பில் ஜனார்த்தனன் இங்கே பண்ணை நடத்துவதுடன், பாமாயில் சாகுபடியை விவசாயிகளிடையே ஊக்குவித்தும் வருகிறார்.

"பாமாயிலில் கொலஸ்ட்ரால் அதிகம் என்று சில காலம் முன்பு பேசப்பட்டதே" என்று என் சந்தேகத்தை வெளியிட்டதும், ஜனார்த்தனன், கொஞ்சம் சூடாகவும் கொஞ்சம் அலட்சியமாகவும் "அதெல்லாம் அமெரிக்காகாரன் பரப்பிய கட்டுக்கதை" என்றார்.

"ஏன்? அமெரிக்கர்கள் எதற்காக இப்படி ஒரு வதந்தி பரப்ப வேண்டும்?"

"அவர்கள் நாட்டில் உற்பத்தியாகிற ஏராளமான சமையல் எண்ணெய் - குறிப்பாக சோயா எண்ணெய் உலகெங்கும் விற்பனையாக வேண்டாமா? அதற்காகத்தான்! பாமாயில் மலிவானதால் மார்க்கெட்டைப் பிடித்து விடும் என்ற கவலையால்தான்! பார்க்கப் போனால் நம்முடைய தேங்காய் எண்ணெய்கூட நல்லதில்லை என்று ஒரு காலகட்டத்தில் சொன்னார்கள். அதெல்லாம் தப்பு என்று நிரூபணமாகிவிட்டது."

"அப்படியா சங்கதி...! ஏதோ லஞ்ச ஊழல் அது இது என்று... கேள்விப் பட்டோமே!

"அதைப் பற்றியெல்லாம் என்னிடம் கேட்காதீர்கள். அதெல்லாம் அரசியல்! பாமாயில் பற்றிக் கேளுங்கள், சொல்கிறேன்" என்றார் ஜனார்த்தனன்.

அப்புறம், ஒருவேளை நான் கேட்காமலிருந்து விட்டால் என்ன செய்வது என்று கவலைப்பட்டவராகத் தாமாகவே பேச ஆரம்பித்தார்! பாமாயில் சாகுபடி பற்றி நிறையச் சொன்னார். பாமாயில் பழக் குலையிலிருந்து எண்ணெய் பிழி

• கருவேலி சற்குணேசுவரர் ஆலயம்



வதுபோல அதன் சாராம்சத்தைச் சொல்கிறேன்:

காவேரி பாமாயில் நிறுவனத்தின் எண்ணெய் ஆலையின் பிழிதிறன் அதிகம். அதில் பகுதி அளவே தற்போது உற்பத்தியாகிறது. காரணம், பாமாயில் சாகுபடி இப்போதுதான் சூடுபிடிக்க ஆரம்பித்திருக்கிறது.

இந்தியா ஏராளமான அளவில் ஆண்டுதோறும் சமையல் எண்ணெய் இறக்குமதி செய்து வருகிறது. பாமாயில் பிரபலமடைந்து மேலும் பல ஆலைகள் தோன்றினால் நமக்குப் பெருமளவில் அந்நியச் செலாவணி மிச்சமாகும். உள்நாட்டுத் தேவையைப் பூர்த்தி செய்யவே நமக்கு இன்னும் பல ஆண்டுகள் ஆகும். எனவே விவசாயிகள் கொள்முதல் ஆகுமோ என்ற பயமின்றி பயிரிடலாம். நல்ல வருவாயும் கிடைக்கும். அரசின் மான்ய உதவிகளும் உண்டு.

இதையெல்லாம் எடுத்துச் சொல்லி விவசாயிகளை ஊக்குவிக்கவே ஜனார்த்தனன் 'துணை மேலாளர்' என்ற பதவியில் அமர்த்தப்பட்டிருக்கிறார்.

"விவசாயிகளின் ஒத்துழைப்பு கிடைக்கிறதா?"

"ஓ! தஞ்சை விவசாயிகள் எப்போதுமே புதிய சிந்தனைகளை ஏற்கவும் பரீட்சித்துப் பார்க்கவும் தயாராக இருப்பவர்கள். பாமாயில் விஷயத்திலும் அப்படித்தான். ஆனால் அவர்களுக்கு முதலில் பலன்களை எடுத்துச் சொல்ல வேண்டுமல்லவா? அதற்கான முழு முயற்சியில் ஈடுபட்டிருக்கிறேன். துண்டுப் பிரசுரங்கள் விநியோகிக்கிறேன். நேரிலும் சென்று பேசி அவர்களுக்கு நம்பிக்கையூட்டி வருகிறேன்."

"மற்ற எண்ணெய் வித்துக்களைவிட பாமாயிலில் என்ன அனுகூலங்கள்?"


ஜனார்த்தனன் உடனே உற்சாகமடைந்தார்."எண்ணிக் கொள்ளுங்கள்" என்று விரல்விட்டுக் கொண்டே பேசினார்:

"திரும்பத் திரும்ப பயிர் செய்ய வேண்டிய அவசியம் கிடையாது; கன்று கள் மரமாகிவிட்டால் 25 ஆண்டுகளுக்கு நிலையான வருமானம். சாகுபடி செலவு குறைவு. வேலையாட்களின் தேவை குறைவு. மழை, வெள்ளம் பாதிப்பு இல்லை. களவு போகாது. ஆடு மாடு கூட தின்பதற்கு வராது. அரசின் மான்ய உதவிகள் உண்டு. சாகுபடிகாலம் முழுவதும் தொழில்நுட்ப ஆலோசனைகள் வழங்குறோம். வங்கிக் கடன் உதவி கிடைக்கும். கொள்முதலுக்கு உத்தரவாதம் உண்டு... போதுமா, இன்னும் சொல்லவா?"

"இதற்குமேல் எண்ணுவதற்கு விரல்கள் இல்லை, அதனால் போதும்" என்றேன். அப்புறம் கொஞ்சம் யோசித்து,

"நிலையான வருமானம் என்றால் எவ்வளவு?" என்று கேட்டேன்.

"நட்ட மூன்று வருஷங்களுக்குப் பிறகு மகசூல் கிடைக்கும். நன்கு பராமரித்தால் ஒரு ஏக்கருக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ.20,000 முதல் ரூ.25,000 வரை கிடைக்கும். இதிலே




• தமிழகத்தின் முதல் பாமாயில் ஆலை...

இன்னொரு வசதி, மாதா மாதம் இந்த வருவாய் ரூ.1500 முதல் ரூ.2000 வரை கிடைத்து வரும். அறுவடைக்கு பலமாதங்கள் காத்திருக்க வேண்டாம்."

"முதல் மூன்று வருஷங்கள் வருவாய் இராதே? நஷ்டம்தானே?"

"அதெப்படி? அதற்குத்தான் ஊடுபயிர் இருக்கிறதே! தஞ்சை விவசாயிக்கு அதெல்லாம் தெரியும். தெரியாதவர்களுக்கு நாங்கள் சொல்லிக் கொடுப்போம்! கர்நாடகா தண்ணீர் விடாமல் தகராறு பண்ணினாலும் சொட்டு நீர்ப் பாசனம் சொல்லித் தருவோம்" என்ற ஜனார்த்தனன், உச்சி வெயிலையும் பொருட்படுத்தாமல் என்னை வயல் காட்டுக்கே அழைத்துப் போனார். அங்கே என் தவிப்பைப் பார்த்துவிட்டு ஆள் அனுப்பி, குடை கொண்டுவரச் செய்தார். பாமாயில் மரத்தில் குலை தள்ளியிருப்பதையும் அது பழுத்து அறுவடைக்குத் தயாராயிருப்பதையும் காண்பித்தார். பொன்னிறமான ஒரு பழத்தை இலேசாக அழுத்திய போது பொன்னிற எண்ணெய் கசிவதைக் காண்பித்தார்.



• ஜமால்

அப்புறம், "உங்களுக்கு இவ்வளவு போதும்; இதுக்கு மேலே நான் சூப்பர் பாஸ்பேட், மக்னீசியம் சல்பேட் என்றெல்லாம் ஆரம்பிச்சா தாங்கமாட்டீங்க" என்றார்.

"ரொம்ப தாங்க்ஸ்!"

"எதுக்கு? லெக்சரை நிறுத்தியதற்கா?"

"அதற்கும் குடைக்கும் சேர்த்து!"

"நீங்க இன்னும் என்னை நம்பலைன்னு நினைக்கிறேன்."

"அதெல்லாம் இல்லை, ஸார்!"

வெயிலில் வாடியிருந்த என்னுடைய குரலில் நம்பிக்கை தொனிக்கவில்லை போலும்.

ஜனார்த்தனன் என்னைத் தரதர வென்று கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு திரும்பவும் கன்றுப் பண்ணைக்குப் போனார். அங்கிருந்த அலுவலகத்திலிருந்து போன் போட்டார்.

"யாரு? ஜமால் மொய்தீனா? நம்ம ஃப்ரெண்டு சென்னையிலேர்ந்து வந்திருக்கார். அவருக்கு பாமாயில் பயிர் பற்றி உங்க அனுபவத்தைச் சொல்லுங்க" என்றார். ரிஸீவரை என்னிடம் தந்தார்.



• சண்முகம்

"குறைஞ்ச வேலை ஆளுங்களை வைச்சு, நிறைய வருமானம் கிடைக்கிற ஒரு பெரிய பயிர் பாமாயில்தான்! ரெண்டு ஏக்கர், மூணு ஏக்கர் போட்டாக்க மாசம் பத்தாயிரம் இல்ல, பதினைந்தாயிரம் வரை சர்வ சாதாரணமா வந்துக்கிட்டே இருக்கும்" என்றார் ஜமால்.

"சலாம், ஜமால்! நன்றி" என்று கூறி ரிஸீவரை வைத்தேன்.

ஜனார்த்தனன் அத்துடன் விட்டாரில்லை. "சண்முகத்திடம் பேசுங்க" என்று இன்னொரு எண்ணை டயல் செய்தார். சண்முகத்துக்கு என்னை அறிமுகம் செய்து வைத்தார்:

"நான் 35 ஏக்கரில் பயிர் செய்திருக்கேன். பணம் காய்க்கும் மரம்னா இதுதான்! மண் கூட முக்கியமில்லே; மனம் இருந்தா, எந்த மண்ணிலும் காய்க்க வைக்கலாம்" என்றார் சண்முகம்.

ஜனார்த்தனன் இன்னொரு எண்ணை டயல் செய்ய முற்படும் முன்னால் "போதும் ஸார்! முழு நம்பிக்கை பிறந்தாச்சு" என்றேன்.

"பாமாயில் பற்றி ஒரு கவிதை எழுதியிருக்கேன் கேட்கறீங்களா?" என்றார் ஜனார்த்தனன்.

நான் ஏன் நிற்கிறேன்?

ஜனார்த்தனன் விட்டாரில்லை. ஓடிக் கொண்டிருந்த என்னை அவர் பாட்டு, உற்சாகமெட்டில் தொடர்ந்து வந்து கொண்டிருந்தது, கொஞ்ச தூரத்துக்கு...

"பாமாயில் பயிரிடுவோம்,
பக்குவமாய்ப் பராமரிப்போம்;
பணம் நிறைய குவித்திடுவோம்,
பார்போற்ற வாழ்ந்திடுவோம்!"

- விஜயன்

பெரும்பாலானவர்களின் வாழ்க்கை, துன்பங்களைத் தரும் எண்ணற்ற பிரச்னைகளுக்குத் தீர்வு காண்பதற்கான இடைவிடாத போராட்டமாகவே இருக்கிறது. ஆத்மாவைப் பற்றிய அறியாமையே, எல்லாத் துன்பங்களுக்கும் காரணம் என்று இந்து மத சாஸ்திரங்கள் கூறுகின்றன. நம்முடைய ஆத்மாவினை மறந்துவிட்டு, நம்மை உடல், மனம், புத்தி ஆகியவற்றோடு கூடியவர்களாகக் கருதிக் கொள்கிறோம். உண்மையில் உடல், மனம், புத்திக்கு ஏற்படும் எதுவுமே ஆத்மாவை பாதிப்பதில்லை. அழிவற்ற ஆத்மாவினால்தான் உடலும், மனமும், புத்தியும் இயங்குகின்றன.

பகவான் கிருஷ்ணர் கீதையில், 'ஆத்மாவை ஆயுதங்கள் வெட்டாது; தீ எரிக்காது; நீர் நனைக்காது; காற்று உலர்த்தாது; அது எங்கும் நிறைந்து சலனமில்லாமல் நிலையாக என்றும் இருப்பது' என்று சொல்கிறார்.

இத்தகைய மேன்மையான ஆத்மாவை மறந்து விட்டு, நமது உடல், மனம், புத்தி ஆகியவற்றின் தேவைகளை மட்டும் நாம் நிறைவேற்றுவதற்கு முயற்சி செய்கிறோம். இதற்குக் காரணம் என்ன? நாம், நம்மை உடலாகவும், மனமாகவும், புத்தியாகவும் தவறாக எண்ணிக் கொள்வதேயாகும். அதன் காரணமாக, நம்முள்ளே பற்பல ஆசைகள் தோன்றுகின்றன. அவை எல்லாவற்றையும் நிறைவேற்ற நம்மால் முடிவதில்லை. ஆனால் ஆசைகள் நம்மை விட்டு நீங்குவதில்லை. நிறைவேறாத ஆசைகளால் நாம் அளவில்லா அல்லல்களுக்கு உள்ளாகிறோம்.

வருங்காலம் எவ்வாறு இருக்க வேண்டும் என்று நாம் மனக்கோட்டை கட்டுகிறோம். ஆனால் நாம் எதிர்பார்க்கிறபடியெல்லாம் நடப்பதில்லை. நாம் இப்படிப்பட்டவரைத்தான் திருமணம் செய்துகொள்ள வேண்டும் என்று நினைப்போம். வேலை பார்க்கிற இடத்தில் இப்படியெல்லாம் மேல் நிலைக்கு உயர வேண்டும் என்று விரும்புவோம். நமது குழந்தைகள் மிக நன்றாகப் படித்து, உயர்கல்வி கற்று வாழ்க்கையில் மிகவும் சிறந்து விளங்க வேண்டும் என்று எதிர்பார்ப்போம். இவையெல்லாம் நிறைவேறாவிட்டால் நாம் துன்பப்படுகிறோம்.

நாம் எந்த ஒருவர் மீதும், எந்த ஒரு பொருள் மேலும் பற்று வைப்பதும் துக்கத்துக்குக் காரணமாகிறது. உதாரணமாக நமக்கு செல்வத்தின் மீது அதிகமான பற்றுதல் இருக்கலாம். அந்த நிலையில் நமது கார் திருட்டுப் போய் விட்டாலோ அல்லது நம்மிடம் இருக்கும் ஷேர்களின் மதிப்பு பங்கு மார்க்கெட்டில் சரிந்துவிட்டாலோ அல்லது வேறு ஏதாவது ஒரு விதத்தில் நமக்குப் பொருள் நஷ்டம் ஏற்பட்டாலோ நாம்



அன்பெனும் மழையிலே...

ஒரு பூ... இரு மனம்!

மிகுந்த துக்கத்துக்கு ஆளாவோம்.

சுயநலம், காமம், கோபம், பேராசை, பொறாமை போன்ற பொருந்தாத இயல்புகளால் நாம் தவறாக முடிவுகள் எடுக்கலாம். அதனால் தகாத செயல்களில் ஈடுபடலாம். அதன் பலனாக நமக்கு மன உளைச்சலும், துயரமுமே மிஞ்சும்.

இவற்றின் மூலமாக, நமது துன்பங்களுக்கு நாமே காரணம் என்பது தெளிவாகிறது. இறைவன் நமக்கு ஒருபோதும் துன்பத்தைத் தருவதில்லை. இறைவனின் படைப்பான இந்த உலகம்



10 மாதா அமிர்தானந்தமயி

அழகானது. நம் மனமும், செயல்களும்தான் இந்த உலகத்தைப் பாழ்படுத்தி விடுகின்றன. இதனை விளக்குவதற்கு அம்மா ஒரு கதை சொல்வதுண்டு.

ஒருநாள் மாலை நேரம் பூங்கா ஒன்றில் இரண்டு இளைஞர்கள் அமர்ந்திருந்தனர். அவர்களுக்கு எதிரே ரோஜாச் செடிகள் பூத்துக் குலுங்கிக் கொண்டிருந்தன. அதனைப் பார்த்த ஒரு இளைஞன், "ஆஹா! எவ்வளவு அழகான ரோஜாப் பூக்கள்! என்னுடைய காதலிக்கு ஒரு ரோஜாப் பூவைக் கொடுத்தால் அவள் மிகவும் மகிழ்ச்சி அடைவாள். அவள் முகமும் ரோஜாப் பூவைப் போல மலரும்" என்று மனத்தில் சந்தோஷமாக நினைத்துக்

கொண்டு அமர்ந்திருந்தான்.

இன்னொரு இளைஞன், "நான் காதலித்த பெண்ணுக்கு இதுபோல எத்தனை அழகான ரோஜாப் பூக்களைக் கொடுத்து என்னுடைய அன்பை வெளிப்படுத்தினேன்? ஆனால், அவளோ என்னை உதாசீனப் படுத்திவிட்டு வேறு ஒருவனைத் திருமணம் செய்துகொண்டு என்னை ஏமாற்றிவிட்டாளே? அவள் என்னை ஏமாற்றியதை எப்படி என்னால் மறக்க முடியும்? அவளுடைய துரோகத்தை என்னால் எப்படி மன்னிக்க முடியும்?' என்று மனம் வெதும்பினான். ஏமாற்றமும், அவமானமும் அவனை மிகவும் வாட்டின. தன்னுடைய உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்த முடியாதவனாய், எழுந்து அந்த ரோஜாச் செடிகளுக்கு அருகில் சென்றான். வேகமாக மலர்களைப் பிய்த்துக் கசக்கிக் கீழே எறிந்தான். கால்களால் ஆத்திரம் தீர மிதித்து நசுக்கினான். அப்படியும் அவனுடைய ஆத்திரம் அடங்கவில்லை.

ஒரே ரோஜாப்பூதான். ஆனால் இரண்டு பேர் மனத்திலும் அது ஏற்படுத்திய உணர்வுகள் நேரெதிராக அமைந்தன. நமது சுதந்திரத்துக்குத் தடையாகவும், பந்தத்துக்குக் காரணமாகவும் இருப்பது நம்முடைய மனமே ஆகும். நமது வாழ்வில் அமைதியும், ஆனந்தமும், முக்தியும் கிடைக்க வேண்டுமானால் நமது மனத்தை நாம் கட்டுப்படுத்திச் சீரானதாக ஆக்க வேண்டும்.

நம்முடைய சொந்த முயற்சியால் மட்டும் இதனைச் சாதித்து, துன்பத்திலிருந்து விடுபட்டு, ஆனந்தத்தைப் பெறுவது என்பது மிக அரிதானது ஆகும். ஆனால், ஒரு சற்குருவின் மூலமாக அது சாத்தியம். அவர் நமக்குத் துன்பம் தரும் பொருத்தாத இயல்புகளையெல்லாம் நமது மனத்திலிருந்து நீக்குவதற்குத் துணை புரிவார். நம்முடைய வாழ்வை ஆனந்தப் பூங்காவாக ஆக்கிடுவார்.

(அன்பு பெருகும்)



அம்மா

ஒருநாள் உப்பங்கழிப் பகுதியில் சுதாமணி உணர்வின்றி சகதி நிறைந்த மணலில் படுத்திருந்தார். கண்களில் கண்ணீர். அவரைக் கண்டவர்கள், அவரது வீட்டுக்குப் போய் அவருடைய தந்தை சுகுணானந்தரிடம் விஷயத்தைச் சொன்னார்கள். ஆனால் அவரோ, அது குறித்துக் கவலைப்படவில்லை. கடைசியில், ஊர் மக்களே அவரைத் தூக்கிக்கொண்டு வீட்டுக்குப் போய், அங்கிருந்த ஒரு கட்டிலில் படுக்க வைத்தனர்.

சிறிது நேரத்தில் வீடு திரும்பிய அண்ணன் சுபகன், "இந்தச் சனியனை, என் கட்டிலில் யார் படுக்க வைத்தது?" என்று கூச்சல் போட்டு, கட்டிலை உடைத்துவிட்டான்.

உடைந்த கட்டிலுக்கு மத்தியில் சுதாமணி சுய நினைவு இல்லாமல் இருந்தார். நினைவு திரும்பியதும், நடந்த சம்பவங்களைக் கேள்விப்பட்டு, "எல்லாம் நன்மைக்கே" என்றார்.

மறுநாள் தச்சு வேலைக்காரர் ஒருவர், ஒரு கட்டில், மேஜை, நாற்காலி மூன்றையும் கொண்டு வந்து சுதாமணிக்குக் காணிக்கையாகக் கொடுத்தார். பகவான் கிருஷ்ணர், தன் கனவில் வந்து சுதாமணிக்கு இவற்றைக் கொண்டுவந்து கொடுக்குமாறு ஆணையிட்டதாகக் கூறினார்.

- மௌலி

அருள்வாக்கு

வரதட்சணை!



நாம் ஊதாரித்தனமாக செலவு செய்து பிறரையும் இந்த வழியில் போவதற்குச் சபலப்படுத்திக் கடனாளியாக்குவது தப்பு என்றால், நாம் எந்தச் செலவும் செய்யாமல், இன்னொருத்தனை நம் பொருட்டாகவே பெரிய செலவுக்கு ஆட்படுத்திக் கடனாளியாக்குவதோ அதைவிடத் தப்பு, பாபம் என்றே சொல்லணும். வரதக்ஷிணையாலும் படாடோபக் கல்யாணத்தாலும் எத்தனையோ குடும்பங்களைக் கடனாளியாகப் பண்ணியிருப்பது நம்முடைய ஸமுதாயத்துக்கே பெரிய அவமானம். வைதிக அம்சங்களுக்கு மாத்திரமே முக்யத்துவம் தந்து கல்யாணச் செலவை எவ்வளவுக்கெவ்வளவு குறைக்க முடியுமோ அப்படிப் பண்ணி, டாம்பீகமே இல்லாமல் ஸிம்ப்ளிஃபை செய்ய வேண்டும் என்று நானும் ஓயாமல் சொல்லிக்கொண்டே தானிருக்கிறேன். கேட்கிறவர்கள்தான் அபூர்வமாயிருக்கிறார்கள். வரதக்ஷிணையும் சீர்செனத்தியும் கேட்பது பாபம் என்கிற உணர்ச்சி பிள்ளையைப் பெற்றவர்களுக்கு உண்டாக வேண்டும்.

எல்லா தானங்களையும்விட 'வரதக்ஷிணை' என்று அதிகாரப் பிச்சையாகத் தானம் வாங்குவதை நிறுத்துவதுதான் பெரியதானம் என்று எனக்குத் தோன்றுகிறது. மற்றதெல்லாம் ஒரு பீரியட்டுக்கு (காலகட்டத்துக்கு) மட்டும்தான் பயனாவது வரதக்ஷிணையோ இன்றைக்கு ஒருத்தனுடைய வாழ்நாள் முழுதையும் (பெண்ணைப் பெற்றவனைத் தான் சொல்கிறேன்) பாதிப்பதோடு, எதிர்காலம் பூராவுக்கும் நம்முடைய சாஸ்திரீயமான வாழ்க்கை முறையையும், சாச்வதமான ஸ்திரீ தர்மத்தையும் பாதிப்பதாக இருக்கிறது. ஆனபடியால் வரதக்ஷிணை வாங்காமலிருப்பது நிரந்தர தர்ம தானம் என்று சொல்லலாம்.

- ஜகத்குரு
காஞ்சி காமகோடி
ஸ்ரீ சந்திரசேகரேந்திர
சரஸ்வதி சங்கராச்சார்ய
சுவாமிகள்

பாசக் கதை – 2

புழுக்கம்!

பாலு சத்யா

வேதாச்சலம் சட்டையைப் போட்டுக்கொண்டார். தரையில் அமர்ந்து, எங்கோ வெறித்துப் பார்த்துக்கொண்டிருந்த மரகதத்திடம், "நான் கெளம்பறேன் மரகதம்! நாளான்னிக்கி காலையில வந்துடுவேன்" என்று மஞ்சள் பையை எடுத்துக்கொண்டு வெளியில் வந்தார்.

சென்னை அசோக்நகர் விஜயா தியேட்டருக்குப் பக்கத்திலிருந்த ஒரு காம்பவுண்டு குடியிருப்புக்கு முன்பாக சைக்கிளை நிறுத்திப் பூட்டினார். உள்ளே நுழைந்து மூன்றாவதாக இருந்த ஒரு வீட்டு வாசலில் நின்று குரல் கொடுத்தார்.

"அருணாச்சலம்!"

அருணாச்சலம் வெளியே வந்தான்.

"அண்ணாச்சி! ஏன் வாசல்லயே நின்னுட்டீங்க? உள்ளார வாரது தானே?"

"இருக்கட்டும்ப்பா. சைக்கிளை வாசல்ல நிப்பாட்டியிருக்கேன். ஊருக்குப் போயிட்டு வாரப்ப எடுத்துக்கறேன்."

"லீவு சொல்லிட்டீங்களா?"

"சொல்லிட்டேன். மேனேஜரு ஒருநாள் லீவுதான் தருவேன்னு சொல்லிட்டாரு. என்ன செய்ய! நாளைக்கி சாயந்தரமே ஊருலருந்து அடிச்சி புடிச்சிகிட்டு கௌம்பணும். வர்றேம்பா" என்று நடக்க ஆரம்பித்தார்.

வேதாச்சலம் தனது ஐம்பதுகளின் முற்பகுதியில் இருந்தார். அவர் சென்னைக்குக் குடிபெயர்ந்து மூன்று மாதங்களாகின்றன. குழந்தை வரம் வேண்டி அவரும் மரகதமும் வேண்டாத தெய்வங்களில்லை. ஆனால் எந்தத் தெய்வமும் அவர்களுக்காக இறங்கவேயில்லை.

கும்பகோணத்துக்குப் பக்கத்திலிருந்த சிறிய கிராமத்தில் வாசம். இருக்க ஒரு வீடு, வீட்டைச் சுற்றி மா, புளிய மரங்கள். வீட்டுக்குப் பக்கத்திலேயே வாய்க்காலும், சிறிய குளமும். வேதாச்சலத்தின் தந்தை விட்டுவிட்டுப் போன ஓர் ஏக்கர் நிலத்திலிருந்து கிடைக்கும் வருவாய் அவருக்கும் மரகதத்துக்கும் போதுமானதாக இருந்தது.

திருப்பங்களில்லாத வாழ்க்கையில் சுவாரஸ்யமில்லை என்பதுபோல அவருடைய வாழ்க்கையில் திருப்பு முனையாக வந்து சேர்ந்தான் மூர்த்தி. வேதாச்சலத்தின் சித்தப்பா மகன். இருபது வருடங்களுக்கு முன்பு ஆந்திரா பக்கம் ஓடிப்போனவன், மனைவி, இரண்டு மகன்கள் என குடும்பத்தோடு திரும்பி வந்தான். "அந்த ஒரு ஏக்கர் நிலத்துல எனக்கும் பங்கு உண்டு. அது தாத்தா சொத்து" என்றான். பழைய பத்திரங்களையும், பேப்பர்களையும் எடுத்துக்கொண்டு போய் யார் யாரையோ பார்த்தான். வழக்கு போட்டான். ஜவ்வாக இழுத்துக்கொண்டு போகும் சொத்து

விவகார வழக்குகள் எத்தனையோ இருக்க, வேதாச்சலத்தின் மேல் தொடுக்கப்பட்ட வழக்குக்கு மட்டும் ஆறே மாதத்தில் தீர்ப்பு வந்தது. ஓர் ஏக்கர் நிலம் மூர்த்திக்குச் சேர வேண்டும் என்றும் வேதாச்சலம் இருந்த வீடு மட்டும் அவருக்கே சொந்தம் என்றும் நீதிமன்றம் உத்தரவிட்டது.



வேதாச்சலம் வேர்கள் பட்டுப் போன மரம் மாதிரி ஒடிந்து போனார். விவசாயத்தைத் தவிர அவருக்கு வேறு எந்த வேலையும் தெரியாது. விவசாயக் கூலியாக வேலைக்குப் போகவும் தயக்கமாக இருந்தது. பிறந்த மண், பார்த்துப் பேசி, பழகிய ஜனங்கள். அதே சமயம் சேமிப்பும் இல்லை. மரகதம் அந்தத் தீர்ப்புக்குப் பிறகு ஒரு புதிய முகத்தை அவருக்குக் காண்பிக்க ஆரம்பித்தாள். எதற்கெடுத்தாலும் எரிச்சல் பட்டாள். ஆங்காரப்பட்டாள். வார்த்தைக்கு வார்த்தை அவருடைய கையாலாகாதத்தனத்தைக் குறை கூறினாள். தெருக்கோடியில் இருக்கிறவர்களுக்கும் கேட்கிற மாதிரி கத்திப் பேசினாள். வருமானம் இல்லாமல் இனியும் பிழைக்க முடியாது என்ற சந்தர்ப்பத்தில்தான் அருணாச்சலம் அவருக்கு உதவினான். அருணாச்சலம் வேதாச்சலத்தின் நண்பர் மகன். சென்னையில் உள்ள ஒரு ஓட்டலில் வேலை பார்த்து வந்தான். அதே ஓட்டலில் வேதாச்சலத்துக்கும் வேலை வாங்கிக்கொடுத்தான். அவன் புண்ணியத்தில் ஒண்டுக் குடித்தனம், இருவேளை உணவு என வாழ்க்கையை ஒப்பேற்றிக் கொண்டிருந்தார் வேதாச்சலம்.

கும்பகோணத்துக்கும் தஞ்சாவூருக்கும் போகிற அத்தனை பேருந்துகளும் நிரம்பி வழிந்தன. பெரும் அவஸ்தைக்குப் பிறகு இரவு ஒரு மணிக்கு கும்பகோணம் கிளம்பும்

பேருந்தில் வேதாச்சலத்துக்கு நிற்பதற்கு இடம் கிடைத்தது. பேருந்ினுள் கம்பியைப் பிடித்து நின்றபடியும், நடைபாதை அழுக்கைப் பொருட்படுத்தாமல் தரையில் அமர்ந்தும் பயணித்து அவர் ஊர் வந்து சேர்ந்த போது ஒன்பது மணி வெயில் முகத்தில் 'சுள்'ளென்று அறைந்தது.

மாரியம்மாள் பாயை விரித்துப் போட்டாள். வேதாச்சலம் பையை சுவரோரமாக வைத்து விட்டு பாயில் அமர்ந்தார். வீட்டைச் சுற்றிப் பார்த்தார். கூரை உத்தரக்கட்டையில் அவர் பல வருடங்களுக்கு முன்பு தஞ்சாவூரில் வாங்கிய மரத்தொட்டில் இறுகக் கட்டப்பட்டிருந்தது. ஒரே வித்தியாசம் பனிச்சென்று அதை நன்கு துடைத்து வைத்திருந்தாள் மாரியம்மாள்.

'பரவாயில்ல! வீட்டைச் சுத்தமாத்தான் வச்சுருக்கா!"

"என்னாண்ணே! திடுதிப்புன்னு வந்துருக்கீங்க! நான்தான் வாடகைப் பணத்தை சேத்து அனுப்பறேன்னு கடுதாசி போட்டிருந்தேனே..."

"நான் வாடகைப் பணம் வாங்கறதுக்காக வரலை மாரியம்மா! மாமரம் காய்ச்சிருக்குன்னு எழுதியிருந்தேல்ல...? அதைப் பாத்துட்டுப் போலாம்னு வந்தேன்..."

"அப்பிடியா! இருங்க தண்ணி கொண்டு வாரேன்."



"சொம்புல குடிச்சாலும் காவேரித் தண்ணி காவேரித் தண்ணிதான்..."

கழுத்தில் வழிந்தோட அந்தப் பித்தளை சொம்புத் தண்ணீர் முழுவதையும் குடிக்க குடிக்க, வேதாச்சலத்தின் மனதுக்குள் ஒரு நிம்மதியும் பரவசமும் கலந்து இறங்கியது.

"அக்கா நல்லாயிருக்குதா?"

"என்னிடம் தங்களுக்குப் பிடித்தது என் அறிவா, அழகா, அடக்கமா... அமைச்சரே?"

"இப்படி இல்லாததையெல்லாம் இருப்பதாக நினைத்துக் கற்பனையாகப் பேசும் தங்களின் பேச்சுத் திறன்தான் எனக்கு மிகவும் பிடித்தது மன்னா!"

- கே.எஸ். கிருஷ்ணவேணி

"ம்... இருக்கா!"

வேதாச்சலம் வீட்டைச் சுற்றிக் கொண்டு போனார். புளிய மரத்தில் இப்போதுதான் காய்விட ஆரம்பித்திருந்தது. மாமரத்தில் அவர் எதிர்பார்த்ததுபோல அவ்வளவு காய்கள் இல்லை.

"என்ன மாரியம்மா, மாங்கா ஒரு மூட்டைகூட தேறாதுபோல இருக்கு?"

"ஆமாண்ணே! பாதி காயி பூச்சி கடிச்சி கீழ விழுந்துடுச்சு. பகல்ல சின்னப்பசங்க வேற வந்து வந்து பறிச்சிட்டுப் போயிர்றாங்க. நானும் வயக்காட்டுக்குப் போயிர்றேனா... யாருன்னு கண்டுபிடிக்க முடியல. அப்படியே யாருன்னு தெரிஞ்சாலும் சண்டைக்கிப் போக முடியுமா? ஒண்டிக்கட்டை... ஆதரவுக்கு யாரும் இல்லாதவ. உனக்கென்னாடி அனாதை நாயின்னு என்கிட்டதான் சண்டை பிடிப்பாங்க..."

வேதாச்சலம் ஆற்றில் போய் குளித்துவிட்டு மாரியம்மாள் கடச்சுடப் போட்ட கருவாட்டுக் குழம்பையும் சோற்றையும் ஒருபிடி பிடித்தார். மாமரத்தடி நிழலில் கயிற்றுக் கட்டிலைப் போட்டு படுத்தார். உடனே தூங்கிப் போனார்.

அருணாச்சலம் காம்பவுண்ட் வாசலில் நின்றிருந்தான். வேதாச்சலத்தைத் தூரத்தில் பார்த்ததுமே கையாட்டி சிரித்தான்.

"உங்களத்தான் அண்ணாச்சி பாத்துக்கிட்டு இருந்தேன். ஒம்பது மணி டுட்டி... மணி ஏழாவுதே! இன்னும் காணமே. நீங்க வரலைன்னா மேனேஜர்கிட்ட என்னா சொல்றதுன்னு யோசிச்சுக்கிட்டு இருந்தேன்."

"பஸ்ஸு எடையில பிரேக் டவுனாயிடுச்சுப்பா."

"ம்..சரி... எவ்வளவு தேறுச்சு?"

"என்னாதுப்பா?"

"அதான் அண்ணாச்சி... 'ஊர்ல மாங்கா காய்ச்சிருக்கு... எப்படியும் நாலஞ்சு மூட்டை தேறும். வித்துட்டு பணத்தோட வருவேன்'னு சொன்னீங்களே..."

"அட நீ வேறப்பா... ஒரு மூட்டை கூட தேறலப்பா. பூச்சி கடிச்சி கீழே விழுந்தது கொஞ்சம், ஊர்க்காரங்க பொறுக்கிட்டுப் போனது கொஞ்சம். மீதிதான் எனக்கு..."

"ஒரு மூட்டைதானா? எவ்வளவுக்கு வித்தீங்க?"

"நூறு ரூபா பேசி, எழுவத்தஞ்சுக்கு வித்தேன்..."

"வெறும் எழுவத்தஞ்சுதானா?"

"ஆமா."

"என்ன அண்ணாச்சி! இதுக்காகவா இம்புட்டு தூரம் செலவழிச்சிட்டுப் போனீங்க?"

வேதாச்சலம் தலையைக் குனிந்து கொண்டார்.

"என்ன அண்ணாச்சி! அண்ணி சொல்றது சரிதான் போல இருக்கு. மெட்ராஸ்ல குடும்பம் நடத்துறவுங்க இப்பிடி பொறுப்பில்லாம இருக்கலாமா? நீங்க வாங்குற சம்பளத்துக்கு இதெல்லாம் கட்டுப்படி ஆகுமா? இந்த ஒரு நாளு ஊருக்குப் போயிட்டு வந்த செலவு எப்படியும் முந்நூறு நானூறு இருக்காது?"

வேதாச்சலம் அவனைப் பாவமாகப் பார்த்தார். "அருணாச்சலம்! அது இல்லப்பா. எனக்கு மெட்ராஸு புதுசு. ஜன்னலுகூட இல்லாத நாலு சொவுத்துக்குள்ள புழுக்கத்தோட புழுக்கமா இருந்து பழகாதவன். கிராமத்துலயே பொறந்து வளர்ந்த கட்டை. நம்ம ஊரு, நம்ம மண்ணு, நம்ம தண்ணி, நம்ம தெருக்காத்து, நம்ம மனுசங்க... இதையெல்லாம் ஒருதடவை பாத்துட்டு வந்தா பரவாயில்லன்னு இருந்துச்சி. அதான் மாங்காவ சாக்கா வச்சு கெளம்பிட்டேன். இப்ப தெம்பா இருக்கு. இன்னும் மூணு மாசத்துக்கு இது தாங்கும்!"

அருணாச்சலம் அவரை வினோதமாகப் பார்த்தான்.

"அருணாச்சலம்! வீட்டுப் பக்கம் வந்தின்னா மரகதத்துகிட்ட ஒரு மூட்டை மாங்காதான் காய்ச்சதுன்னு சொல்லிராத. நான் நாலு மூட்டைன்னு சொல்லப் போறேன். எப்பிடியாவது அவளைச் சமாளிச்சுக்கறேன். வரட்டுமா?" என்றார்.

அருணாச்சலம் இன்னமும் அவரையேதான் பார்த்துக் கொண்டிருந்தான். ○

"உங்கள் உடம்பில் எடை குறைய தினம் இரண்டுவேளை இந்த முந்நூறு மாத்திரைகளை நீங்கள் கொட்ட வேண்டும்."

"ஓ! இதென்ன பிரமாதம்..."

"அதோடு கீழே குனிந்து ஒவ்வொரு மாத்திரையாகப் பொறுக்க வேண்டும்..."

– ரவிகணேசன்



கவிஞர்
பூங்காற்று
தனசேகரை
பூங்கா ஒன்றில்
மடக்கி, 'மனதோடு
மழைக்காலம்'
படத்தின் நாயகி
நித்யாதாஸின் சில
புகைப்படங்களைக்
காட்டி அப்பொழுதே
காதல் கவிதை எழுதச்...



நாக்கு பேசும் நாட்டில்
வர்ணனை பேசும்
மாநிலத்தில்
விழிகள் பேசும்
மாவட்டம் அழைத்து வந்து
புன்னகை பேசும் வீதியில்
இதயங்கள் பேசும்
வீட்டினுள் அமர்ந்து
மௌனப் பேச்சு பேசுகிறாய்
பதிலுக்கு
நானென்ன பேச?

வெ
என்
காத்
வெ
என்
உன்
அத
னை



சீக்கிரமாக நீ
கிளம்பிவிட்ட அன்று
நீ அமர்ந்திருந்த
புற்களின் மீது
இடம் மாற்றி கொஞ்ச
அமர்ந்திருந்தேன்.
மறுநாள்
புற்கள்
பூப்பூத்திருந்தன.

நாமினெ

...ண்டோடும்
...னக் குதிரையின்

...பாட்டேன்

...ிப்பு
...கர நாற்காலியில்
...தள்ளிப் போகிறது.



• ஞானசேகர்



...பேச?

...சொன்னோம்.
மிரண்டு விடுவார்
என்று பார்த்தால்,
நம்மை மிரள வைத்து
கவிதைகள் சொல்லத்
துவங்கிவிட்டார்.
காதல் கசிந்துருகும்
அவரின் கவிதைகள்
உங்கள் பார்வைக்கு!

உன்னைவிட
அழகான பெண்கள்
நம்மைக் கடக்கையில்
நீ என் கைகளையும்...
என்னைவிட
அழகான ஆண்கள்
நம்மைக் கடக்கையில்
நான் உன் கைகளையும்
இறுக்கிக் கொள்வதன்
காரணம்
என்னவாயிருக்கும்?

மனிதர்களை தேவர்களாக்கக் கூடிய சிறந்த உணர்ச்சிகளுள் தலை சிறந்தது காதல். வாழ்க்கையில் சிறிது காலமாவது அதை அனுபவித்தவர்கள் இனிய சுபாவமும் தாராள மனமும் கொண்டவர்களாயிருப்பார்கள். அந்த உணர்ச்சியை அனுபவித்து அறியாதவர்களோ, அசூயையும் துவேஷமும் பொங்கும் உள்ளத்தினராய் எப்போதும் கடுகடுப்பாகவே இருப்பார்கள்.

குடும்பங்களில் சில மாமியார்கள் தங்கள் நாட்டுப் பெண்களை அன்பும் ஆதரவுமாய் நடத்துவதையும், வேறு பலர் நாட்டுப் பெண்களின் வாழ்க்கையே நரகமாகும்படி கொடுமை செய்வதையும் காண்கிறோம். நன்கு ஆராய்ந்து பார்த்தால், அன்பாக நடத்தும் மாமியார், தன் வாழ்க்கையில் காதலனுபவித்தவளென்றும், கொடுமைக்கார மாமியார் அவ்வுணர்ச்சியை அறியாதவள் என்றும் தெரிய வரும்.

மனுஷ்யர்களுடைய சுபாவம் முழுவதுமே காதல் உணர்ச்சியினால் மாறுபடுகிறது. அது அவ்வளவு முக்கிய உணர்ச்சியாயிருப்பதனால்தான் பெர்ட்ரண்டு ரஸ்ஸல் போன்ற இக்காலத்துப் பேரறிஞர்கள் சிலர், காதலுக்காக மற்ற சட்ட திட்டங்களையெல்லாம் உடைக்கலாமென்றும், கல்யாண பந்தம் உள்பட சமூக சமய விதிகளையெல்லாம் புறக்கணிக்கலாமென்றும் அபிப்பிராயப்படுகிறார்கள். இப்போதும் இவ்வாறு சமூக சமய விதிகளைப் புறக்கணித்துச் செல்லும் காதலர்களைப் பற்றி நாம் சில சமயம் கேள்விப்படுகிறோம். அதன் பலனாக அவர்கள் பல கஷ்டங்களுக்கு உள்ளாகிறார்கள். ஆனால், சமூக விதிகள் சரியாக மாற்றியமைக்கப்படும்போது காதல் அத்தகைய கஷ்டங்களுக்கு உள்ளாக அவசியம் நேராது. காதலில்லாத கல்யாணங்களுக்குத்தான் அப்போது நிர்ப்பந்தங்கள் ஏற்படுத்துவார்கள்.


ஆகவே, இலட்சிய விவாகத்துக்கு முதல் நிபந்தனை காதல். அது மட்டும் போதுமா? கல்யாணத்துக்கு முந்தியோ, பிந்தியோ காதல் கொண்ட தம்பதிகளின் மணவாழ்க்கை இறுதி வரையில் சந்தோஷமாயிருக்குமா? நிச்சயமில்லை.

காதலில் ஒரே ஒரு குறை உண்டு. அதில் தேக தத்துவமும் கலந்திருக்கும் காரணத்தினால் அது நெடுங்காலம் நீடித்து நிற்பதில்லை. நாளடைவில் அதனுடைய வலிமை குன்றி விடுகிறது. அதற்குப் பிறகும் மண வாழ்க்கை சந்தோஷமாய் நடக்க வேண்டுமானால் இன்னும் சில நிபந்தனைகளும் நிறைவேற வேண்டும்.

இந்நாளிலேகூட சில சமயம் அதிசயமான 'காதல் சம்ப'வங்களைப் பற்றி நாம் கேள்விப்படுகிறோம்.

நல்ல கௌரவமான நிலையிலுள்ள ஒருவர் - ஐம்பது வயதானவர் - பிள்ளை குட்டிகள் ஏராளமாய் உள்ளவர், திடீரென்று யாரோ ஒரு ஸ்திரீயின் மோக வலையில் விழுந்து விட்டாரென்றும், அவள் சொன்னபடியெல்லாம் ஆடுகிறாரென்றும் கேள்விப்படுகிறோம். ஊரெல்லாம் அவரைப் பார்த்துச் சிரிக்கிறது. ஆனால், அவர் என்னமோ ஏழாவது சொர்க்கத்தில் வாழ்கிறார். யாராவது ரொம்பத் தெரிந்தவர்கள் நெருங்கிக் கேட்டால், "கல்மிஷம் உங்கள் மனத்திலேதான் இருக்கிறது. நீங்களும் நானும் சிநேகம் இல்லையா? அதுபோல் ஒரு பெண்மணியிடம் சிநேகமாய் இருந்தால் அதை மட்டும் ஏன் சந்தேகிக்கிறீர்கள்?" என்று பதில் சொல்கிறார்.

சமீபத்தில் இன்னொரு சம்பவம் கேள்விப்பட்டேன். அறுபது வயதான கிழவர் ஒருவர் - தலையில் மாதிரிக்குக்கூட ஒரு கறுப்பு மயிர் கிடையாது -





காதல் குறை!

அவர், ஒரு தாஸி வீட்டுக்குப் போய் வருகிறார் என்று சொன்னார்கள். இதனால் அவருக்குக் கடன் மிஞ்சிச் சொத்தெல்லாம் போய்விட்டது. ஆனால் அவர் என்னமோ சந்தோஷமாகத்தான் இருந்தார்.

இதெல்லாம் காட்டுவதென்ன? மேற்சொன்ன புருஷர்கள் தங்கள் மனைவிகளிடம் அடையாத 'தோழமை'யை வேறு ஸ்திரீகளிடம் அடைகிறார்கள் என்பதுதான்.

அந்தக் கிழவர்களுடைய 'காத'லில் தேக தத்துவம் அதிகமாயிருக்க முடியாது; அதில் மனோதத்துவந்தான் அதிகமாயிருக்க வேண்டும். தங்கள் மனைவியிடம் 'அறிவுத் தோழமை'யை அவர்கள் அடையாததுதான் அவர்களுடைய விபரீதப் போக்குக்குக் காரணம் என்று சொல்லலாம்.

ஆகவே, ஸ்திரீ புருஷர்களுக்குள் அறிவு நிலையிலுள்ள வித்யாசத்தை ஒழித்தல் இலட்சிய விவாகத்துக்கு மிகவும் அவசியம். ஒரு திருப்திகரமான அம்சம் என்னவென்றால், நமது ஸ்திரீகள் ஏட்டுக் கல்வியில் புருஷர்களுக்குப் பின் நிற்கிறார்களென்றாலும், கலை உணர்ச்சியிலும், ரஸிகத் தன்மையிலும் ஏறக்குறைய ஒத்த நிலையில் இருக்கிறார்கள். ஏட்டுக் கல்வியிலுள்ள வித்தியாசத்தை ஒழிப்பது அவ்வளவு கஷ்டமல்ல; கொஞ்சம் பலமான முயற்சி செய்தால் சீக்கிரம் வெற்றி பெறலாம்.

- வானதி பதிப்பகத்தின்
'கல்கி களஞ்சியத்திலிருந்து'...

2

■ படுதலம் சுகுமாரன் ■



பெருமாள் - ஜெகதா தம்பதிக்கு மூணு ஆம்பளைப் பசங்க. முதல் தாரத்துக்கு பொறந்த பொண்ணோடு சேர்ந்து நாலு பேர்.

அதில் ஓரளவுக்குப் படிச்சவன் பெரியவன் குணசேகர். பன்னிரண்டாவது வரைக்கும் படிச்சிட்டான். ரெண்டாவது பையன் ரவிக்கும் கடைசிப் பையன் கனகராஜுக்கும் எட்டாவதுக்கு மேல் எட்டவில்லை.

பொண்ணு வயசுக்கு வந்ததும், நாலு பவுன் நகை போட்டு அசலூரில் கட்டிக் கொடுத்தனர். ரொம்பக் கம்மியா நகை போட்டதா அந்தப் பொண்ணு கற்பகத்துக்கு ரொம்ப மனத்தாங்கல்.

அப்பன்கிட்ட சண்டை போட்டுச்சு.

"அதையாவது போட்டமே... அதை பார்த்துக்க. இன்னும் ஆடி, நோம்பு, தலைப்பிரசவம்னு ஆயிரத்தெட்டு இருக்கு. அதுக்கெல்லாம் செய்யணும். எனக்குத்தான் பொறந்த வீடும் புகுந்த வீடும் ஒண்ணாப் போய், செலவில்லாம போச்சு. உனக்கு அப்படியா? என்னைப் போல ரெண்டாந்தாரமாவா போற... சின்னப் பையனா பார்த்துத் தானே கட்டி வைக்கறம். அவங்களே வாயைத் தொறந்து ஒண்ணுங் கேட்கல... போட்டத வச்சிக்கிட்டு ஒழுங்கா வாழப் பாரு..." என்று அனுப்பி வைத்தாள் ஜெகதா.

இந்தச் சம்பவத்துக்குப் பின், பகிரங்கமாகவே சித்தி மீது கோபமானாள் அவள்.

போன இடத்திலும் பொருந்தியிருக்க முடியவில்லை. ஏதாவது ஒரு தகராறு பண்ணிக்கொண்டு மாசத்துக்கு ஒருமுறை வந்துவிடுவாள். பின்னாலேயே புருஷன்காரன் வருவதும் சமாதானம் பண்ணிக் கூட்டிப் போவதுமாக இருந்தது. ஒரு கட்டத்தில் கைக்குழந்தையோடு மொத்தமாக வந்துவிட்டாள்.

'திரும்பி வந்தவ' என்றே அவளுக்குப் பேராகிப்போச்சு.

ஜெகதா அவள் புருஷன் பெருமாள், அவங்களுடைய மூணு பையன்கள், முத்தம்மா, இவங்களோட நிரந்தரமா வந்து சேர்ந்துட்ட கற்பகம், அவ கொழந்தைன்னு மொத்தம் எட்டு உருப்படிகளாகி விட்டதில் அந்த ஓலை வீட்டில் இடம் போதவில்லை.

கிழித்துப்போட்ட வேட்டி துண்டு போல நீளவாக்கிலான மண் வீடு அது.

தெற்குத் தெரு



4

வாரத் தொடர்

மழைச்சாரல் அடிக்கும்னு தெற்கு வடக்கு பக்கங்களில் மட்டும் ஒற்றைக்கல் வரிசையாக செங்கல் அணைப்பா சேர்த்துக் கட்டினது. மூங்கில் கழிபோட்டு, மேலே தென்னங்கீற்று பாவியது.

உள்ளே மூன்று பாகமாக தடுத்து உள்ளறை, ஒரு அறை, முன்னறையாக்கியிருந்தார்கள்.

மாடு, கன்னு கட்றதுக்கு வீட்டுக்குப் பின்னால தாழ்வாரம் இறக்கினாள் ஜெகதா.

அதுக்குக் கொஞ்சம் தள்ளி, வேலிப் படர் போட்டு கோழிகளை மூடி வைக்கவும், ரெண்டு ஆடுகளைக் கட்டி வைக்கவும் இடம் பண்ணியிருந்தாள்.

அதுக்கும் பின்னே வைக்கோல் போர்.

அதையும் தள்ளி குப்பை கொட்டுற இடம். அதுக்கும் பின்னேதான் இயற்கை உபாதைக்கு ஒதுங்கறது.

இப்படி தெரு வாசல்லருந்து குப்பைக் குழிவரை தாராளமாக இருந்த இடத்தில் பெருமாள் வந்து சேர்ந்தபோது ஒரு பாதிப்பும் இல்லை.

அவன் ஒரு நாளும் வீட்டுக்குள் வந்ததில்லை. ஏர்கலப்பை, அருவா, மண்வெட்டின்னு தட்டு முட்டு சாமான் போட்டு வைக்க ஏற்படுத்திய தட்டி மறைப்பில் தான் மழை நாள்ல படுப்பான்.

மத்த நாள்ல, வெளித் திண்ணைதான். இல்லேன்னா, தெருமுனைக் கோயில் படிதான்.

அவனுக்கொரு கல்யாணம் பண்ணி வச்ச பிறகு மூணு அறையில் ஒண்ணை ஒதுக்கிக் கொடுத்தாள்.

அவங்க அதிலே இருந்துக்கிட்டாங்க. அவன் சம்சாரம் செத்து, ஜெகதாவைக் கட்டினப்புறமும் இடம் பிரச்னை இல்லை. பெருமாளுக்குத் தனி ரூம் ஒதுக்க வேண்டிய அவசியமில்லாம போச்சு.

மூணு கொழந்தைங்க பொறந்து, மூத்தவ மகளும் இருந்தப்ப... வீடு கல கலன்னுதான் இருந்ததே தவிர, நெருக் கடியா ஒண்ணுந்தெரியல.

புள்ளைங்கெல்லாம் வளர்ந்துட் டாங்க...

பொட்டி மாதிரி சின்ன வூட்ல பதுங்க அவங்க சங்கடப்பட்டாங்க.

பொம்பளைங்க உள்ளே இருக்க விட்டு அங்கங்கே திண்ணைகள்ல போய் உறங்க ஆரம்பிக்கவும் ஜெகதாவுக்கு யோசனை வந்தது.

'இப்பவே இப்படின்னா... நாளைக்கு இவனுங்களுக்கு கல்யாணத்தைப் பண்ணி னால் எப்படிக் குடித்தனம் வைக்கறது...' என்று யோசித்தாள்.

"இருக்கற எடத் துலயே நிரந்து நிறைச்சிக் கறது. மூணு பையன் களுக்கு மூணு ரூமு..." என்றான் பெருமாள்.

"அப்புறம்... நீ, நானு, எங்க அம்மா, பெரிய பொண்ணு, அவகொழந்தை யெல்லாம் என்ன பண்றது? மாடு கன்னுங்கள எங்க கட்றது...?" என்றாள்.

வீடு ஒன்று கட்டியாக வேண்டிய நெருக்கடி ஏற்பட்டது.

தெற்குத் தெருவில் விசால இடம் பார்த்து வாங்கிவிட்டு, வீடுகட்டத் திட்டம் போட்டு, கல்லுக்கும் மண்ணுக் கும், கம்பிக்கும் சிமெண்ட்டுக்கும், மேஸ்திரிக்கும்னு காசு கணக்கு போட் டதில் மூணு லகரம் தேவைப்பட்டது.

பெருமாள் மட்டுமல்ல, முத்தம்மாள் கூட மிரண்டு போனாள்.

"சரிதான்... வீடு, வாசல், நிலம்னு எல்லாத்தையும் வித்தாக்கூட அவ்வளவு தேறாதே! இருக்கறத வித்து வீட்டைக் கட்டிப்புட்டு, சோத்துக்கு இல்லாம உட்காரணுமா..." என்று கேள்வி வந்தது.

"எதுக்கு விக்கணும்..." என்றாள் ஜெகதா.

"விக்காம... துட்டு... வானத்லருந்து கொட்டிருமா..."-பெருமாள்.

"கடன் வாங்கறது..."

"ஆயிரமா, ரெண்டாயிரமா... லட்சக் கணக்குல எவன் தருவான்..."

"உனக்கேன் அந்தக் கவலை... யார்கிட்ட பணம் இருக்குது, எப்படி வாங் கணும்னுங்கறத நான் பார்த்துக்கறேன்..."

"வட்டி கட்டியே மாளாதே..."

"திரும்பிப் பார்க்கறதுக்குள்ள கடன் அடையும். எம் மூணு புள்ளைங்களும் மூணு சிங்கக் குட்டிங்க. ஆளுக்கு லட்ச ரூபான்னு கணக்குப் போட்டு அடைப் பாங்க..." என்று சொடக்குப் போட்டாள்.

"என்னடா சொல்றீங்க..." என்றாள்.

தயங்கினார்கள் பையன்கள்.

"உங்கப்பனை மாதிரி தொடை நடுங்கியாடா நீங்க. ச்சீ... நான் ஊரெல் லாம் உங்களைப் பத்தி பெருமை பெரு மையா பேசிக்கிட்டு வர்றேன்... மாடிவீடு கட்டி உங்கள உட்கார வச்சு அழகு பார்க் கணும்னு ஆசைப்படறேன். பொட்டச்சி... எனக்கிருக்கற தைரியங்கூட உங்களுக்கில் லையா..." என்று துப்பினாள்.

பெரியவன் ரோஷமாக முன் வந்தான்.

"நீ ஒருத்தன் போதும்டா... ஊரையே ஜெயிச்சுப்புடுவேன்" என்றாள்.


பண வேட்டை நடந்தது.

"தாத்தா உங்களுக்கு வேர்க்கடலை சாப்பிடப் பிடிக்குமா?"

"பிடிக்காது"

"அப்ப இந்தக் கடலையை கொஞ்சம் வச்சி ருங்க. விளையாடிட்டு வந்து நான் வாங்கிக் கறேன்."

- ஆர். மணிகண்டன்



ஜெகதா நினைத்தது போல் அத்தனை சுலபமாயில்லை பணம் புரட்டுவது.

நிலப் பத்திரத்தை ஒருத்தரிடம் கொடுத்து லட்ச ரூபாய் வாங்கி வேலையைத் துவக்கினான்.

வெளியாள் அதிகம் பேரை வேலைக்கு வைக்கவில்லை.

முக்கியமாக மேஸ்திரி, உதவிக்கு ஒரு ஆள்போக, வீட்டில் இருந்த எல்லோரையும் விரட்டி, வேலை வாங்கினான். சமையல் பொறுப்பு கற்பகத்துக்கு. மாடு, கன்னு பார்த்துக்கறதுக்கு முத்தம்மா. பிள்ளைகளும், கணவனும் சேர்த்து நாலு பேரும் கல்லு மண்ணு சுமக்கறது, கலவை போடறது, கட்டட வேலை செய்யறது...

அள்ளிப் போட்டியா, கழட்டிக் கொடுக்கறதுக்கு. பிச்சைக்காரிக்குப் போடற மாதிரி ஒத்தை செயினும், கம்மலும் போட்டதே பெருசுனுட்டு, இப்ப எந்த மூஞ்சிய வச்சுக்கிட்டு அதை வந்து கேக்கறே... இதைக் கழட்டிக் குடுடின்னு கேட்டான்னுதான் ஆம்படையானே வேணாமுன்னு வந்தேன். ஏன், பூசுவேலை பண்ணலனா வூடு கோவிச்சுக்குதா..." என்றாள் கற்பகம்.

"அடியே... ஊரெல்லாம் கடன்பட்டு வூடு கட்றேன். அம்மாத்திரம் ஒரு நகைக்கு இந்தப் பேச்சு பேசறியே! நீ மட்டும் எந்த மூஞ்சை வச்சுக்கிட்டு இந்த வீட்ல வாழ்வே! நீ மட்டும் புருஷன் வீட்ல ஒழுங்கா குப்பை கொட்டியிருந்தின்னா... உன்னைக் கையால புடிச்சிருக்க முடியுமா...! ஆட்டுக்கு வாலை அளந்துதான் வச்சாண்டி ஆண்டவன். வச்சுக்க. அந்த நாலு பவுன் நகைல நீ வாழ்ந்து, உன் குழந்தையையும் எப்படி வளர்க்கறேன்னு பார்க்கறேன்..." என்று பாய்ந்தான் ஜெகதா.

> "நம்ம ஜான்ஸி சரியான ஜம்பம் பிடிச்சவ!"
>
> "ஆமாண்டி, வைரத்தோடு போட்ட காது வலிக்கறதால ஒரு நாள் லீவு வேணும்னு எழுதியிருக்காளே!"
>
> - தமிழ்நாயகி



பண விவகாரம், மத்த வேலை மேற்பார்வைன்னு தான் கவனிச்சுக்கறதுன்னும் முடிவு பண்ணினான் ஜெகதா.

லட்சத்தை விழுங்கிவிட்டு... அப்புறம்... என்று வாயைத் திறந்தது வீடு.

ரெண்டு ரூபாய் வட்டிக்கு இன்னொரு லட்சத்தைப் புரட்டிவந்து கொட்டினான்.

கிடுகிடுவென வளர்ந்து தளம் போடும் நிலையில் தடுமாறியது.

குடியிருந்த ஓலை வீட்டை விலை பேசியும், கட்டிக் கொண்டிருக்கும் வீட்டின் பேரிலும் பணம் வாங்கி தளம் போட்டு முடித்தான்.

பூசு வேலைக்கும், பெயிண்ட், கேட், சமையல் மேடையென்று உதிரி வேலைக்கும் ஒரு பத்தாயிரம் தேவைப்பட....

கற்பகத்திடம் வந்தான்.

"உன் நகையைக் குடுடி. சொச்ச வேலைகள முடிச்சுட்டு புதுசு வாங்கித் தர்றேன்..." என்று கேட்க,

"நான் தரமாட்டேன். அன்னிக்கு எனக்குக் கல்யாணம் பண்ணப்ப அள்ளி

கற்பகம் அப்பனிடம் அடைக்கலமானான். தம்பிகளிடம் தஞ்சம் கேட்டான். இந்த அமளிக்கு நடுவே மேலும் கொஞ்சம் பணம் புரட்டி முழு வேலைகளையும் முடித்து நிமிர்ந்தான் ஜெகதா.

புத்தம் புது வீடு. அவன் வெற்றியைப் பறைசாற்றியது.

(தொடரும்)

மேஷம்: எந்தக் காரியத்திலும் வெற்றி கிட்டும். தனம், குடும்பம், வாக்குவன்மை மேலோங்கும். குடும்ப வாழ்வு நன்றாக இருக்கும். வீடு/மனை வாங்க நல்ல காலம். புதிய முதலீடுகள் நன்மை அளிக்கும். உடல் ஆரோக்கியம் பாதிக்காது. உத்தியோகத்தில் பதவி உயர்வு, இடமாற்றம் ஏற்படும். புதிய வேலை வாய்ப்பு வந்து அணுகும். கணவன்- மனைவி உறவு நற்பலனை அளிக்கும். வெளிநாட்டு அழைப்பு கிட்டும். நண்பர் உறவினர்களால் ஆதாயம் கிட்டும். வியாபாரத்தில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். ஆஞ்சநேயர் வழிபாடு நற்பலனைத் தரும்.

ரிஷபம்: சத்ருக்கள் அழிவார்கள். வழக்கு வெற்றி தரும். உடல்நிலை தொல்லைகள் சரியாகும். நெருங்கிய உறவினர்கள்/ நண்பர்கள் விலகிச் செல்வார்கள். கூட்டுத் தொழில் செய்பவர்கள் எச்சரிக்கையாக இருக்கவும். மனஸ்தாபம் வரலாம். பூர்வீகச் சொத்து விற்று மறு சொத்து வாங்க நேரிடும். திருமணத் தடை விலகும். கணவன்- மனைவிக்குள் அனுசரணை தேவை. வியாபாரத்தில் நல்ல முன்னேற்றம் காணும். புதிய தொழில் முயற்சி சற்றுத் தள்ளிப் போகும். ராகு/கேது/குரு வழிபாடு செய்துவர நற்பலனை அடைவீர்கள்.

மிதுனம்: எண்ணங்கள் ஈடேறும். தனவிருத்தி ஏற்படும். குடும்ப வாழ்வு நன்றாக இருக்கும். வீடு/மனை வாங்கலாம். புதிய முதலீடுகள் செய்ய நல்ல தருணம். சிலருக்கு வீடு மாற்றம் இருக்கும். உடல்நிலை பாதிக்காது. படிப்பில் நல்ல

நடக்குமென்பார்; நடக்கும்!



தஞ்சை பரத்வாஜ்

முன்னேற்றம் ஏற்படும். கணவன்-மனைவி உறவு நன்றாக இருக்கும். புதிய வேலை வாய்ப்புத் தேடி வரும். வியாபாரத்தில் நல்ல அபிவிருத்தி ஏற்படும். ராகு/கேது/ குரு வழிபாடு செய்து வருதல் நலம்.

கடகம்: மனமகிழ்ச்சி கிட்டும். புண்ணிய ஸ்தலம் செல்வீர்கள். வீடு மாற்றம் ஏற்படும். உடல் ஆரோக்கியம் பாதிக்காது. நண்பர் உறவினர்களால் அனுகூலம் ஏற்படும். சத்ரு தொல்லை விலகும். நல்ல முன்னேற்றம் ஏற்படும். வெளியூர்ப் பிரயாணங்கள் செல்ல நேரிடும். பணக் கஷ்டம் இருக்காது. புதிய முயற்சிகள் பலன் கொடுக்கும். சனி/குரு வழிபாடு செய்துவர நற்பலன் கைகூடும்.

சிம்மம்: சிலருக்கு சட்டச்சிக்கலில் மாட்டக்கூடிய அமைப்பு ஏற்படும். கவனம் தேவை. வாக்குவாதம் தவிர்க்கவும். பொறுமை, நிதானம் சகிப்புத் தன்மையும் இருந்தால் வரும் எதிர்ப்புகளைச் சமாளிக்கலாம். பணக்கஷ்டம் ஏற்படும். கொடுக்கல் வாங்கலில் சிக்கல் வரும். வண்டி வாகனத்தில் செல்லும் போது கவனம் தேவை. இடதுகால் மீது கவனமாக இருக்கவும். காலில் கட்டுப் போடும் சூழ்நிலை வரும். ராகு/கேது/குரு/ சனி வழிபாடு சிறந்தது.

கன்னி: சுப காரியம் நடக்கும். புதிய வீடு/மனை வாங்க நல்ல காலம். எண்ணங்கள் யாவும் ஈடேறும். கணவன்-மனைவி விட்டுக்கொடுத்து நடந்துகொள்வது நல்லது. குழந்தைகளால் சந்தோஷம் கிட்டும். கூட்டாளிகளால் மன வருத்தம் ஏற்படும். வெளியூர்ப் பிரயாணம் செல்ல நேரிடும். நண்பர்/ உறவினர் மூலம் ஆதாயம் கிட்டும். வாக்கு வன்மை மேலோங்கும். ராகு/கேது வழிபடுதல் நற்பலனைத் தரும்.

துலாம்: மேன்மையான வாரம். எண்ணங்கள் யாவும் ஈடேறும். புதிய பணி கிடைக்கும். உத்தியோக நிமித்தம் வெளிநாடு செல்ல நேரிடும். உடல்நிலை தொல்லை இருக்காது. கணவன் - மனைவி உறவு நன்றாக இருக்கும். வழக்கு, வியாபாரம் வெற்றி அளிக்கும்.



✱ படம்: ஸ்ரீஹரி

11.6.2006 முதல் 17.6.2006 வரை

பணக்கஷ்டம் இராது. கொடுக்கல் வாங்கலில் சிக்கல் தீரும். திருமணக் காரியம் கைகூடும். நண்பர், உறவினர்களால் ஆதாயம் ஏற்படும். வியாபாரத்தில் நல்ல அபிவிருத்தி ஏற்படும். மாணவ, மாணவியர் கல்வியில் முன்னேற்றம் காண்பார்கள். குரு/சனி வழிபாடு நற்பலனைத் தரும்.

விருச்சிகம்: மனத்தில் நினைத்த காரியம் கைகூடும். பூர்வீகச் சொத்து விற்று மறுசொத்து வாங்க நேரிடும். வீடு மாற்றம் ஏற்படும். பணக்கஷ்டம் வராது. சுபநிகழ்ச்சிகள் கைகூடும். மாணவ, மாணவியர் விரும்பிய கல்வியை அடைவார்கள். வியாபாரத்தில் நல்ல லாபம் கிட்டும். சிலருக்கு வேலை மாற்றம், புதிய வேலை அமையும். கணவன் - மனைவி உறவு நற்பலனைத் தரும். பத்திரிகைகளில் பெயர் வரும். சுபநிகழ்வுகள் நடக்கும். மகப்பேறு பாக்கியம் கிட்டும். ஆரோக்கியம் பாதிக்காது. மன மகிழ்ச்சி ஏற்படும். ராகு/கேது வழிபாடு நற்பலனைத் தரும்.

தனுசு: சுப காரியம் கைகூடும். உடல் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். வராத பணம் கைக்குக் கிடைக்கும். சிலருக்கு உத்தியோகத்தில் இடமாற்றம், வேறு

பரத்வாஜ்...

எனது சகோதரரின் மகனுக்கு எப்படிப்பட்ட பெண் அமைவாள்? எப்போது திருமணம் நடக்கும்?

- என்.ஆர். ராமச்சந்திரன், சென்னை - 41

உங்கள் சகோதரர் மகனுக்கு 35 வயதில் திருமணம் நடக்கும். உறவில் அமையாது. நன்கு படித்த, பண்புள்ள மனைவி அமைவாள்.

எனது மகனுக்கு எப்போது திருமணம் நடக்கும்?

-கே.எஸ். கோதண்டராமன், மறைமலைநகர்

ஜாதகருக்கு முப்பத்தைந்து வயதில் திருமணம் நடக்கும்.

என் மகளுக்கு எப்போது திருமணம் நடக்கும்?

- ஆர். விஜயலட்சுமி

இவரின் ஜாதகப்படி 2006-ல் திருமணம் முடியும். படித்த, பண்புள்ள, அயல்நாட்டிலுள்ள வரன் அமையும். சர்ப்பதோஷம் உள்ள ஜாதகமாகச் சேர்க்கவும்.

என் மகளுக்கு எப்போது திருமணம் நடக்கும்?

- என். லட்சுமி, மாம்பலம்

உங்கள் பெண்ணுக்கு சூரிய தசை நடைபெற்று வருகிறது. 25 வயதில் திருமணம் முடியும். தனியார் துறையில் வேலை பார்க்கும் படித்த, பண்புள்ள பையன் அமைவான்.

...பதில்கள்

வேலை கிடைக்கும். கணவன் - மனைவி உறவு நன்றாக இருக்கும். வியாபாரத்தில் நல்ல லாபம் காணும். மனை/வீடு வாங்க நல்ல காலம். எதிர்பாராத பிரயாணம் செல்லும்படி இருக்கும். திருமணத் தடை விலகும். புண்ணிய ஸ்தலம் செல்வீர்கள். குழந்தைகளால் சந்தோஷம் கிட்டும். ராகு/கேது/சனி வழிபாடு சிறந்தது.

மகரம்: வெளியூர்ப் பிரயாணம் செல்ல நேரிடும். வீடு/மனை வாங்க நல்ல தருணம். குடும்பத்தில் திருமணக் காரியம் கைகூடும். குழந்தைகளால் சந்தோஷம் கிட்டும். தெய்வ அனுகூலம் ஏற்படும். சிலருக்கு உத்தியோகத்தில் இடமாற்றம், புதிய வேலைக்குப் போகும் சூழ்நிலை உருவாகும். கணவன் - மனைவி உறவு நன்றாக இருக்கும். குழந்தைப் பேறு கிட்டும். வியாபாரத்தில் நல்ல அபிவிருத்தி ஏற்படும். நீண்டதூரப் பயணம் செல்லும் வாய்ப்பு வீடு தேடி வரும். உடல் ஆரோக்கியம் பாதிக்காது.

கும்பம்: பணக்கஷ்டம் வராது. இடமாற்றம் ரெடி. புதிய வேலை வாய்ப்பு வந்து அணுகும். சத்ரு தொல்லை விலகும். கணவன் - மனைவிக்குள் விட்டுக் கொடுத்து அனுசரித்துப் போவது நல்லது. யாரிடமும் வாக்குவாதம் வேண்டாம். நண்பர்/உறவினர்களை விட்டு விலகிச் செல்ல நேரிடும். வியாபாரத்தில் நல்ல லாபம் கிட்டும். மனக்கிலேசம் விலகும். வெளிநாட்டு அழைப்பு வந்து சேரும். வீடு/மனை வாங்க நல்ல தருணம். செலவுகள் கட்டுக்கடங்கி இருக்கும். மாணவ/ மாணவியர் விரும்பிய கல்வியை அடைவார்கள். ராகு/ கேது வழிபாடு நற்பலனைத் தரும்.

மீனம்: எண்ணங்கள் யாவும் ஈடேறும். மனத்தில் புத்துணர்ச்சி ஏற்படும். வெளியூர்ப் பிரயாணம் வந்து சேரும். புதிய ஒப்பந்தம் செய்ய நேரும். சுபநிகழ்ச்சிகள் கைகூடும். தடைபட்ட காரியங்கள் உடன் நடக்கும். அந்நிய நாட்டு மனிதர்களால் அனுகூலம் ஏற்படும். மாணவ, மாணவியர் கல்வியில் நற்பலனை அடைவார்கள். சிலருக்கு இடமாற்றம் ஏற்படும். கணவன் - மனைவி விட்டுக்கொடுத்துப் போவது நற்பலனை அளிக்கும். பணக்கஷ்டம் இராது. செலவுகள் கட்டுக்கிடங்கி இருக்கும். சத்ரு தொல்லை விலகும். உடல் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். மன உளைச்சல் தீரும். ராகு/கேது/குரு வழிபாடு நற்பலனைத் தரும். ○



வேதாளத்தைக் குண்டுக்கட்டாகத் தூக்கி தன் தோளில் சுமந்தபடி நடக்கத் தொடங்கினான் விக்ரமாதித்தன். "இந்த வாரம் என்ன படிச்சே?"

வேதாளம் தலையைச் சிலுப்பிக் கொண்டது. "ஏலேய். எல்லாம் வேர்க் கவிதைகள். நொழஞ்சி பாருங்க. வெளிய வர்ற வழிதெரியாம விழி பிதுங்கிப் போயிடுவீங்க."

"என்ன வேதாளம் என்ன ஆச்சு உனக்கு?"

"பாம்பு புடுங்குனாலும் பத்தியம் பாக்காம, தேளு கொட்டினாலும் தேச்சி வுட்டுட்டு நடக்கறவங்க இவங்க. பனை மரத்து நிழலைக்கூட பார்க்க முடியாது. கிணறு வறண்டு போய்க் கிடக்கு. அப்பா பூவரசு இலையைப் பறிச்சு அதுல பீப்பீ செஞ்சு கொடுக்கிறாரு. ஆனா பாரு. இங்கேயும் மனுஷங்க வாழுறாங்க, காதலிக்கிறாங்க, கவித எழுதறாங்க."

"இரு இரு... முதல்ல எந்த புக்கைப் பத்தி பேசறேன்னு சொல்லிட்டுப் பேசு?"

"தலைப்பு ஏலேய். வே. இராமசாமியோட கவிதைத் தொகுப்பு. அழுத்தமான பதிவு."

"வேற என்ன படிச்சே வேதாளம்?"

"இன்னொரு கவிதை புத்தகம். 'நிழலுதிர் நேரம்! ஏலேய்ல இருக்கிற அளவுக்கு அழுத்தம் இல்லை. ஆனா பல இடங்கள்ல மண் வாசனையை சுவாசிக்க முடியும். ஒரே வாசிப்புல படிச்சு புரிஞ்சுக்க முடியுது. அப்புறம் என்னோட வேதாளி ஃப்ரெண்ட் ஒரு புக் கொடுத்தா. பேரு 'சுயமுன்னேற்ற சூத்திரம்'. நமக்கு ஏற்கெனவே தெரிஞ்ச விஷயத்தைத்தான் சொல்லியிருக்காங்க. சுவாரஸ்யம் கம்மி. சரி, இந்தக் கேள்விக்கு சரியான பதிலைச் சொல்லு. முதல் முதலா தமிழ் அகராதியைத் தொகுத்தவரு யாரு?"



வேதாளபுரி நூலகம்!



"வீரமாமுனிவர்" விக்ரமாதித்தன் சொல்லி முடிப்பதற்குள் வேதாளம் பறந்தே போய்விட்டது.

ஏலேய், வே.இராமசாமி, மதி நிலையம், 4(39), தணிகாசலம் ரோடு, பிருந்தாவன் அபார்ட்மெண்ட்ஸ், தி.நகர், சென்னை - 17, பக்கங்கள் - 96, விலை ரூ. 40.00/-

நிழலுதிர்நேரம், மயிலாடுதுறை இளையபாரதி, ராஜேஸ்வரி புத்தக நிலையம், 8, முத்துகிருஷ்ணன் சாலை, பாண்டிபஜார், தி.நகர், சென்னை - 17, பக்கங்கள் 80, விலை ரூ. 30.00/-



சுயமுன்னேற்ற சூத்திரம், எஸ்.சூரியமூர்த்தி, கண்ணதாசன் பதிப்பகம், 23 கண்ணதாசன் சாலை, தி.நகர், சென்னை - 17, விலை ரூ. 30.00/-

பாசக் கதை 3

அந்நியன்!

அந்த வீட்டின் மாடி போர்ஷனுக்கு நாங்கள் குடிபோனதிலிருந்து, ஓனர் வீட்டு வாசலில் கட்டியிருந்த நாய் எங்களையும் எங்கள் வீட்டுக்கு வரும் நபர்களையும் பார்த்து விடாமல் குரைத்துக்கொண்டிருந்தது. அதனுடைய புலி போன்ற தோற்றத்தையும் குரைப்பையும் பார்த்து எங்கள் வீட்டுக்கு வரும் விருந்தாளிகளின் எண்ணிக்கை கணிசமாகக் குறைந்துவிட்டது.

''என்ன நாய் இப்படி குரைக்கிறது'' என்றேன். வீட்டுக்காரரிடம் யதார்த்தமாய் நான் நாய் என்ற வார்த்தையைப் பிரயோகித்தது பிடிக்கவில்லை என்பது அவர் முகத்திலிருந்து தெரிந்தது.

''ஹி ஈஸ் சீஸர். எங்க ஃபேமிலில ஒரு மெம்பர் மாதிரி'' என்றார் வீட்டுக்காரர் பெருமையுடன். அவர் ரிசர்வ்டு டைப். மணிரத்னத்தின் பட கேரக்டர் மாதிரி வார்த்தைகளை அளந்துதான் பேசுவார்.

அவ்வப்போது சீசரை மெடிக்கல் செக்கப்புக்கு அழைத்துப் போகவும், குளிப்பாட்டவும், பயிற்சி அளிக்கவும் ஒரு ஆள் வருவான். அது அடிக்கடி அசைவ உணவு சாப்பிடும். காரில் எஜமானருடன்





அமர்ந்து ஜம்பமாய் பயணிக்கும்.

ஒருநாள் சீசரைக் காணவில்லை. தொடர்ந்து ஒரு வாரம் அதைக் காணாததால்... 'சீஸருக்கு என்ன சார் ஆச்சு, காணோமே' என்றேன்.

"நியூஸ் பேப்பரிலிருந்து தலையைத் தூக்கிய அவர், 'சீஸர் என்ன சீஸர். தரித்திரம் பிடிச்ச தூங்குமூஞ்சி நாய்ன்னு சொல்லுங்க. என் மகனுடைய புது பைக்கை எவனோ போன வாரம் கிளப்பிட்டுப் போயிட்டான். இத்தனைக்கும் கேட் பூட்டியிருந்தது. நாயையும் பைக்குக்குப் பக்கத்திலே தான் கட்டிப் போட்டிருந்தேன். சனியன் குரைக்கவே இல்லை. தலை முழுகிட்டேன். எங்க உறவுக் காரரு ஒருத்தரு கேட்டாரு. குழந்தைகளுக்கு விளையாட வேணும்னு, 'தாராளமா எடுத்துக்கிட்டுப் போ'ன்னுட்டேன்."

நெடுநாட்களாக பழகிப் போன நாயின் குரைப்பு இல்லாமல் எங்களுக்கு ஏதோ பறி கொடுத்தாற்போல இருந்தது.

ஒருநாள் நான் கீழே இறங்கி வந்தபோது, வாசலில் ஒருவர் வீட்டுக்காரருடன் பேசிக்கொண்டிருந்தார். அவருடன் ஒரு நாய். அட, நம்ம சீஸர். பாவம் தன் மாஜி எஜமானர் தன்னுடன் பேசுவார் என்று எதிர்பார்த்து அது ஏமாற்றத்துடன் நின்றுகொண்டிருந்தது. வீட்டுக்காரர் அதன் பக்கம் திரும்பிக்கூட பார்க்கவில்லை. சீஸர் என்னைப் பார்த்து குரைக்கவில்லை. கண்களில் ஏக்கத்துடன் வாலை அசைத்து குசலம் விசாரித்தது. என்னை வாத்சல்யத்துடன் பார்த்து, பாசத்துடன் மேலே பாய்ந்து என் கைகால் விரல்களை நக்க யத்தனித்தது.

பாவம், இந்த ஐந்தறிவு ஜீவன், திட்டமிட்டு தனக்கு துரோகம் செய்துவிட்டது என்று நினைத்து அதை வெறுத்து ஒதுக்கும் வீட்டுக்காரர், ஆறறிவுள்ள மனிதர்தானா என்று நினைத்தேன். அதேசமயம் தன் எஜமானனுக்கு அந்நியன் என்ற கண்ணோட்டத்தில் என்னைப் பார்த்து குரைத்துக்கொண்டிருந்த ஐந்தறிவு சீஸர்,



நேசம்!

ஆரம்ப காலம் முதலே சிவாஜிகணேசன் மீது கமலா தியேட்டர் அதிபர் வி.என்.சிதம்பரத்துக்கு அதீத அன்பு. சிவாஜி இருந்தவரை நேரிடையாய் காட்டி வந்த நேசத்தை, அவர் மறைந்த பிறகும் பல நற்காரியங்கள் மூலம் தொடர்ந்து வருகிறார். அண்மையில் தமிழக முதல்வர் கருணாநிதியைச் சந்தித்து, மதுரையில் சிவாஜிக்கு சிலை வைக்க அனுமதி கேட்டுத் திரும்பியிருக்கிறார்.

இப்போது தானே தன் எஜமானனுக்கு அந்நியனாகி விட்டதால் என்னைப் பார்த்து குரைக்கும் உரிமை இல்லை என்று உணர்ந்த ஆறறிவு மனிதனாக என் கண்ணுக்குத் தென்பட்டது. சீஸரைத் தோழமையுடன் தடவிக்கொடுத்தேன். ○

வளம் தரும் வாஸ்து-9



காஞ்சி கிருஷ்ணா



ஒற்றையா, ரெட்டையா?

கடந்த இதழில் எழுதியிருந்ததைப் போல நிலைவாசலில் கதவு வைப்பது என்பது மிகவும் முக்கியமானது. அதற்காகக் கூறப்பட்டிருக்கும் விதிமுறைகளைக் கண்டிப்பாகக் கடைப்பிடிக்க வேண்டும்.

பொதுவாக நிலைவாசலில் கதவு வைக்க வேண்டும் என்றாலே பெரும்பாலானோர் இரட்டைக் கதவுகளை வைத்து விடுகிறார்கள். ஆனால் வாஸ்து சாஸ்திரப்படி ஒற்றைக் கதவு அமைப்பதுதான் நல்லது. பொதுவாக நிலைவாசல் கதவு மரத்தால் ஆனதாகவே இருக்க வேண்டும். சிலர் பாதுகாப்பு காரணங்களுக்காக இரும்புக் கதவை வைத்து விடுகிறார்கள். இதில் தவறில்லை. ஆனால் அந்த இரும்புக் கதவானது நிலைவாசலுக்கு வெளியே தான் இருக்க வேண்டுமே தவிர, நிலைவாசலின் மீது அமையக் கூடாது. அப்படி நிலைவாசலுக்கு வெளியே நமக்குத் தேவையான இரும்புக் கதவை வைத்து விட்டு, சாஸ்திரப்படி மரக்கதவை நிலைவாசலில் அமைத்துவிட வேண்டும்.

இப்படி அமைக்கப்பட்ட கதவைத் திறப்பதற்கும் வாஸ்துப்படி பல்வேறு விதிமுறைகள் இருக்கின்றன.

நிலைவாசலில் வைக்கப்படும் கதவை இடமிருந்து வலமாகத் திறப்பதுபோலத் தான் அமைக்க வேண்டும். அதேபோல கதவு வெளியே திறப்பதுபோல இருக்கக் கூடாது. கண்டிப்பாக உட்புறம் திறப்பது

கேளுங்கள் சொல்கிறேன்

நம் வீட்டுப் பூஜையறைகளில் மூத்தோர் படங்களை மாட்டி பூஜை செய்யலாமா?

- ஞானமூர்த்தி, திருவொற்றியூர்

மூதாதையர் படங்களை

போலத்தான் அமைக்கப்பட வேண்டும். பொதுவாக எல்லோருக்கும் இருக்கும் பழக்கம் நிலைவாசலில் கால் வைத்துச் செல்வது. இது மிகவும் தவறானது. நிலைவாசலில் நிற்கவோ, கால் வைத்து உள்ளே செல்லவோ, வெளியே வரவோ கூடாது.

என்னிடம் வாஸ்து தொடர்பாக சந்தேகம் கேட்டு ஒருவர் வந்தார். அவருடைய தந்தை மிகுந்த செல்வந்தர். அவர் மறைந்துவிட்டதால் பாகப்பிரிவினை ஏற்பட்டு, வீட்டை இரு பிரிவாகத் தடுத்து, அண்ணனும் தம்பியும் எடுத்துக் கொண்டு விட்டார்கள். அவ்வாறு தடுத்ததில் இருந்து தன் வீட்டில் அதிக பிரச்னைகள் வருவதாகக் கூறினார் என்னிடம் வந்த நபர். நான் சென்று பார்த்த பிறகுதான் தெரிந்தது. அந்த வீட்டின் நிலைவாசலை எடுத்துவிட்டு, அந்த இடத்தில் ஆரம்பித்து குறுக்குச் சுவர் எழுப்பியுள்ளனர் என்பது. குறுக்குச்சுவர் எழுப்பிய பிறகு அண்ணன்,

தம்பி இருவரும் தங்கள் வீடுகளுக்கு இரண்டு நிலைவாசல்களை வைத்துள்ளனர். அதில் ஒருவருக்கு ராகு பகுதியிலும், இன்னொருவருக்கு சூரியப் பகுதியிலும் நிலைவாசல் அமைந்து விட்டது. அதுதான் பிரச்னைக்குக் காரணம் என்பது எனக்குப் புரிந்து விட்டது. ஆகவே பிரச்னைக்குத் தீர்வாக, இரு வீட்டுக்கும் தனித்தனியே முறையாக நிலைவாசல் அமைத்துக் கொடுத்தேன். அதன்பிறகு இப்போது பிரச்னை ஏதுமில்லை.

அடுத்து, ப்ரும்மஸ்தானம். ஒவ்வொரு வீட்டுக்கும் மையப்புள்ளி என்று ஒன்று உண்டு. அதற்குத்தான் ப்ரும்மஸ்தானம் என்று பெயர். முன்காலங்களில் அந்தப் ப்ரும்மஸ்தானத்தில் முற்றம் அமைத்து விடுவார்கள். ஆனால் இன்றைக்கு முற்றம் என்ற சொல்லே பலருக்கு மறந்துவிட்டது. பலர் கேள்விப்பட்டே இருக்க மாட்டார்கள். ஆகவே, வீட்டின் மையப்பகுதியில் கூடம் வருவது போல அமைத்துக் கட்டுவது நல்லது. இந்த ப்ரும்மஸ்தானத்தில் அதிக பாரம் உள்ள எதையும் வைக்கக் கூடாது. உதாரணமாக நெல் கொட்டி வைக்கும் பத்தாயம் (குதிர்) போன்றவற்றை வைக்கக் கூடாது. மேலும் ப்ரும்மஸ்தானத்தில் குறுக்கே சுவரும் வரக்கூடாது. சரி... வீடென்றால் இப்படி மாற்றிக் கொள்ளலாம். இதுவே, அலுவலகம், ஹோட்டல் என்றால் என்ன செய்வது?

(வளரும்)

படம் : ஸ்ரீஹரி

சுவாமி படங்களோடு சேர்த்து வைத்து பூஜிக்கக் கூடாது. அதற்குப் பதிலாக வேறொரு அறையில் மொத்தமாக வைத்து வணங்கலாம்.

படுக்கை அறைகளில் சுவாமி படங்களை மாட்டலாமா?

- ஆனந்தநடராஜன், ஸ்ரீரங்கம்


குழந்தை பருவத்து ஸ்வாமி படங்களை படுக்கை அறைகளில் மாட்டுவதில் தவறில்லை. மேலும் சாத்விகமான, சிரித்த முகத்துடன் இருக்கும் ஸ்வாமி படங்களை படுக்கை அறையில் மாட்டுவதில் தவறு இல்லை.





"ஜெமினியின் கதை இலாகாவில் பங்கேற்று 'மிஸ் மாலினி' படத்தில் முக்கியப் பாத்திரத்தில் நடித்த சீதாராமன் என்னும் நடிகர்தான், 'ஏழைபடும் பாடு' படத்துக்குக் கதை, வசனம் எழுதி, அதில் 'ஜாவர்' என்ற இன்ஸ்பெக்டர் பாத்திரத்தை ஏற்று நடித்ததால் ஜாவர் சீதாராமனாக மாறிய மிகச் சிறந்த நடிகர், கதை வசனகர்த்தா.

- திரை வளர்த்த தமிழ்





"ஆகாயத்தில் வருகின்ற கந்தர்வர்களைத் தொட்டி ஒன்றில் உட்கார வைத்து அதைக் கம்பியில் கட்டி உள்ளிருந்து ஒரு பக்கமாக இழுக்க, அந்தத் தொட்டி ஆகாயத்தில் கந்தர்வர்களைச் சுமந்தபடி வந்தது.

அந்தத் தொட்டியில் நீட்டிக் கொண்டிருந்த ஒரு கம்பி, சடாமுடியோடு இருந்த முனிவரின் தலையிலே பட்டு அது அப்படியே அவர் சடாமுடியை இழுத்துக் கொண்டு போய் விட்டது. திடீரென்று முனிவர் மொட்டையாகிவிட, சீடர்களான என்.எஸ்.கிருஷ்ணனும், சுந்தரம் ஐயரும் திகைத்து வாயைப் பொத்திக் கொண்டு சிரிக்க, முடி போனதுகூடத்

ஓடாதே நில்!

கு.ஞானசம்பந்தன்

தெரியாத மொட்டை முனிவர் 'அப்பாவியாய்' அமர்ந்திருக்க, கூட்டம் சிரியோ சிரியென்று சிரித்து உருண்டதாம்.

சண்முகம் அண்ணாச்சியே ஒரு தடவை இதை மேடையிலயும் சொன்னாரு. அவர் வரலாற்றுலயும் இதை எழுதியிருக்காரு" என்று முத்துராக்கு சொன்னபோது எங்களுக்கும் சிரிப்பை அடக்க முடியவில்லை.

அந்த நாடகத்தால் எங்களுக்குக் கிடைத்த வரவேற்பில் நாங்கள் தொடர்ந்து சில நாடகங்கள் போடத் தொடங்கினோம். ஒவ்வொரு நாள் இரவும் நாடக ஒத்திகை முடிந்து நான் வீட்டுக்குப் போகிறபோது வீட்டு வாசலிலேயே அன்றைய சூழலைப் பொறுத்தும், என்னுடைய தந்தையாரின் கோபத்தைப் பொறுத்தும் தமிழ் அர்ச்சனையாகத் தொடங்கி அஸ்டோத்திரமாகவோ (108), சகஸ்ரநாமமாகவோ (1008), லட்சார்ச்சனையாகவோ அவரது கோபம் வெளிப்படும்.

அவருடைய அந்தக் கோபத்தையெல்லாம் மகிழ்வோடு உள்வாங்கிக் கொண்ட நான், அதை ஒரு நாடகத்தின் முதல் காட்சியாகப் பயன்படுத்தினேன்.

'ஓடாதே நில்!' என்பது அந்த நாடகத்தின் பெயர். அதன் முதல் காட்சியில் நான் முருக வேடத்தோடு வந்து 'சம்போ மகாதேவா!' என்று ஆர்மோனியப் பெட்டிக்காரர் பின்பாட்டுப் பாட, காண வந்த பக்தகோடிகளுக்கு ஆசி வழங்கி அருள்பாலித்துக் கொண்டிருந்தேன்.

அது திருவிழாவில் நடந்த நாடகம் ஆதலால் கட்டுக்கடங்காத கூட்டம். நாடகப்படி, ஒருவன் முருகனாகிய என்னிடத்தில் வந்து 'உங்க அப்பா வந்திருக்கிறார்' என்று சொல்ல, நான் உடனே கடவுள்களுக்கே உரிய மந்தகாசப் புன்னகையோடு, 'யார்? என் அப்பன் பரமசிவனா? அந்தக் கைலயங்கிரி வாசனா? மக்கள் கைதொழும் நேசனா?' என்று கேட்டுக் கொண்டிருப்பேன். அப்போது நாடகத்தில் என் தந்தையாக நடிப்பவர் வந்து என்னைக் கடுமையாக மேடையிலே திட்டுவார்.

'உனக்கு இந்த நாடக புத்தி போகாதா? நீ திருந்தவே மாட்டியா?' என்று அந்த நாடக நடிகர் பேசும் வசனம் முழுவதும் என் அப்பா உண்மையில் என்னைப் பேசிய பேச்சுகள்தான். அந்த நாடகம் முடிந்து நான் வீட்டுக்கு வந்தபோது, வாசலில் காத்திருந்த என் தந்தை என்னைத் திட்டவில்லை. மாறாகச் சிரித்த முகத்தோடு "பரவாயில்லைடா! நான் சொன்ன வார்த்தைகளையே நாடக வசனமாக்கி கைத்தட்டலும் பெற்று விட்டாயே! பிழைத்துக் கொள்வாய்!" என்றார் மகிழ்ந்த முகத்தோடு. அந்த நாடகத்துக்கு அவரும் வந்து முழுமையும் பார்த்திருக்கிறார்.

அதே நாடகத்தின் மேடையில் மிகச் சோகமாக எல்லோரும் சேர்ந்து அழ வேண்டிய ஒரு காட்சி பயங்கரமான சிரிப்புக்கு இடமாயிற்று. அது என்னன்னு தெரியுமா?

'ஓடாதே நில்' நாடகம்தான் நாங்கள் போட்ட மிகப்பெரிய நாடகம். அறுபது காட்சிகள், ஐம்பதுக்கும் மேற்பட்ட நடிகர்கள், மூன்று மணி நேரத்துக்கும் மேல் நடத்தப்பட்ட நாடகம் அது. உடனே நீங்கள் நாடகக் காவலர் ஆர்.எஸ். மனோகர் நாடகம் போல பிரம்மாண்டமான நாடகமோ என்று கற்பனை பண்ணி விடாதீர்கள்.

அந்த நாடகம் போட நிதி உதவி செய்த அத்தனை பேருக்கும், அவர்கள் தம்பிமார்கள், மச்சினன்மார்களுக்கும் சேர்த்து நாடகத்தில் வேஷம் தரவேண்டியிருந்ததால் வந்த வினை இது.

நாடகத்தின் ஒரு காட்சியில் இரண்டாவது கதாநாயகன் சிறுவயதில் வீட்டை

விட்டு ஓடிப்போய், பெரியவனானதும் வருகிறான்) தன் தாயின் படத்தைப் பார்த்து, 'இதுதாண்டா என் தாயின் படம், இவள்தான் என் தாய்' என்று கதறி அழ வேண்டிய காட்சி.

அந்தக் காட்சியில் ஒரு பழைய புகைப்படம் வேண்டும். வழக்கப் படி நாங்கள் மறந்து போய்விட்டோம். அடுத்த சீன் அந்த சீன்தான். எல்லோரும் 'போட்டோ... போட்டோ...' என்று கத்திக் கொண்டிருந்தார்களே தவிர, யாரும் வாங்கப் போகவில்லை.

சற்றும் தாமதிக்காமல் சினிமாமணி திரைக்குப் பின்னால் ஓடி எதிரில் இருந்த போட்டோ ஸ்டுடியோவில் மிகப்பெரிய பழைய படம் ஒன்றை எப்படியோ வாங்கி வந்துவிட்டான்.

அந்தக் காட்சி தொடங்கியது. ஆவேசமாக உள்ளே நுழைந்த கதாநாயகன், சுற்றி இருந்தவர்களைப் பார்த்து 'இதோ பாருங்கள் இவள்தான் என் தாய், என் தெய்வம்' என்று காட்ட, நாங்கள் எல்லோரும் எட்டிப் பார்த்தால்...

அது ஒரு குரூப் போட்டோ படம். கொத்தனார் சங்க மூன்றாவது ஆண்டு விழாவில் முண்டாசுத் தலையோடும், முறுக்கிவிடப்பட்ட 'விருமாண்டி' மீசையோடும் பலர் ஆஜானுபாகுவான தோற்றத்துடன் அமர்ந்திருந்தனர். அந்தப் படத்தைப் பார்த்த ஒருவன் 'கிக்கிக்கிகி' என்று சிரிக்க, கதாநாயகன் திகைத்துத் திணற, நாங்கள் ஆளுக்கு ஒருபுறம் முகத்தை மூடிக்கொண்டு அழுது சிரிக்க, கீழே இருப்பவர்கள் என்ன செய்வது எனத் தெரியாமல் கைதட்ட, ஒருவழியாக முடிந்தது அந்தக் காட்சி.

'அந்த மூணாவதாய் உட்கார்ந்து இருந்த முண்டாசுத் தடியன் தானே உங்கம்மா?' என்று நாடகம் முடியவும் நாங்கள் எல்லோரும் கதாநாயகனிடம் கேட்டுச் சிரித்தோம்.

எங்கள் நாடகக் குழுவுக்குத் தனிப்பேர் கிடைக்கத் தொடங்கியது இந்த நாடகத்தில்தான். இந்த நாடகத்துக்காக முத்துராக்கு மதுரையில் இருந்து புகழ் பெற்ற மேக்கப்மேன் ஒருவரை அழைத்து வந்திருந்தார்.


வில்லிபாபு என்ற அம்மணிதர் அந்தக் கால திரைப்படங்களில் சிறுவேடங்களில் நடித்தவர், பல பெரிய நடிகர்களுக்கு ஒப்பனை செய்தவர். அவரே பார்க்க அழகாக 'நெஞ்சில் ஓர் ஆலயம்' கல்யாணகுமார் மாதிரி இருந்தார்.

'இந்தத் தம்பிதான் கதை, வசனம் எழுதுது. டைரக்டர் மணி இப்ப வந்திருவார். உள்ள வாங்க உட்காருங்க' என்று வில்லிபாபுவையும், அவரின் உதவியாளர் பையன் ஒருவனையும் சினிமாமணி வீட்டுத் தோட்டத்திற்குக் கூட்டி வந்துவிட்டார் முத்துராக்கு.

வில்லிபாபுவின் உதவியாளன், கோபுலு கார்ட்டூனில் வரும் துப்பறியும் சாம்பு போல நீண்ட மூக்குடன், ஒல்லிப் பிச்சானாகக் காட்சி தந்தான். 'ம்...' என்றால் அப்போதே மேக்கப்போடத் தயாராகத் துடிப்போடு அங்குமிங்கும் பார்த்துக் கொண்டிருந்தான்.

(ரீல் சுற்றும்)

படம்: **புதூர் சரவணன்**



வாரியார் அமுதம்!

இறைவனிடம் நீ நின்று அன்பு செய்யும்போது, "ஆண்டவனே! உலகத்திலுள்ள எல்லா உயிர்களும் இன்புற அருள்புரிவீர்" என்று வேண்டு. அவ்விதமின்றி "என்னைக் காப்பாற்று" என்று மட்டும் வேண்டாதே.

உலகத்தில் உள்ள உயிர்களை எல்லாம் காப்பாற்று என்று வேண்டுவாயானால், அந்த உயிர்களில் நீயும் ஒருவன்தானே.

என் வயலுக்கு மழை பொழிய வேண்டும் என்று வேண்டுவதைவிட உலகமெல்லாம் மழை பொழிய வேண்டும் என்று வேண்ட வேண்டும். உலகமெங்கும் மழை பொழிந்தால் உன் வயலிலும் அந்த மழை பொழியுமன்றோ?

கண்களை மூடிக்கொண்டு காதைத் தீட்டிக்கொண்டு வினோத் சேஷாத்ரி பாடுவதைக் கேளுங்கள். கிஷோர்குமாரே உயிர் பெற்று வந்து தன்னுடைய 'தும் பி சலோ', 'ஆனே வாலா பல்', 'ஜீவன்ஸே பரி', 'ஹமே தும்ஸே ப்யார் இத்னா' போன்ற பிரபல பாடல்களை இன்னும் கொஞ்சம் மெருகு சேர்த்துப் பாடுகிறாரோ என்று வியக்க வைக்கும். 'மூட்ஸ் அஃப் கிஷோர்' என்ற இசை நிகழ்ச்சியை, சென்னை ரசிகர்களுக்காக வழங்க வந்த இளைஞர் வினோத் சேஷாத்ரி, தமிழ், கன்னடம் பேசும் பெங்களூர்வாசி. இசையும், கிஷோர்குமாரின் பாடல்களும் இவருக்கு இரண்டு கண்கள் போல. முழு


• குருசரண்

தொட்டபெட்டாவில் நிறுத்தணுமா?

நேரப் பாடகரான வினோத், இந்திப் பாடல்களை ரசிக்கும் சென்னை ரசிகர்களுக்கு முன்பே அறிமுகம் ஆனவர்தான். சமீபத்தில் இவர் மும்பையில் பாடியதைக் கேட்டு மனமுருகிப் பாராட்டியவர்கள் கிஷோர்குமாரின் குடும்பத்தினராம். பலர் கிஷோரின் குரலையும், பாடும் ஸ்டைலையும் தங்கள் குரலில் முயற்சி செய்தாலும் முதலிடம் வினோத் சேஷாத்ரிக்குத்தான் என்பது பல இசை விமர்சகர்களின் கருத்து!

சிக்கில் குருசரண் ஒரு கவர்ச்சிகரமான இளம் பாடகர். மேடைத் தோற்றம், பாட்டு இரண்டிலுமே ஒரு ஈர்ப்பு இருக்கிறது. சன்னமான குரல்தான். ஆனாலும் சத்தான சங்கதிகளும், பிடிகளும் 'இதோ பிடி' என்கிறாற்போல் வந்து விழுகின்றன. கார்த்திக் ஃபைன் ஆர்ட்ஸுக்காக அவர் சில வாரங்கள் முன்பு பாடிய கச்சேரியில் அவருக்குப் பக்காவாக அமைந்த பக்கவாத்தியங்கள்; எஸ்.வரதராஜன் வயலின், வேலூர் ராமபத்ரன் மிருதங்கம்; சுப்ரமண்யம் கடம். இவர்கள் எல்லோரிலும் இளையவரான குருசரண், இவர்களைத் தன் சங்கீதத்தால் கட்டி ஆண்டார்!

சாவேரி கருக்கமாக, உருக்கமாக 'முருகா முருகா என்றால்' பாடலின் மூலம் வெளிவந்தது. அதிலும் 'என்ன சொல்லி அழைத்தால்' என்ற அம்புஜம் கிருஷ்ணாவின் தமிழ்ப் பாடலை கானடா ராக ஆலாபனையுடன் பாடி அடுக்கடுக்காக சரண் கோத்தளித்த கல்பனை ஸ்வரங்களைப் பற்றி ஒரே வார்த்தையில் சொல்ல வேண்டுமானால் 'ஆஹா!'

தும்புரு ஸ்டைலில் குருசரணுக்குச் சிலது சொல்லலாம்: குரலிலேயே ஸ்பெஷல் எஃபெக்ட்ஸ் கொட்டிக் கிடப்பதால் சங்கீதத்தில் அதைத் தாராளமாய்க் குறைக்கலாம். சாஹித்யத்தைப் பிரிக்கும் இடங்கள் கவனத்துக்குரியவை. எல்லா பாட்டையும் முடிக்கையில், சுழட்டி எடுத்துக்கொண்டு போய் தொட்டபெட்டாவில்தான் நிறுத்த வேண்டுமா! வாய்ப்பாட்டுக்கு வாத்தியக் கச்சேரியின் சில தெறிப்பான அம்சங்கள் தேவையில்லையே...

சிந்திக்கட்டும் சரண்.

- ஜோதிஸ்வரூபிணி

குறையொன்றுமில்லை

எட்டாம் பாகம் 23

ஊருக்குப் போகலாம் என்று கிளம்பிய உபன்யாஸகர், மூட்டையைக் கீழே வைத்துவிட்டார்!

"நாற்பத்தெட்டு நாள் கதை சொன்ன நான், ராமன் ராக்ஷஸனா ராவணன் ராக்ஷஸனா என்று நீர் தெரிந்து கொள்ள முடியாத அளவுக்கு அவ்வளவு அழகாகச் சொல்லியிருக்கிறேன்... இவ்வளவு நாள் கழித்து நீரும் சந்தேகம் கேட்டிருக்கிறீர். இதிலிருந்தே நீர் கேட்ட கேள்விக்குப் பதிலும் கிடைத்திருக்கிறது" என்றார்.

"உம்மையும் படைத்து, என்னையும் படைத்து உம் எதிரிலே என்னை நாற்பத்தெட்டு நாள் கதை சொல்ல வைத்தார் அல்லவா...? அதனால்தான் பிரும்மாவுக்குக் கோயில் இல்லாமல் போயிற்று!" என்றார்.

பிரும்மாவுடைய நிலை ஏற்கெனவே இப்படி இருக்கிறது...! பகவான் நரசிம்ஹாவதாரத்திலே எவ்வளவு கண்ணியமாக நடந்து கொள்கிறான் பாருங்கள்... தன்னைச் சேர்ந்தவர்கள், தன் அடியவர்களெல்லாம் கெட்டுப் போகக் கூடாது; அவர்களுக்கு ஒரு கெட்டப் பெயர் வரக் கூடாது; அவர்கள் சௌக்கியமாக இருக்கவேண்டும். அவர்கள் வாக்குக்கு கௌரவம் வேண்டும்' என்று எப்போதும் எண்ணுகிறான் பரமாத்மா.

அந்த மாதிரி கண்ணியமாக ஒரு சதஸ்ஸிலே நடந்து கொள்ளக்கூடிய திறமை உள்ளவன்தான் 'நேதா' என்று கொண்டாடப்படுகிறான். அப்படிப்பட்ட நேத்ருத்வம் பகவானிடத்திலே - நரசிம்ஹனிடத்திலே இருக்கிறது. அந்த நரசிம்ஹ அவதார காலத்தில் அதை விசேஷமாக அவன் காட்டினான். பிரும்மாவினுடைய வரத்துக்கு எந்த பங்கமும் இல்லாமல் பகவான் ஆவிர்பவித்து, பிரும்மாவை வேறு விதமாக சிக்ஷித்தான்.

ஸ்தம்பத்தைப் பிளந்தபோது, 'பிளந்தது தாணுமாங்கே, பிறந்தது சியம்பிள்ளை' என்பதற்கேற்ப, **அவன்** தோன்றியபோது உதித்த சப்தம், அவன் சிரித்த அந்த அட்டகாசச் சிரிப்பு... அது அண்ட-பகிரண்டங்களைச் சென்று முட்டியது. எல்லா உலகங்களையும் தாண்டிப் போயிற்று, அந்த சிம்ஹ கர்ஜனை.

சத்ய லோகத்திலே பிரும்மா தாமரை மலரிலே உட்கார்ந்து ஜபமாலையை உருட்டிக் கொண்டிருந்தார். எதிரே சரஸ்வதி வீணை வாசித்துக் கொண்டிருந்தாள். நரசிம்ஹ அவதார சப்தமானது சத்யலோகத்திலே பிரும்மா உட்கார்ந்திருக்கிற தாமரை மலரைப் போய் ஓர் அடி அடித்தது. உட்கார்ந்திருந்த பிரும்மா, எட்டு குட்டிக்கரணம் போட்டுக்கொண்டு கீழே விழுந்தார். எழுந்து பார்த்தால், எதிரிலே நரசிம்ஹாவதாரம். அந்த அவதாரத்தைப் பார்த்து ஸ்தோத்திரம் பண்ணுகிறார்!

அமராவதி

முக்கூர் லக்ஷ்மிநரசிம்மாச்சார்யார்

பட்டிணத்திலே இந்திரன் உட்கார்ந்திருக்கிறான்; அவன் வரவில்லை - விழவில்லை. அளகாபுரி என்ற நகரத்திலே குபேரன் உட்கார்ந்திருக்கிறான். அவன் விழவில்லை. வியாவரி என்ற பட்டணத்திலே வருணன் உட்கார்ந்திருக்கிறான்... அவனும் விழவில்லை.

அந்தந்த தேவதைகள் அவரவர் இடத்திலே அழகாக உட்கார்ந்திருக்கிறார்கள்... ஆனால் பிரும்மா மாத்திரம் ஸ்வஸ்தானத்திலேயிருந்து கீழே விழுந்தார்.

ஏன் அவ்வாறு என்று கேட்டால், "இந்த மாதிரி துஷ்டனுக்கெல்லாம் வரங்கொடுத்துவிட்டு, அங்கே நீ தனியே ஜபம் பண்ணிக் கொண்டிருக்கிறாயா? ஜாக்கிரதை!




• அஹோபிலம் • பிரஹலாத வரதர்

இனிமேல் வரம் கொடுப்பதாக இருந்தால், என்னைக் கேட்டுக் கொண்டு கொடு"என்று பரமாத்மா சப்தத்தினாலேயே பிரும்மாவை ஒடுக்கினான்.

அந்த சப்தம் இருக்கிறதே... நரசிம்ஹ அவதார காலத்திலே எழுந்த அந்த அட்டகாசம் இருக்கிறதே... அதை என்னவென்று வர்ணிக்க முடியும்! பிரும்மாவையே கீழே தள்ளியதென்றால், அந்த சப்தத்தினுடைய பெருமையை என்னவென்று சொல்வது!

சப்தங்களாகிற வேதத்தினால் அறியப்படவேண்டிய மூர்த்தி, தான் ஒருவனே என்பதையும் இதன் மூலம் பரமாத்மா உணர்த்தினான்.

- 'வேதம்' என்று சொல்லும்படியான உயர்ந்த பர்வத குகைக்குள்ளே நித்யவாஸம் பண்ணிக் கொண்டிருக்கிறான்.



பர்வதம் (மலை) என்பது வேதம். குகை - வேதாந்தம்.

வேதமாகிற சிகரத்தில் வேதாந்தமாகிற (உபநிஷத்) குகைக்குள்ளே எம்பெருமான் நரசிம்ஹன் திகழ்கிறான் என்பது வலியுறுத்தப்படுகிறது.

அவதார காலத்திலே பிரும்மாவை சிக்ஷித்த பரமாத்மா, அதி ஆச்சர்யமாய் பிரும்மாவின் வாக்கை ரக்ஷித்துக் காப்பாற்றினான்.

பிரும்மா கொடுத்த வரத்தை எந்தவித பங்கமுமில்லாமல் இந்த அவதாரம் காத்தது. அது மாத்திரமில்லை. நாரதர் வாக்கையும் காத்தது.

நாரதம் என்றால் பிரும்ம ஞானம் என்று அர்த்தம். அதை எப்பொழுதும் எல்லோருக்கும் கொடுக்கக் கூடியவர் நாரதர்.

நாரம் என்றால் தீர்த்தம். அவர் பிறப்பதற்கு முன்னால் உலகிலே தீர்த்தம் இல்லாமல் எல்லோரும் கஷ்டப்பட்டார்கள். அவர் பிறந்த பின்னால் நல்ல மழை பொழிந்து எங்கும் தீர்த்த சம்வ்ருத்தி ஏற்பட்டது. அதனால் நாரதர் என்று அவருக்குத் திருநாமம். சிறந்த ஞான பிரும்ம

''தேர்தல்ல ஜெயிச்சுருக்கீங்க... ஏதாவது சந்தேகமிருந்தா கேளுங்க?"
"செலவழிச்ச காசை அஞ்சு வருஷத்துல எடுத்துடலாமா தலைவரே!"
- அம்பை தேவா

புத்திரரான நாரதர், பிரஹ்லாதன் குழந்தையாக அவன் தாயின் கர்ப்பத்துக்குள்ளே இருந்தபோதே சொன்னார்: "இந்தக் குழந்தையை யாராலும் கொல்ல முடியாது" என்று.

ஆனால் பிரஹ்லாதன் பிறந்த பிறகு என்னவாயிற்று?... ஹிரண்ய கசிபு அவனை அடிக்கிறேன், கொல்கிறேன் என்கிறான்!

"பிரஹ்லாதன் உயர்ந்த பக்தன். அவனைக் கொல்ல முடியாது" என்று நாரதர் சொன்ன வாக்கைக் காப்பதற்காக, பிரும்மாவினுடைய வாக்கைக் காப்பாற்றுவதற்காக, பிரஹ்லாதனுடைய வார்த்தையைக் காப்பதற்காக பகவான் நரசிம்ஹாவதாரம் எடுத்தான்.

விச்வம் விஷ்ணுர் வஷட்காரோ பூத பவ்ய பவத்ப்ரபு: என்பது

வானொலி சிறப்பு நிகழ்ச்சி!



காஞ்சிபுரம் பேருந்து நிலையத்திலிருந்து உத்திரமேரூர் செல்லும் சாலையில் நான்கு கி.மீ. தொலைவில் உள்ளது ஓரிருக்கை. பாலாற்றின் வடகரை கிராமமான ஓரிருக்கையில் காஞ்சி மஹாஸ்வாமிகளுக்கு மணிமண்டபம் அமைக்கும் அரியதொரு சிறப்ப கைங்கரியம் நடைபெற்று வருகிறது. மஹாஸ்வாமிகளின் மகிமையையும் மணி மண்டபத் திட்டத்தின் சிறப்பையும் எடுத்துச் சொல்லும் வானொலி நிகழ்ச்சி ஒன்று, பக்தர்களால் தயாரிக்கப்பட்டு ஒலிபரப்பாகி வருகிறது. சனிக்கிழமை இரவு 8.30 முதல் 9.00 மணி வரையிலான இந்நிகழ்ச்சியை, சென்னை, கோவை, திருச்சி, மதுரை, நெல்லை, பாண்டிச்சேரி, தூத்துக்குடி, காரைக்கால், ஊட்டி, நாகர்கோயில் நிலையங்களிலிருந்து ஒலிபரப்பாகக் கேட்கலாம். இசை, இலக்கியம், இறையனுபவம் கலந்த, அரியதான இந்நிகழ்ச்சி, ஆகஸ்ட் 5 வரையில் நீடிக்கவிருக்கிறது. முன்னணி கலைஞர்கள் பலரது முயற்சியில் உருவாகியுள்ள இந்நிகழ்ச்சியில் அவ்வப்போது ஸ்ரீ மஹாபெரியவரின் குரலும் ஒலிக்கக் கேட்கலாம்.

ஸஹஸ்ரநாமத்தின் ஆரம்பம். இதற்கு என்ன பொருள் என்று கேட்டால், விச்வமாகவும் விச்வத்துக்குள்ளேயும் மஹாவிஷ்ணுவே இருக்கிறான் என்று பொருள்.

மஹாவிஷ்ணு என்றும் விஷ்ணு என்றும் அவனைச் சொல்கிறோம் அல்லவா? ராமாவதாரமும் கிருஷ்ணாவதாரமும் யாருடைய அவதாரம் என்று கேட்டால் விஷ்ணுவினுடைய அவதாரம். நரசிம்ஹ அவதாரம் யாருடைய அவதாரம் என்று கேட்டால், அது மஹாவிஷ்ணுவினுடைய அவதாரம்.

ஆகவே, சஹஸ்ரநாமத்தின் ஆரம்பத்திலேயே சொல்லப்பட்டது நரசிம்ஹாவதாரம்.

எல்லாவற்றையும் தன் வசத்திலே உடையவன் வஷட்காரேண வஜ்ரேண.

எல்லா இடத்திலும் அனுப்பிரவேசனாக அவன் இருப்பதைத்தான் முதல் திருநாமங்கள் சொல்கின்றன. நரசிம்ஹாவதாரத்தில் அதைத்தானே நிதர்சனமாகப் பார்க்கிறோம்.

நரசிம்ஹ ரூபம் இருக்கிறதே, நரம் கலந்த சிங்கமதான ரூபம் - அது எல்லோருடைய ஹ்ருதயத்தையும் கொள்ளை கொண்டது.


அவசரமாக வந்த அவதாரம்தான். மின்னலைப் போல் திடீரென்று தோன்றிய (வித்யுத்பது) அவதாரம் தான். ஆனால் மின்னல் மாதிரியே அழகானது.

உடனே ஓடி வந்த அழகு. இந்த அவசர கோலமானது பார்க்க ரொம்ப அழகானது. ரொம்ப ரமணீயமாக எல்லோர் ஹ்ருதயத்தையும் ஆகர்ஷிக்கும்படியான தன்மை படைத்ததாய் விளங்கும் ரூபம்.

அஹோபில மடத்திலே அந்த வெள்ளி மண்டபத்திலே காட்சி அளிக்கிறான் பாருங்கள் மாலோலன். அங்கு திவ்ய மங்களமாய் அர்ச்சா ரூபத்தில் எழுந்தருளியிருக்கிறான். லக்ஷ்மியை அணைத்துக் கொண்டு, அவளும் அவனை அணைத்துக் கொண்டு, அந்தச் சேர்க்கையிலே தங்க டோலையிலே (ஊஞ்சலிலே) ஆடிக் கொண்டிருக்கிறான். கம்பீரமான சிரிப்பு அந்த எம்பெருமானுக்கு. அந்த திவ்ய வடிவழகை ஸேவித்தவர்கள் மறுபடியும் பிறவாதாரே. பிறப்பை அறுக்கும்படியான மாமருந்து அவன்.

(வளரும்)

நான் பிரேதம்



"இது பிரேதத்தோட வீடுதானே?"

"ஆமாம். நீங்க யாரைப் பார்க்கணும்?"

"பிரேதத்தைத்தான் பார்க்கணும். அவர்கிட்ட ஒரு பேட்டி எடுக்கணும்."

"உக்காருங்க. நான்தான் பிரேதம்."

"ஓ... வணக்கம் சார். நான் 'எழுக இலக்கியம்' பத்திரிகையில இருந்து வரேன். என் பேரு ராசப்பன்."

"ம். சொல்லுங்க."

"பிரேதம்ற பேரை ஏன் வச்சிக்கிட்டீங்க?"

"அந்தப் பேருல ஓர் உயிர்ப்பு இருக்கு. துடிப்பு இருக்கு. அதுக்காகத்தான்.'

"உங்களோட எழுத்துக்களை எப்படிப் படிக்கிறது? போன வாரம் கூட 'சாய்ந்து பிதுங்கல்'னு 904 பக்கத்துக்கு ஒரு புக் வெளியிட்டீங்க. ரொம்பப் பிரமாதமா விழா எல்லாம் எடுத்தீங்க. அது கதையா, கவிதையா? வரலாறா, சமூகவியலா? மானுடவியலா, கணிதமா? கற்பனையா, உண்மையா?"

"இப்படி ஒரு கேள்வியை நீங்க கேட்டதுக்காக ரொம்ப சந்தோஷப்படறேன். சாய்ந்து பிதுங்கல் ஓர் அசல் இலக்கியப் படைப்பு. அசல் இலக்கியம் தன்னை அடையாளப்படுத்திக்காது. அதை அடையாளப்படுத்த முடியாது. அசல் இலக்கியம் ஒரு கலவை, ஒரு கவலை."

"712-ம் பக்கத்துல ஒரு மேற்கோள் வருது. பைரவியின் கண்கள் கோன் கொண்டு சோர்வாய் பட்டு புதிய பாதைக்கு அன்பு மூலிகைகளைப் பிசைந்து பிசைந்து எனக்கானவை அல்ல இது எனும் புரிதலோடு செப்பனிட்ட செப்பேடுகள் செப்பும் பின்புலத்தில் ஊடறு உறவில் முட்கம்பிகள் முளைத்து பிசைந்து கிழக்கு ஐரோப்பாவின் தெருக்கோடி அரசியலில் விழுந்து புரளும் ஜனத்திரளின் அங்கத்தின் துகளின் மையத்தில் குறுக்குத்தோற்றத்தில் குழிபறித்து காத்திருக்கிறேன். இதுக்கு என்ன அர்த்தம்?'

"பைரவன்றது ஒரு பூனை. அது ஒரு படிமம். நினைவு தேங்கியிருக்கிற துகள்.'

"யார் நினைவுல?"

"அது எனக்கு நினைவில்லை. முழுசா படிச்சீங்கன்னா உங்களுக்கே புரியும்."

"சரி அதை விடுங்க. இடையிடையே $E=Mc^2$ன்னு பல இடங்கள்ல சொல்றீங்க. எலி பாஷாணத்தையும் பாதுஷாவையும் ஒப்பிட்டு 135 பக்கம் எழுதியிருக்கீங்க. www.google.comனு 115 இடங்கள்ல வருது. மொத்தம் 237 கதாபாத்திரங்கள் வராங்க. இவங்களைத் தவிர ராஜராஜ சோழன், சாக்ரடீஸ், சீத்தலைச் சாத்தனார், பீஷ்மர், பாரதியார், ஆதிவாசிகள், டிராகுலா, டைனோசார் எல்லாம் ஒரே சமயத்துல வராங்க. ஏதேதோ பேசறாங்க. நடுநடுவுல 'மளிகைக் கடை பாக்கி 200', 'இந்த வாரம் கரெண்ட் பில் கட்டணும்', 'பிரசுரிக்க இயலாமைக்கு வருந்துகிறோம்' 'இந்த நிகழ்ச்சியை உங்களுக்கு வழங்குபவர்கள்...' 'வறுத்த முந்திரி பருப்பு ஒரு கப், உப்பு தேவையான அளவு' இப்படி சம்பந்தா சம்பந்தம் இல்லாம நிறைய குறிப்புகள், கொடேஷன்ஸ் எல்லாம் வருது. 127-ம் பக்கத்துல வர ஓர் அடிக்குறிப்பு 330-ம் பக்கத்துலதான் நிறைவடையுது. கதையோட ஓட்டத்துக்கு

சிரிசிரி...

பேசறேன்!

இந்த புறத் தகவல்கள் எந்த அளவுக்குத் தேவைன்னு நினைக்கிறீங்க?"

"நான் எந்த அளவுக்கு எழுதி இருக்கேனோ அந்த அளவுக்குத் தேவை"

"885-ம் பக்கத்துல இருந்து 923-ம் பக்கம் வரைக்கும் ஒரே ஃபார்முலாவா இருக்கே. x,y,z, A1, B1,C1, AB1, AB2, AB3னு நிறைய தியரம்ஸ் எல்லாம் வந்தா அதுக்குப் படிமங்கள்னு பேரா?"

"ஆமாம்."

"ஒரு புக்ல இத்தனை படிமங்கள் தேவைதானா?"

"நிச்சயம் தேவை. படிமங்கள் இல்லாம எழுதியிருந்தா அந்த புக் 4 பக்கத்தைக்கூட தாண்டி இருக்காது."

"இந்த புக்கோட ஆரம்பம் இப்படி இருக்கு..." என்று அவன் சொன்னதைக் கேட்டு விபீஷணர் திடுக்கிட்டு திரும்பினார். டைனோசார் தன் பின்னங்கால் பிடறியில்பட ஓடிக்கொண்டிருந்தது'. ஒரு சரியான ஆரம்பம் இல்லாத மாதிரி இருக்கே?"



"ஒரு நல்ல இலக்கியப் படைப்புக்கு ஆரம்பம் தேவை இல்லை. கைப் புண்ணுக்கு கண்ணாடி அவசியமா?"

"முடிவு கூட ஒரு மாதிரியாத்தான் இருக்கு. 'சாக்ரடீஸ் தனது லாண்டரி பில்லை பார்த்துக்கொண்டே உறக்கத்தில் அமுங்கும்போது மேற்கு ஆப்பிரிக்காவின் மண்சட்டி அடுப்பில் பால் பொங்கிக்கொண்டிருந்தது. அப்போதுதான் அங்கு உழன்று கொண்டிருந்த'. இது ஒரு முற்றுப் பெறாத வாக்கியம் மாதிரி இருக்கே? முதல்ல இது ஒரு வாக்கியமான்னே சரியா தெரியலை."

"ஒரு நல்ல இலக்கியப் படைப்பு முடிவடைவதில்லை."

"இது ஒரு நல்ல இலக்கியப் படைப்புன்னு எப்படி அவ்வளவு உறுதியா சொல்றீங்க?"

"பின் அட்டையில அப்படித்தான் போட்டிருக்கு."

"ரொம்ப நன்றி பிரேதம் சார். உங்களோட பேசினதுல ரொம்ப சந்தோஷம்."

"நன்றி."

- கங்கா

“துரைமுருகன்

''சட்டமன்றத்துக்குள் பேசத்தான் அனுமதி இல்லை. கோட்டைக்குள் நுழையக் கூடவா உரிமை இல்லை எங்களுக்கு...?'' என்று கொதித்துக் கொண்டிருக்கிறார்கள் அ.தி.மு.க எம்.எல்.ஏக்கள். இதுகுறித்துப் பேச அ.தி.மு.க முன்னாள் அமைச்சர் ஜெயக்குமாரை அணுகினோம். கொந்தளித்துப் போய் உணர்வுகளைக் கொட்டினார் நம்மிடம்.

''ஆட்சிக்கு வந்து ஒரு மாதம்கூட ஆகவில்லை. ஆனால் அதற்குள்ளேயே கொடுங்கோலாட்சி நடக்கிறதுன்னு அம்மா மட்டுமில்ல ஊரே சொல்லுது. சட்டமன்றத்துக்குள்ளே ஜனநாயகப் படுகொலை நடக்கிறது. வெளியே அ.தி.மு.க வினர் படுகொலை செய்யப்படுகிறார்கள். எங்கள் கழக உறுப்பினர்கள் வாயைத் திறக்கவே அனுமதிக்கப்படுவதில்லை. அப்பாவு என்கிற ஒரு எம்.எல்.ஏ எங்க அம்மாவை 'வெற்றி வாய்ப்பை இழந்தவர்' எனப் பேசுகிறார். ஆனா அவர்கள் கட்சியில் கருணாநிதி, ஸ்டாலின் அன்பழகன் எல்லாருமே சொற்ப ஓட்டுகளில்தான் ஜெயித்திருக்கிறார்கள். ஆனால் அம்மா பெருவாரியான வாக்குகள் வித்தியாசத்தில் ஜெயித்துள்ளார். ஆகவே எங்க அம்மாவைப் பற்றிப் பேச இவர்களுக்குத் தகுதி கிடையாதுன்னு நான் பேச வந்தேன். ஆனா எனக்கு அனுமதி கிடைக்கலை. ஜனநாயகத்தோட குரல்வளையை நெறிக்கும் போக்குதான் சட்டமன்றத்துல இருக்கு. தங்களுடைய கருத்துகள் மட்டும் தான் சபையில பதிவு செய்யப்படணும்னு நினைக்கறாங்க.

சபையில் இருந்து சஸ்பெண்ட் ஆன உறுப்பினர்கள் சட்டமன்ற லாபிக்குள்ளே வராமல் தடுக்க சபாநாயகருக்கு உரிமை உண்டு. ஆனால் கோட்டைக்குள்ளேயே வரக்கூடாதுன்னு தடுக்கற உரிமை அவருக்குக் கிடையாது. ஒரு எம்.எல்.ஏ, மக்கள் பிரச்னைகளுக்காகக் கோட்டையில பல அதிகாரிகளைச் சந்திக்க வேண்டியிருக்கும். ஆனா அதுக்கே அனுமதி தராம போலீஸை வச்சு தடுக்கற கொடுமை இந்த கருணாநிதி ஆட்சியில்தான் நடக்கிறது. போகிற போக்கைப் பார்த்தால், அ.தி.மு.க எம்.எல்.ஏக்கள் தமிழ்நாட்டுலயே நடமாடக்கூடாதுன்னு ஆர்டர் போட்டாலும் போடுவார்கள் போல'' என்று மூச்சு வாங்கப் பேசியவரிடம்,

''முதல்நாள் உங்கள் பொதுச்செயலாளருக்குப் பேச வாய்ப்புத் தரப்பட்டது. ஆனால் வாய்ப்புத் தரவில்லை என்று பேட்டி தந்திருக்கிறாரே...'' என்றதற்கு,

''அம்மா ஒரு சட்டமன்ற உறுப்பினரா, தன்னந்தனியா ஜான்சிராணி மாதிரி வந்து புள்ளி விவரத்தோட பேசினாங்க. அதுலயே தி.மு.க. காரங்க பயந்து போய்ட்டாங்க. இப்போ அம்மா எதிர்கட்சித் தலைவராகவும் ஆயிட்டாங்க. அதனால அம்மாவுக்குத் தொடர்ந்து பேச வாய்ப்புக் கொடுத்தா



● ஜெயக்குமார்

முதலமைச்சரா?"



* துரைமுருகன்

தி.மு.க ஆட்சியோட முகத்திரையைக் கிழிச்சுடுவாங்கன்னு பயம் வந்திருக்கு. எங்க அம்மாவை வாதத்துல ஜெயிக்க முடியாதுங்கறதுல தி.மு.க.காரங்க ரொம்பத் தெளிவா இருக்காங்க. அதனாலதான் மறுநாள் அம்மாவுக்குப் பேச வாய்ப்புத் தரல. இதுதான் உண்மை.

பொதுவா எந்தக் கேள்வியாக இருந்தாலும் அதற்கு சம்பந்தப்பட்ட அமைச்சரோ, முதல்வரோ அல்லது அவை முன்னவரோ பதில் சொல்வது தான் வழக்கம். ஆனால் இப்போது சம்பந்தப்பட்ட அமைச்சர் அவையில் இருக்கும்போதே எல்லாத்துக்கும் துரைமுருகன் எழுந்து பதில் சொல்லிக்கிட்டு இருக்கார். தொட்டதுக்கும் குறுக்கிட்டுப் பதில் சொல்றதுக்கு துரைமுருகன் என்ன முதலமைச்சரா?

தமிழகத்துல சட்டம் ஒழுங்கு சீர்கெட்டுப் போயிருக்கு. மக்கள் நிம்மதியில்லாம தவிக்க வேண்டிய சூழல் உருவாகி இருக்கு. அம்மாவோட உயிருக்கே இன்னிக்குப் பாதுகாப்பு இல்ல. அரசியல் காழ்ப்புணர்வோட ஏற்கெனவே இருந்த பாதுகாப்பை வாபஸ் வாங்கிட்டாங்க. தினம் தினம் கருணாநிதி ஆட்சியில கொலை, கொள்ளை அதிகரிச்சிக்கிட்டே போகுது. அதனாலதான் அம்மா இந்த ஆட்சியை ஆரம்பத்துலயே 'குரங்கு கையில கிடைத்த பூமாலை'ன்னு சொன்னாங்க. அது இப்போ உண்மையாகியிருக்கு. அரசாங்கத்தோட கடமையே மக்களோட உயிருக்கும் உடைமைக்கும் பாதுகாப்பு தர்றதுதான். ஆனா அந்தக் கடமையில இருந்தே கருணாநிதி அரசு தவறிடிச்சு...

மைனாரிட்டி அரசாங்கத்தைத்தான் கருணாநிதி இன்னிக்கு நடத்திக்கிட்டு இருக்காரு. இந்த அரசாங்கம் என்னிக்கு வேணும்னாலும் கவிழ்ந்துடும்ங்கற நிலைமைதான் இன்னிக்கு இருக்கு. இவங்க கூட்டணி நெல்லிக்காய் மூட்டை மாதிரி. சீக்கிரமாகவே சிதறிப்போய்விடும். அதனால எப்போது வேணும்னாலும் தேர்தல் வரலாம். அப்படி வரும்போது மீண்டும் அம்மா முதல்வராவார். அந்த நம்பிக்கையில கட்சித் தொண்டர்கள் ரொம்பவே எழுச்சியோட இருக்காங்க. அ.தி.மு.கவும் ஒரு எஃகு இயக்கமாவே செயல்பட்டுக் கொண்டு இருக்கு" என்று ஆரம்ப ஆவேசம் கொஞ்சமும் குறையாமல் பேச்சை முடித்துக் கொண்டார் ஜெயக்குமார்.

"தி.மு.க கூட்டணி ஒரு நெல்லிக்காய் மூட்டை!"

- ஆர். முத்துக்குமார்

படம்: ராஜன், ஸ்ரீஹரி

ஜெயக்குமார் காட்டம்



பொதுவாகக் கண்காட்சிகளுக்குப் போனால் பர்ஸைக் காலியாக்கி விட்டுத்தான் திரும்ப வேண்டியிருக்கும். ஆனால் சென்னை வேளச்சேரியை அடுத்திருக்கும் பள்ளிக்கரணையில் உள்ள டாக்டர் காமாட்சி நினைவு மருத்துவமனையில் நடந்து வரும் 'ஹெல்த் எக்ஸ்போ 2006' கண்காட்சிக்குப் போனால் பைசா செலவில்லாமல், நல்வாழ்வு வாழ்வதற்கான வழிமுறைகளைத் தெரிந்துகொண்டு வரலாம். நடுத்தர மக்களுக்குப் பயனளிக்கும் வகையில்



மெல்ல மெல்ல ஒரு பூகம்பம்!

• டாக்டர் கோவிந்தராஜ்

அமைக்கப்பட்டிருக்கும் இக்கண்காட்சியினுள் நுழையும்போதே, பெண் கைடுகள் நமக்கு வழிகாட்ட வந்துவிடுகிறார்கள்.

ஒவ்வொரு துறையாக விளக்கிக் கொண்டே வருகிறார்கள். இனிய குரலில் அவர்கள் சொல்லச் சொல்ல, விளக்கப் படங்களைக் காட்டக் காட்ட, அப்படியே மனத்தில் பதிந்து விடுகிறது. உடல்நலம் குறித்த விழிப்பு மெல்ல மெல்ல மொட்டவிழ்ந்து, 'ஐயோ நாம நல்லா வாழணுமே... சொல்லுங்க சொல்லுங்க' என்றொரு பதைபதைப்பு பூகம்பமே உள்ளுக்குள் எழுகிறது.

எலும்பு முறிவு சிகிச்சைத் துறை.

"பொதுவா வயதாக வயதாக எலும்புகள் தேய்மானமடையும். அப்படி ஆகும்போது, மூட்டு செயல்பட முடியாத நேரத்துல மாற்று மூட்டு பொருத்த முடியும். அதை எப்படிப் பொருத்தறாங்கன்னு இப்ப பாருங்க" என்று கைடு கூறும்போது, காட்சி நம் கண்முன் விரிகிறது.

ஏ டு இஸட் தெள்ளத் தெளிவாய் விளக்குகிறார்கள். குறுக்கிட்டு ஏதாவது சந்தேகம் கேட்டால், ஸ்கேல் எடுத்து அதட்டுவதில்லை. மாறாகப் புரியும் வரை சொல்லித் தருகிறார்கள்.

ஒவ்வொரு துறையிலும் இப்படித்தான்... இதயம், மூளை, சிறுநீரகம், நரம்பு, காது, மூக்கு, தொண்டை, பல், கண் என்று உடலின் அவயவங்களில் ஏற்படும் சின்ன பிரச்னை முதல் பூதாகர சிக்கல் வரை விளக்கி, எப்படி அதிலிருந்து விடுபடுவதென்று வழிகாட்டுகிறார்கள்.

ரத்த அழுத்தம், சர்க்கரை நோய் போன்றவற்றால் உண்டாகும் சிக்கல்கள், எப்படி அவற்றின் தோள் மீது கைபோட்டு ஆயுள்வரை தோழமையோடு வைத்துக் கொள்வது, உணவு முறைகள், இந்நோய்களைப் பற்றிய உண்மை நிலை என்று போரடிக்காமல் டியூஷன் எடுக்கிறார்கள். இரத்தப் பரிசோதனை எப்படிச் செய்யப்படுகிறது என்பது



• டாக்டர் காமாட்சி நினைவு மருத்துவமனை...

குறித்து விளக்கும்போது ரத்தம் உறைந்துவிடுகிறது, பயத்தால் அல்ல ஆச்சர்யத்தால்.

மருத்துவ உலகத்தில் லேட்டஸ்டாக என்ன நடக்கிறது, புதிய கண்டுபிடிப்புகள் என்னென்ன, எதிர்கால சாத்தியங்கள் எவையெவை என்பதற்கும் கூட இக்கண்காட்சியில் விடை கிடைக்கிறது. அவ்வப்போது நிபுணர்களும் பங்குபெற்று தங்கள் கருத்துக்களை மக்களுக்கு எடுத்துரைக்கிறார்கள்.

மருத்துவர்களின் மேற்பார்வையில் கடந்த ஜூன் 5ம் தேதி முதல் நடந்து வரும் இக்கண்காட்சியை முன்னின்று நடத்தி வருபவர் காமாட்சி மருத்துவமனையின் நிறுவனர் டாக்டர் டி.ஜி. கோவிந்தராஜ்.

"மக்கள் நோய்நொடியில்லாமல் சந்தோஷமாக வாழ வேண்டுமென்பதுதான் இக்கண்காட்சியின் நோக்கம். அவர்களை விழிப்புணர்வடையச் செய்ய என்னென்ன செய்ய முடியுமோ, அவற்றையெல்லாம் இக்கண்காட்சியில் சாத்தியமாக்கி இருக்கிறோம். நோயின் அறிகுறிகள், அவற்றைக் கண்டறிவது எப்படி, எந்தெந்த நோய்க்கு என்னென்ன வைத்தியங்கள் என்று எல்லாவற்றையும் எளிமையாக விளக்குகிறோம். மருத்துவத்தில் உள்ள அனைத்துத் துறை நோய்கள் குறித்த விளக்கப் படங்களையும் மாதிரிகளையும் கொண்டு மக்கள் தங்களை மேம்படுத்திக்கொள்ள, வரும் முன் காக்க உதவுகிறோம். மருத்துவம் என்பது பயப்பட வேண்டியதல்ல, அது ஒரு வகை மெக்கானிசம். நாம் சீரோடும் சிறப்போடும் வாழ உதவும் அத்தியாவசியத் துறை என்பதைப் புரிய வைக்கிறோம்.



• கண்காட்சி துவக்கவிழா...

எல்லாவற்றுக்கும் மேலாய் மிகக் குறைந்த செலவில் எங்கள் மருத்துவமனையில் அளிக்கப்படும் சிகிச்சைகளை மேற்கொள்ள அவர்களை அழைக்கிறோம். இனி ஒவ்வொரு வருடமும் இதுபோன்ற கண்காட்சியை நடத்தும் உத்வேகம், இந்த வருட கண்காட்சியைக் காண வந்த மக்களால் எங்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. அவர்களுக்குச் சேவை செய்யத்தான் நாங்கள். அதை செவ்வனே செய்யப்போகிறோம்" என்கிறார் டாக்டர் கோவிந்தராஜ்.

ஜீவனுள்ள இக்கண்காட்சி ஜூன் 12ம் தேதி வரை நடைபெறவிருக்கிறது.

- இலாகுபாரதி

பாசக் கதை – 4

அம்மாவின் வாசனை!

கொள்ளிக் கட்டையைச் சிதையில் சொருகிவிட்டு திரும்பிப் பார்க்காமல் நடந்தான் மணி.

அம்மாவின் மேல் நெருப்பு பிடிக்கத் தொடங்கியிருக்கும். அம்மா இல்லை... இனி வரமாட்டாள். நினைக்கும்போதே நெஞ்சடைத்தது மணிக்கு.

வீட்டு வாசலில் சொம்புத் தண்ணீர் தரப்பட்டது. கால் கழுவினான். ஈர உடையுடன் வீட்டுக்குள் சென்றான். மூலையில் அக்காக்கள் இருவரும் குசுகுசுவென எதையோ பேசிக் கொண்டிருந்தார்கள். இவனைக் கண்டதும் அழும் பாவனையில்...

"எய்யா... மணி..." என்று இழுத்துப் பிடித்து அழ ஆரம்பித்தார்கள். அவர்களிடம் ஒரு செயற்கைத்தனம் இருப்பதாகப்பட்டது மணிக்கு...

அவர்களிடமிருந்து விடுபட்டு சமையலறைக்கு வந்தான். அம்மா இதே அடுப்பங்கரையில்தான் அவனுக்குப் பலமுறை சோறு போட்டிருக்கிறாள்.

"நீ உருட்டி தந்தா ருசி கூடிடுது அம்மா..." என்பான்.

''எங்கையில நெய்யிருக்கில்லா... தெரியாதா உனக்கு... நான் பிசைஞ்சு வச்சாத்தான் உங்கப்பாவும் சாப்பிடுவாக...!" என்பாள்.

நினைக்கையில் நெஞ்சுக்குழி அடைத்தது மணிக்கு.

அவனுக்கு விவரம் தெரிந்து அப்பாவைப் பார்த்ததில்லை. எல்லாம் அம்மாதான். அவன் பிறந்த சில வருடங்களிலேயே அவர் காலமாகிவிட்டார் என்பது பிறர் சொல்லித்தான் அவனுக்குத் தெரியும். அந்தக் குறை தெரியாமல் இருபத்து மூன்று வயது வரை வளர்த்து விட்டாள்.

இரண்டு பெண்களுக்குப் பிறகு பிறந்த ஒற்றை ஆண்பிள்ளை மணி. அதுவும் அப்படியே அப்பன் ஜாடை. அதனால் அம்மாவுக்கு அவன் மேல் அலாதி ப்ரியம்... யாரும் ஒரு சொல் சூடாகச் சொல்ல விடமாட்டாள்.

கூடத்தில் ஏதோ சலசலப்பு கேட்டது. எட்டிப் பார்த்தான் மணி. வக்கீல் மாமா வந்திருந்தார். பெரியக்காதான் சத்தம் போட்டுக் கொண்டிருந்தாள்.

''அதெப்படி..? இருக்கிற சொத்த மூணா பிரிச்சு எழுதின மாதிரி... நகையையும் மூணு பாகம் போட வேண்டியதுதானே!"



"அதெப்படிம்மா முடியும்? உங்கம்மா தெளிவா எழுதி வச்சிருக்காங்களே... என் நூறு பவுன் நகையில, மணி அவனுக்கு வரப்போற பொண்டாட்டிக்காக புடிச்சத எடுத்துக்கட்டும். மீதிய எம்மகளுங்களுக்கு குடுத்திரணும்னு!'' வக்கீல் மாமா சொல்லிக் கொண்டிருந்தார்.

"நியாயப்படி பார்த்தா அம்மா நகையெல்லாம் பொட்டப் புள்ளைங்களுக்குத்தான் போய்ச் சேரணும்! இது அநியாயமால்ல இருக்கு!" சின்னக்கா சலித்துக் கொண்டாள்.

"இங்க பாரும்மா... நியாய அநியாயமெல்லாம் செல்லாது... உங்கம்மா தெளிவா எழுதி வச்சிருக்காங்க... அதுப்படிதான் நடக்க முடியும்! புரிஞ்சுதா!"

லெதர் பேக்கை திறந்து தாம்பாளத் தட்டு நிறைய அம்மாவின் நகைகளை அள்ளி வைத்தார்.



வளையல், ஒட்டியாணம், கங்கன், காப்பு... கர்ணப்பூ... என்று வகை வகையாக...

மணியைப் பார்த்துக் கூப்பிட்டார்...

"மணி! வாடா... வந்து உனக்குப் புடிச்சத எடுத்துக்கோ!"

மணி, அக்காக்கள் இருவரையும் பார்த்தான். இருவரும் கழுத்து நிறைய நகை நட்டுகளோடுதான் இருந்தார்கள். இருவரும், இவனை விரோதியைப் பார்ப்பது போல் பார்த்தனர்.

மணி மெதுவாக முன்னால் வந்தான். நகை குவியலைக் கிளறினான். எதையோ தேடினான். அக்காக்கள் முகத்தில் கவலை ரேகைகள்... கடைசியில் மணி அதை எடுத்துவிட்டான். உள்ளங்கைக்குள் பொதித்தான். லேசான ஜில்லிப்பு விரல்களில்.

அம்மா சாகும்வரை அணிந்திருந்தது அது. "உங்கப்பா ஆசை ஆசையா ராமேஸ்வரத்திலிருந்து வாங்கிட்டு வந்தது. கழுத்து நிறைய எத்தனையோ நகை போட்டிருப்பேன். ஆனா அதெல்லாம் தொடமாட்டே... ஆனா இத தேடிப்புடிச்சு கையால இழுத்துட்டேதான் எங்கிட்ட பால் குடிப்பே... அதுக்காகவே இது எனக்கு ரொம்பப் புடிக்கும்!" அம்மா என்றோ சிலாகித்தது ஞாபகத்துக்கு வந்தது மணிக்கு.

அதை முகத்தருகே, இரண்டு உள்ளங்கைக்குள் வைத்துக் கொண்டு சென்றான். அழுத்தமாக முத்தமிட்டான். அம்மாவின் விபூதி கலந்த தெய்வீக வாசனை...

அம்மாவே அருகே வந்தது போல் இருந்தது மணிக்கு. சுற்றிலும் உள்ள முகங்கள், என்ன எடுத்தான் என்று ஆர்வமிகுதியில் கண்கள் விரித்தன.

மணி கைகளைத் தாழ்த்தி விரித்தான். உள்ளே சிகப்பு கலரில் அம்மாவின் பவளமாலை! அக்காக்கள் இருவர் முகத்திலும் பிரகாசம்.

மணி அதைக் கழுத்தில் போட்டுக் கொண்டு நகர்ந்தான்.

"என் தம்பி எப்பவும் அப்படித்தான், எதுக்கும் ஆசைப்பட மாட்டான்!" பெரியக்கா சொல்லிக் கொண்டிருந்தாள்.

வக்கீல் மாமா இவனை ஆச்சர்யமாக பார்த்துக் கொண்டிருந்தார். ○

மாரிமுத்து

"அதென்ன இப்படிக் கேட்டுட்டீங்க. 1947-ல ஆரம்பிச்சு நாங்க இந்தத் தொழில்ல இருக்கோம். 60-வது வருஷத்தை நெருங்கிக்கிட்டு இருக்கோம் தெரியுமா?" சொல்லும்போதே பெருமிதம் பொங்குகிறது வாசுதேவனின் குரலில்.

"1947-ல சுதந்திரம் கிடைச்ச பிறகு எங்க அப்பா ரங்காச்சாரி முதன் முதலா இந்த நிறுவனத்தை ரொம்பச் சின்னதாத்தான் ஆரம்பிச்சாரு. ஆனா அவரு எடுத்துக்கிட்ட முதல் வேலை ரொம்பப் பெரிசு. நினைச்சுப் பார்க்கவே முடியாத மாதிரி பிருமாண்டமானது. என்ன தெரியுமா? இந்திய தேசியக் கொடியைத் தயாரிச்சுக் கொடுக்கிறதுதான். காதி கிராமாத்யோக் பவன் ஒரு தேசியக் கொடியைக் கொடுத்தாங்க. அதை அளவா வச்சுக்கிட்டு வர்ணங்களைச் சரியா கலந்து, ரொம்ப ரொம்ப கவனமா தேசியக் கொடியைச் செஞ்சு கொடுத்தோம். பண்டல் பண்டலா தேசியக் கொடியைக் கட்டி அனுப்பி வைச்சோம். முக்கிய சுதந்திர போராட்டத் தலைவர்கள் பலரை எங்க அப்பா நேர்ல சந்திச்சிருக்காரு. முதன்முறையா எங்களுக்குக் கிடைச்ச இந்த அற்புதமான வாய்ப்பை நினைச்சா இப்போகூட பெருமையா இருக்கு" என்கிறார் வாசுதேவன்.

ஸ்ரீராம் லோக் அண்டு கம்பெனி எனும் பெயர் ரொம்பவே பிரபலமானது. முதலில் இவர்கள் இந்த நிறுவனத்தைத் தொடங்கியது சென்னை ரங்கநாதன் தெருவில்தான். டையிங், டார்னிங், எம்ப்ராய்டரி என்று படிப்படியாக வளர்ந்து இன்று ஆடைகளை அழகுபடுத்துவதை, ஒழுங்குபடுத்துவதை முதன்மையான பணியாக ஏற்றுக்கொண்டு இயங்கி வருகிறார்கள். மூன்று முக்கிய வர்ணங்களை ஆதாரமாகக் கொண்டு தொழில் தொடங்கிய இவர்கள், இன்று அதிசயத்தக்க வகையில் வர்ணஜாலம் நிகழ்த்திக் கொண்டிருக்கிறார்கள்.

"எங்களை நம்பி வர்றவங்களை முழுசா திருப்திபடுத்தறோம். அவங்களோட பரிபூர்ண மகிழ்ச்சிதான் எங்களோட டார்கெட். இதைத்தான் நாங்க செஞ்சிட்டு வர்றோம்" என்கிறார் வாசுதேவன். "ரொம்பப் பழைய பட்டுப் புடைவைகளைக்கூட புத்தம் புதுசா மாத்தித் தர்றோம். வெறுமையா இருக்கிற புடைவைகளுக்கு எம்ப்ராய்ட்ரி செய்து தர்றோம். கலர் மாத்தணும்னா அதுவும் செய்யறோம்."

இன்று தெருவுக்குத் தெரு டையிங், டார்னிங் செய்ய ஆட்கள் இருக்கிறார்கள். ஆனால் இவர்களைப் போட்டியாளர்களாகக்கூட ஏற்றுக்கொள்ள மறுக்கிறது ஸ்ரீராம் லோக் அண்டு கம்பெனி. 60 வருடங்களாக எந்தத் தேக்கத்தையும் சந்திக்காமல் ஒன்று, ஒன்றிலிருந்து மற்றொன்று, அதிலிருந்து இன்னொன்று என்று தமது கிளைகளைப் பரப்பி இந்த அளவுக்கு விஸ்திரணமான ஒரு வளர்ச்சியை எட்டிப் பிடித்திருக்கிறது. இவர்களது வெற்றிக்கான ரகசியம் என்ன?



• சகோதரருடன் வாசுதேவன்...

பூந்திக்கொட்டை காட்டும் வழி!

மிக எளிமையாகவே பதில் அளிக்கிறார் வாசுதேவன். "பூந்திக் கொட்டை போட்டு பட்டுப் புடைவைகளை டையிங் செய்யறோம். இந்த மாதிரி வேற யாராவது செய்வாங்களா? சல்ஃப்யூரிக் ஆசிட் போட்டு போலியா மினுமினுக்கச் செய்யறவங்கதான் இங்கே அதிகம். ஒரு மூணு மாசத்துக்கு ஜொலிக்கும். அப்புறம் மங்க ஆரம்பிச்சுடும். புடைவையும் நாளாக நாளாக நைஞ்சுப் போயிடும். இந்த மாதிரி ஒரு யுக்தியை நாங்க கடைப்பிடிக்கிற இல்லை. அப்படிச் செய்யறது சுலபம். ஆனா எங்களுக்கு அது தேவை இல்லை."

வெற்றிக்கான சூத்திரம் இது தான். புதிதாகத் தொழில் புரிய முனையும் ஒவ்வொருவரையும் வரவேற்க இரண்டு கதவுகள் திறந்து கிடக்கின்றன. ஒன்று சல்ப்யூரிக் அமிலம் காட்டும் வழி. இது சுலபமானது. உடனடி லாபங்களை வரவழைக்கக்கூடியது. உடனுக்கு உடனே ஜொலிக்கக்கூடியது. ஏகத்துக்கும் மினுமினுக்கக்கூடியது. இரண்டாவது பூந்திக்கொட்டை காட்டும் வழி. இது சற்று சிரமமானது. பழைமையானது. இந்த வழியில் பயணிக்க வேண்டுமானால் நிறைய மெனக்கெட வேண்டும். நிறைய பொறுமை வேண்டும். பக்குவம் வேண்டும். ஜொலிப்பும் குறைச்சலாகத்தான் கிடைக்கும்.

வாசுதேவனும் அவரது சகோதரர் ரங்கராஜனும் இரண்டாவது வழியைத் தேர்ந்தெடுத்தவர்கள். இவர்களது தந்தையார் பண்டல் பண்டலாக தேசியக் கொடியை ரயில் பெட்டியில் ஏற்றி அனுப்பியபோது, தேசத்துக்கான சேவை மனப்பான்மையே உந்துசக்தியாக இருந்தது. லாபம் அப்போது ஒரு குறிக்கோளாக இருந்தது கிடையாது. இன்று உந்துசக்தி மாறியிருக்கிறது.

"நாங்க செய்யறது சமூக சேவையா இல்லாம இருக்கலாம். ஆனால் இதுவும் ஒரு வகை சேவைதான். எல்லாத் தொழிலுமே சேவைதான். எடுத்துக்கிட்ட வேலையில முழுமனசோட ஈடுபடறோம். யாரும் குற்றம், குறை சொல்லாத மாதிரி நடந்துக்கறோம். வாடிக்கையாளர்களிடம் நேர்மையோடு நடந்து கொள்கிறோம். பல இளம்பெண்களுக்கு வேலைவாய்ப்பு கொடுக்கிறோம். நிறைய சொல்லித் தர்றோம். புதுசு புதுசா பல டிசைன்களை உருவாக்கிக்கிட்டே இருக்கோம். மாறிட்டு வர ஃபேஷனுக்கு ஈடு கொடுக்கிற மாதிரி எங்களையும் தொடர்ந்து புதுப்பிச்சுக்கிட்டு வர்றோம். வாடிக்கையாளர்களோட நம்பிக்கையைச் சிதறடிக்காம, அவங்க மனசு நோகாம, அவங்க கொடுக்கிற காசுக்கு விசுவாசமா வேலை செய்றோம்."

மிக மிக எளிமையாகச் சொல்லிவிட்டார் வாசுதேவன். குண்டு குண்டான நிர்வாகவியல் புத்தகங்கள் அனைத்தும், அத்தனை பக்கங்களில் இந்த எளிமையான உண்மையைத்தான் படோடோபமான முறையில் திரும்பத் திரும்பச் சொல்லி வருகின்றன.

- வ்ருத்திஸ்ரீ

படம்: ஸ்ரீஹரி

• ஏ.எஸ்.யோகானந்தம், கலிங்கியம்

? சட்டமன்ற வளாகத்துக்குள் செல்ல முயன்ற அ.தி.மு.க. எம்.எல்.ஏக்களைத் தடுத்து நிறுத்திய போலீஸ் அதிகாரிகளைப் பார்த்து, "ஆட்சி மாறும், அப்போது காட்சியும் மாறும். இதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்" என்று அ.தி.மு.க. எம்.எல்.ஏக்கள் போலீஸ் அதிகாரிகளிடம் எச்சரிக்கை செய்தது பற்றி..?

❑ ரூ.100/- பரிசு பெறுபவர்:

ஆர்.ராமசுப்ரமணி,
88/6, டாக்டர் ஜெயராமன் காலனி, வடக்கு வீதி,
திருவாரூர் - 610 002

கக் கூடாது என மேலிடத்தில் பேரம் படிந்து விட்டதாக வந்த செய்தி உண்மையாகிறது. அப்படியானால் அதை கூட்டணிக்கு வோட்டுக் கேட்ட போதே மக்களிடம் தெரிவித்திருக்க வேண்டாமா? அவர்களை ஏமாற்றலாமா?

• ஆர்.கோபாலன், சென்னை - 33

? கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் நல்ல கண்ணுவைப் பார்க்கிறபோதெல்லாம் மற்ற கட்சித் தலைவர்களின் மனசாட்சி என்ன சொல்லும்?


! பிழைக்கத் தெரியாதவராக இருக்காரே என்றுதான்! இதர அரசியல்வாதிகளின் மனசாட்சிகள், சரி - தவறு / தார்மிக நெறிகள் என்பதையெல்லாம் நிராகரித்து ரொம்ப காலமாகிவிட்டது!

நீங்கள் கேட்டவை-தராசு

முதல்வரிடம் என்ன எதிர்பார்க்கிறீர்கள்?



• பிழைக்கத் தெரியாமல்...!



• பரஸ்பர...

! ஆட்சி மாறும்போது காட்சி மாறும் என்பது எல்லோருக்கும் தெரிந்த, எதிர்பார்க்கப்படுகிற ஒன்றுதான். ஆனால் அது (காட்சி) ஒவ்வொரு ஆட்சி மாற்றத்துக்கும் பிறகு, கேவலத்திலும் கேவலமாக மாறி வருவதுதான் விசனத்தை அளிக்கிறது.

• அ.சுஹைல் ரஹ்மான், திருச்சி - 21

? "தமிழக ஆட்சியில் காங்கிரஸ் பங்கு பெறும் கோரிக்கை நீடிக்கிறது" என வீரப்ப மொய்லி கூறுகிறாரே?

! சோனியாவைச் சந்தித்துவிட்டு வந்த கருணாநிதி, அக்கோரிக்கையை நிராகரித்து விட்டார். சோனியாவும் மௌனம் காக்கிறார்! ஆக மொத்தம், காங்கிரஸுக்கு அதிக ஸீட் ஒதுக்கியபோதே, ஆட்சியில் பங்கு கேட்

• அ.சுகுமார், காட்பாடி

? மத்திய அரசு ரேஷன் உணவுப் பொருட்களின் விலையை உயர்த்தியுள்ளதே...?

! மத்திய அரசு ரேஷன் அரிசி விலையை உயர்த்த, தமிழக அரசு கிலோ இரண்டு ரூபாய் என விலையைக் குறைக்க, நிதி அமைச்சர் அன்பழகனுக்கு இரட்டைத் தலைவலி. பெட்ரோல் - டீசல் விலை உயர்வால் கூடுதலாகக்

✱ ரூ.50/- பரிசு பெறுபவர்:

ஆ.சண்முகசுந்தரம்,
14, சிந்தாமணி பஜார்,
திருச்சி - 620 002.

கிடைக்கப் போகிற விற்பனை வரி வருவாய் அந்த வலிக்கு டைகர் பாம்.

● **ஆர்.ராமசுப்ரமணி, திருவாரூர்** ❑

? பல்வேறு சிரமங்களுக்கிடையிலும் தொடர்ந்து பத்திரிகையை நடத்தி வரும் தங்களைப் போன்ற பத்திரிகைகளுக்கு, ஒரு பத்திரிகையாளர் என்ற முறையில் முதல்வர் என்ன உதவி செய்யவேண்டும் என்று எதிர்பார்க்கிறீர்கள்?

! நியாயமான விமர்சனங்களைக்கூட ஜாதி சாயம் பூசியும் வரலாறைத் திரித்து எழுதியும் பம்மாத்து காட்டும் போக்குகளைத் தவிர்த்து, விமர்சனங்களை நேர்மையாக ஏற்கிற அல்லது தக்க காரணத்துடன் மறுக்கிற பக்குவம் இருந்தால் போதும். அதுவே பெரிய உதவி.

● **ஆ.சண்முகசுந்தரம், திருச்சி - 2** ✱

? தமிழக அரசுக் கல்லூரிகளில் இட ஒதுக்கீடு செய்த 69 சதவிகிதம் போக, மீதி இடங்களை முற்பட்ட வகுப்பினருக்கு ஒதுக்கிவிட வேண்டியது தானே... பிரச்னையே இல்லாது போகுமே...?

! மீதி இடங்களை பொதுப் பிரிவில் வைத்துக் கொண்டிருந்தால்தானே நாளைக்கு மேலும் சில பிரிவினர் ஒதுக்கீடு கோரிக்கை எழுப்பும்போது பங்கு பிரித்துக் கொடுத்து அரசியல் பண்ணலாம்! அதற்காகத்தான்.

● **ஆர்.கே.ராமு, குடியாத்தம்**

? தயாநிதி மாறனுக்கும் அவரது குடும்பத்தினருக்கும் கூடுதல் பாதுகாப்பு கோரி தி.மு.க. எம்.பிக்கள் சார்பில் பிரதமரிடம் மனு கொடுக்கப்பட்டிருப்பது குறித்து...?

! மாறன் குடும்பத்தினர் மற்றும் தி.மு.க. வட்டாரத்திலிருந்து தமக்கு மிரட்டல்கள் வந்துகொண்டேயிருப்பதாக வைகோ மனு கொடுத்துக் கொண்டிருக்கிறாரே! இன்றைய அரசியலே கொள்கை அடிப்படையில் அல்ல; குண்டாந்தடி அடிப்படையில்தான்!



• ..மிரட்டல்!




• திரும்பிய மசோதா!



• தலைவலிக்கு மருந்து



• பேரத்தின் விளைவு!



• பக்குவ உதவி!

● **எச்.ஆன்டனி தமிழரசன், மும்பை-17**

? ஆதாயம் பெறும் பதவி தொடர்பான மசோதாவை ஜனாதிபதி கலாம் திருப்பி அனுப்பியுள்ளாரே...?

! மறுபரிசீலனைக்குத் திருப்பி அனுப்பலாமே தவிர, நிராகரிக்கும் அதிகாரம் அவருக்கு இல்லை. கலாமும் அச்சட்டத்தை எதிர்க்கவில்லை. சில முரண்பாடுகளைச் சுட்டிக்காட்டித் திருத்தம் கோரியுள்ளார். அவை நிறைவேற்றப்பட்டு அவரிடம் திரும்பப் போகும்; கையெழுத்தாகும்; நடைமுறைக்கு வரும். அரசியல்வாதிகளின் ஒட்டுமொத்த சுயநலம் தோல்வி கண்டதாக சரித்திரமே இல்லை. ○

இன்னும் சிலநாட்களில் ரிலீஸாகவிருக்கும் 'இளவட்டம்' படத்தின் இயக்குநர் ராஜராஜா, இதற்கு முன்பு மொழி மாற்றுப் படங்களுக்கு வசனகர்த்தாவாகப் பணியாற்றியவர். இவரிடம் டப்பிங் பட உலகின் நிலவரத்தைக் கேட்டால், பல ஆச்சர்யங்களை அள்ளிக் கொட்டுகிறார்.

"இன்னைக்குத் தமிழ் சினிமாவுக்குப் பெரும் எதிரியாவும் பல தமிழ்ப்படங்களோட ஓட்டத்துக்குப் பெரும் முட்டுக்கட்டையாவும் உருவெடுத்திருப்பது தமிழ் பேசும் ஆங்கிலப் படங்கள்தான். இப்போ அர்னால்ட், ஜாக்கிசான் படங்களிலெல்லாம்கூட, 'இன்னாபா, வீட்ல சொல்லிக்கின்னு வந்தியா, செவுலு

"தமிழ் சினிமாவின் சுனாமி!" டப்பிங் படங்கள்

பிகிலு ஆயிடும் தெர்தா' என்கிற ரேஞ்சுக்கு வசனங்கள் எழுதப்பட்டு, பாமர ரசிகர்களுக்கு ரொம்ப நெருக்கமாகியிருக்கின்றன. இதனால் டப்பிங் படங்களுக்கு தமிழ்நாட்டில் பெரிய சந்தை உருவாகியிருக்கு. வெளிநாட்டுப் படங்கள் இந்தியன் டெரிடரிஸ்ங்கிற பேர்ல மொத்தமா இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், ஸ்ரீலங்கா போன்ற நாடுகளுக்குச் சேர்த்து ரைட்ஸ் கொடுக்கப்படும். இதுல ஸ்ரீலங்கா பெரிய மார்க்கெட்.

முன்பு எத்தனையோ படங்கள் வெளிவந்தாலும் 'மம்மி'யோட பிரமாண்ட வெற்றிதான் டப்பிங் படங்களோட வர்த்தகத்தையே மாத்தி எழுதுச்சு. 'மம்மி' படத்துக்கு ஒவ்வொரு தியேட்டர்லயும் அஞ்சு லட்சம் வசூலாச்சு. தமிழ்நாடு முழுக்க அஞ்சு கோடி. பின்னாடி வந்த 'டைட்டானிக்', வசூல்ல மம்மியையும் தாண்டுச்சு. அன்னைக்குத்தான் எல்லோருக்கும் புரிஞ்சது அசல் தமிழ்ப் படங்களைக் காட்டிலும் ஹாலிவுட் டப்பிங் படங்களோட பாக்ஸ் ஆபீஸ் கலெக்ஷன் எகிற வாய்ப்பிருக்குன்னு. அதிரடி மன்னன் ஜாக்கிசானுக்கு இங்கே தனி மார்க்கெட் உண்டு. அவரோட ஹாலிவுட் படங்களைவிட ஹாங்காங் படங்களுக்குத்தான் கிரேஸ் அதிகம். ஜாக்கியோட 'ஆக்ஸிடெண்டல் ஸ்பை'க்கு இங்கே இரண்டரை கோடி வசூலாச்சு.

இதுபோன்ற வெற்றிகளால ஒரு புதுத்துறையே இங்கே உருவாகியிருக்கு. இந்தியாவுல வெளியிடுற ஆங்கிலப் படங்களுக்கெல்லாம் மும்பையிலதான் தணிக்கை. வார்னர் பிரதர்ஸ் முதற்கொண்டு ஹாலிவுட்டோட அத்தனை ஜாம்பவான் பட நிறுவனங்களோட கிளை நிறுவனங்களும் சென்னையில இருக்கு. அவங்கதான் படத்தை வியாபாரம் செய்வாங்க. உடனே அடுத்தகட்ட வேலை மளமளவென ஆரம்பமாகும்.

மொழிபெயர்ப்பாளர் மொத்த படத்தோட வசனத்தையும் தமிழ்ல எழுதிக் கொடுத்துட்டா, வசனகர்த்தா வட்டார மொழியெல்லாம் சேர்த்து வசனத்தைக் கச்சிதமா எழுதிடுவாரு. அப்புறம் டப்பிங் வேலைகள் முடிஞ்சா நேரா ரிலீஸ்தான். எல்லாம் சேர்த்து அதிகபட்சமா அஞ்சு லட்சம் செலவு செஞ்சா, படத்தை நல்ல ரேட்டுக்கு வித்துடலாம். ஹாலிவுட் நிறுவனங்கள் தங்களோட படத்தை கொட்டாம்பட்டி வரை ரிலீஸ் செஞ்சு அதுல கிடைக்குற இரண்டாயிரம்

ரூபாயையும் விட மாட்டாங்க. பிஸினஸ்ல அவ்வளவு கெட்டி.

டப்பிங் படங்களால எப்பவுமே லாபம்தான். தமிழ்ப் படங்கள் போல ஒரேடியா கவுந்துடாது. ஏன், கையைக்கூட கடிக்காது. மிஞ்சிப் போனா சிலசமயம் தியேட்டர்காரங்களுக்கு மட்டும் நஷ்டம் ஏற்படுத்தும். தமிழ்நாட்டுல ஒன்பது ஏரியா இருக்கு. படத்தை வாங்குபவர் கஷ்டப்படாம உட்கார்ந்த இடத்துலருந்து லாபம்





• ராஜராஜா

இன்னைக்கு டப்பிங் படங்களுக்கான வரி ஐம்பது சதவிகிதமா இருக்கறதால படவரத்து குறைஞ்சு போச்சு. ஆனாலும் ரசிகர்கள் மத்தியில் மவுசு குறையவேயில்லை. இதனால விநியோகஸ்தர்களும் பெரிய நடிகர்களோட

...ற்றிய ஆச்சர்யங்கள்

பார்க்கலாம். சமீபத்துல வெளிவந்த 'கல்லறை மனிதன்', ஷேரன் ஸ்டோனோட 'பேஸிக் இன்ஸ்டிங்ட்' எல்லாம் வசூல்ல எகிறுன படங்கள். 'மிரட்டல் அடி' முப்பது லட்சத்துக்கு வாங்கின படம். ஆனா அது வசூலிச்சது நான்கு கோடி.

நேரடித் தமிழ்ப் படங்களை வாங்கறதுக்குப் பதிலா 'கிங்காங்' போன்ற வெகுஜனத்தை ஈர்க்கக்கூடிய டப்பிங் படங்களை வாங்கவே பிரியப்படறாங்க. 'கிங்காங்', 'மிரட்டல் அடி' போன்ற படங்கள் வெளியானபோது அதே நாள்ல வெளியான பல தமிழ்ப் படங்கள் பலத்த அடி வாங்குச்சு. ஆக, என்னைக்கும் தமிழ்ப் படங்களுக்கு ஆபத்து விளைவிக்கிற சுனாமியே இந்த டப்பிங் படங்கள்தான்" என்று எச்சரிக்கை மணி அடிக்கிறார் ராஜராஜா.

- ச.ந. கண்ணன்



அமரர் கல்கி

நினைவுச் சிறுகதைப் போட்டி 2006

படைப்பாளிகளே! வாசக எழுத்தாளர்களே! நீங்கள் அனைவரும் ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் சிறுகதைப் போட்டி வந்தேவிட்டது!

முதல் பரிசு - ரூ. 10,000

இரண்டாம் பரிசு - ரூ. 7,500

மூன்றாம் பரிசு - ரூ. 5,000

தவிர, பிரசுரத்துக்குத் தேர்வாகும் ஒவ்வொரு கதையும் ரூ. **500** சன்மானம் பெறும்.

யார் வேண்டுமானாலும் எத்தனை கதைகள் வேண்டுமானாலும் எழுதலாம் என்றாலும் எழுதுபவர் முப்பத்தைந்து வயதுக்குட்பட்டவராகவோ அல்லது அறிமுக எழுத்தாளராகவோ இருந்தால் சிறப்புப் பரிசு உண்டு. மற்ற நிபந்தனைகள் வழக்கமானவை.

விதிமுறைகள்:

- கல்கியில் 4 பக்கங்களுக்கு மிகாமல் இருப்பது நல்லது.
- சொந்தக் கற்பனைதான் என்பதற்கு உறுதிமொழிக் கடிதம் வேண்டும். அது இல்லாத கதைகள் பரிசீலிக்கப்பட மாட்டா.
- அறிமுக எழுத்தாளர் எனில், இதற்கு முன் எந்தப் பத்திரிகையிலும் எழுதியதில்லையென்றும், போட்டி முடிவு வெளியாகும் வரை எழுதுவதில்லை என்றும் உறுதிமொழி தர வேண்டும்.
- படைப்பாளி முப்பத்தைந்து வயதுக்குட்பட்டவராக இருந்தால் அதற்கான ஏதாவதொரு அத்தாட்சி (பத்தாம் வகுப்பு டி.சி - ஜெராக்ஸ் போன்றவை) கண்டிப்பாக இணைக்கப்பட வேண்டும்.
- முழு வெள்ளைத்தாளில் ஒரு பக்கத்தில் மட்டுமே எழுத வேண்டும்.
- தேர்வாகாத கதைகளைத் திரும்பப் பெற, போதிய தபால் தலைகள் ஒட்டிய அஞ்சல் உறை இணைக்கப்பட வேண்டும். பின்னால் தனியே அனுப்பிப் பயனில்லை.
- போட்டிக்கு அனுப்பும் கதையை, முடிவுகள் வெளியாகும்வரை வேறு இதழுக்கோ, இணையதளத்துக்கோ, போட்டிக்கோ அனுப்பக்கூடாது.
- பரிசுக்குரிய கதைகளை நடுவர் குழு பரிசீலித்துத் தேர்ந்தெடுக்கும். சந்தேகம் எழும் விஷயங்களில் கல்கி ஆசிரியரின் தீர்ப்பே இறுதி.
- முடிவு வெளியாகும்வரை, எவ்வித கடிதப் போக்குவரத்தோ, தொலைபேசி விசாரிப்புகளோ கூடாது.
- 'அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி - 2006' என்று உறையின் மேல் தவறாமல் குறிப்பிட்டு, அனுப்ப வேண்டிய முகவரி:

ஆசிரியர், கல்கி, கல்கி பில்டிங்ஸ், 47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 032

- கதைகள் வந்து சேரக் கடைசித் தேதி: ஜூன் 15
- போட்டி முடிவும் முதல் பரிசுக்கதையும் ஆகஸ்ட் 6 ஆண்டு மலரில் வெளியாகும்.

படைப்பாளிகள், வாசக எழுத்தாளர்கள் அனைவரும் உற்சாகத்துடன் கலந்துகொண்டு சிறப்பிக்க அழைக்கிறோம்.

- ஆசிரியர்

இது புதுசு

ஜப்பானில் குழந்தை கிடைக்குமா?



PCO STD ISD

PCO

நம்ம தமிழ்நாட்டு மக்கள் அட்சய திருதியைக்கு ரேஷன் வாங்குற லெவல்ல க்யூவுல நின்னு தங்கத்தைக் கின்னிட்டுப் போனாங்கங்கறது உண்மைதான். ரெண்டு மாதத்துல மூவாயிரம் ரூபாய் விலை கூடியிருக்கிறதால பலர் என்ன செய்யறதுன்னு புரியாம தவிச்சுக்கிட்டிருக்காங்க. நாலைஞ்சு மாசங்களுக்கு முன்னால நிச்சயமான பல பொண்ணுங்களோட கல்யாணம், இப்போ இதனால தடைப்பட்டு நிக்குதாம். அப்ப பத்து பவுன் போடுறேன்னு சொன்ன பொண்ணு வீட்டுக்காரங்களால, இப்போ அதை நிறைவேத்த முடியாததால, இப்ப இந்த மாதிரி செய்திகள் வெளிவர்றது வாடிக்கை ஆயிடுச்சு. இப்போ எஸ்.டி.டி போட்டு, கல்யாணத்துக்கு அடுத்த ஸ்டேஜுக்குப் போவோம்.

STD

சிங்கப்பூர் வாழ் சீனத் தம்பதியருக்கு ரொம்ப வருஷமா நோ குழந்தையாம். மும்பையில வாடகைத் தாய் முறை செம ஃபாஸ்ட்டா வளர்ந்துக்கிட்டு வர்றதால, அங்க இருக்குற ஹீரா நந்தினி ஆஸ்பிட்டலுக்கு வந்திருக்காங்க. அந்த சீனப் பெண்மணிக்கு கர்ப்பப்பை இல்லாததால, வாடகைத்தாய் மூலமா அழகா ஓர் ஆண் குழந்தை பொறந்திருக்கு. இப்போ குழந்தை சீனத் தம்பதியினரோடதுதான்னு நிரூபிக்க மரபணுவை அமெரிக்காவுக்கு அனுப்பியிருக்காங்க. அதுல நிருபணம் ஆனபிறகுதான் அவங்க குழந்தையோட சிங்கப்பூர் போக முடியுமாம். ஓ.கே... அடுத்த ஐ.எஸ்.டி மேட்டரும் கர்ப்ப மேட்டர்தான்.

ISD

என்னன்னு தெரியல, கடந்த சில வருடங்களா மைக்கேல் ஜாக்ஸன் பத்தி நியூஸ் வந்தாலே அது குழந்தைகள் சம்பந்தப்பட்டதாகவே இருக்கு. இப்பவும் அப்படிப்பட்ட நியூஸ்தான். பல சர்ச்சைகள்ல சிக்கி சீரழிஞ்சு ஒருவழியா விடுதலையான ஜாக்ஸன், கொஞ்சகாலம் பஹ்ரைன்ல போய் ஓய்வெடுத்தாரு. இப்போ ஜாலியா ஜப்பான்ல டூர் போயிட்டிருக்காரு. ஏற்கெனவே மூணு குழந்தைகளுக்கு அப்பாவா இருக்குற ஜாக்ஸன், இப்போ நாலாவதா ஒரு குழந்தையைத் தத்தெடுக்கப் போறதா அறிவிச்சிருக்காரு. அதுக்காக ஜப்பான் ஆதரவற்றோர் இல்லங்கள்ல தன்னோட மனசுக்குப் பிடிச்ச குழந்தை கிடைக்குதான்னு தேடுதல் வேட்டை நடத்திக்கிட்டிருக்காராம்.

- முகில்

திடீர்னு வச்ச போட்டின்னாலும் வந்து குவிஞ்சு கடிதங்கள பார்க்கறப்ப படார்னு மலைப்பு வந்துடுச்சு. சடார்னு செலக்ட் பண்ணிட்டோம். வாசகர்களோட கற்பனைத் திறனை என்னான்னு சொல்றது, ஏதுன்னு சொல்றது... சும்மா பிச்சு உதறிப்புட்டாய்ங்க!

பெஸ்ட் கமெண்ட் எழுதி ரூ.200 பரிசு வாங்கறது சிதம்பரம் சு.மோகன்:

"ம்கூம்... கலர் டீ.வி இவ்வளவு பெருசால்லாம் தரமாட்டாங்க. 14 இன்ச்தானாம்..."

பிரசுரத்துக்குத் தேர்வான கமெண்ட்டுங்க....

"பரிவட்டத்துக்குத்தான் தடை...



திடீர் பரிசுப் போட்டி முடிவு!

இளவட்டத்துக்கு இல்ல...!"


- ஜி.சுந்தரமூர்த்தி, அரியலூர்

"மத்திய, மாநில அரசுகள் நம்மைப்போல இணக்கமாய் இணைந்தே செயல் படட்டும்...!"

- சி. சண்முகம், ஈரோடு

"என்ன அப்படிப் பாக்குறீங்க? நாங்க போடுறது திரிகோணாசனம் இல்ல... த்ரிஷாகோணாசனமாக்கும்!"

- எம்.கே.ஆறுமுகம், மும்பை


Supreme
SUN FLOWER OIL
Naturally healthy
Tasty
Non greasy
Re usable
› 4 side sealed printed laminated pouch
› Anti-leaching › Anti-odour
Supreme
SUNFLOWER OIL
100% Vegetarian
FREE Gift with every pack
Stocks are available without this offer also
First Edible Oil Company to receive ISO 9001: 2000 Certification in South India

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / CC (S) DN / 144 / 06 - 08 * Licensed to post without prepayment under PMG's Licence No. WPP TN / CC (S) DN / 70 / 06 - 08* Registered as a Newspaper in Srilanka.